இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள்: 28

சுடர் 32 | கதிர் 175 | வள்ளுவர் ஆண்டு 2048 | வைகாசி 06 சனிக்கிழமை 20.05.2017

புதிய சேவை அறிமுகம்
பொதிகள் சேவை
Door to Door Service
கனடா Rs 1050/-
லண்டன் Rs 600/-
ParcelLk
இல. 225 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 2224338 / 021 4925024
இல. 25 கந்தசாமி கோவில் வீதி, வவுனியா. 024 4930200

# மீண்டும் துப்பாக்கிச் சூடு பளையில் கடும் பதற்றம்

## பொலிஸ் வாகனத்தை இலக்கு வைத்து மர்ம நபர்கள் பதுங்கித் தாக்குதல்







**பளை, மே 20**

**பளை நகரை அண்டிய கச்சார் வெளியில் ஏ-9 வீதியோரம் நேற்று அதிகாலை பொலிஸ் சுற்றுக்காவல் அணி மீது திடீர் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. பதிலுக்குப் பொலிஸாரும் சுட்டனர். இந்தத் துப்பாக்கி மோதலில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. பொலிஸாரை இலக்கு வைத்தவர்கள் தப்பிச் சென்றுவிட்டனர். இந்தப் பதுங்கிச் சூட்டுச் சம்பவத்தால் அந்தப் பகுதியில் அதிகாலை முதலே பெரும் பதற்றமும் பரபரப்பும் காணப்பட்டது.**

சம்பவத்தைத் தொடர்ந்து அந்த இடம் முழுவதும் பல நூற்றுக்கணக்கான இராணுவத்தினரும் பொலிஸாரும் அதிரடிப்படையினரும் ஆயுதங்களுடன் குவிக்கப்பட்டனர். போர் முடிவடைந்து 8 வருடங்களின் பின்னர் போர்க் காலத்தை நினைவுபடுத்தும் விதத்தில் அது அமைந்திருந்தது. மக்கள் அச்சத்துக்கும் பீதிக்கும் உள்ளாகினர்.

முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தன்று இந்தச்சம்பவம் இடம்பெற்றமை இதன் பின்னணி குறித்த பல்வேறு அரசியல் ஊகங்களையும் ஏற்படுத்தியுள்ளது.

பொலிஸார் தரும் தகவல்கள்:

பளைப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சுற்றுக்காவல் அணியினர் தமது காரில் >> 25





## இராணுவம், பொலிஸ் குவிக்கப்பட்டு தேடுதல்

பளை, மே 20

பச்சிலைப்பள்ளி மேற்குப் புறத்தின் ஒரு பகுதி நேற்று அதிகாலை முதல் இராணுவம் மற்றும் பொலிஸாரால் சுற்றி வளைக்கப்பட்டு கடும் தேடுதலுக்கும் சோதனைக்கும் உட்படுத்தப்பட்டது. கச்சார் வெளிப் பகுதியில் பொலிஸ் சுற்றுக் காவல் அணி மீது துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டுத் தப்பிச் சென்ற தாக்குதலாளிகளைத் தேடியே இந்தத் தேடுதல் நடத்தப்பட்டது.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றத்தைத் தொடர்ந்து பல நூற்றுக்கணக்கான >> 25
















## சொல்லப்படும் கதைகள்

பளை, மே 20

கச்சார் வெளிப் பகுதியில் நேற்று அதிகாலையில் சுற்றுக் காவல் பொலிஸார் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுக்கு என்ன காரணம் என்பது உடனடியாகத் தெரியவரவில்லை என்றாலும் பலவித ஊகங்கள் மக்கள் மத்தியில் பேசப்படுகின்றன. அவை வருமாறு:.

1. இது, கிளிநொச்சியில் தனிச் சிங்கக் >> 25

## தமிழருக்குத் தீர்வு கோரி கொழும்பில் அறப்போர்

*தெற்குச் சிவில் அமைப்புகளின் ஆதரவுடன் கோட்டை ரயில் நிலையம் முன் நடத்த ஏற்பாடு*

கொழும்பு, மே 20

அரசியல் தீர்வு, காணி விடுவிப்பு, தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை உட்பட தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வை வழங்குமாறு அரசை வலியுறுத்தி எதிர்வரும் 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொழும்பில் அறவழிப் போராட்டமொன்று நடைபெறவுள்ளது.

அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் ஏற்பாட்டில் எதிர்வரும் புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்குக் கோட்டை தொடருந்து நிலையத்துக்கு முன்பாக இந்தப் போராட்டம் நடைபெறும். இதற்குத் தெற்கிலுள்ள சிவில் அமைப்புகளும் ஆதரவை வழங்கியுள்ளன.

எனவே, வடக்கு-கிழக்கிலுள்ள சிவில் அமைப்பினர், காணாமற்போனவர்கள் மற்றும் தமிழ் அரசியல் கைதிகளின் >> 25



## புதிய அரசமைப்பை உலகமே எதிர்பார்ப்பு

*மன்னாரில் தெரிவித்தார் ரணில்*

மன்னார், மே 20

“புதிய அரசமைப்பை உருவாக்குமாறு நான் செல்லும் நாடுகளின் தலைவர்கள் வலியுறுத்துகின்றனர். இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி இங்கு வந்த போது அரசமைப்பு உருவாக்கம் குறித்துக் கலந்துரையாடினார். அதனை அரச தலைவரிடம் அவர் அழுத்தமாக வலியுறுத்தினார். வடக்கு >> 04

## இனவாத தேரர்களை கட்டுப்படுத்துங்கள்

*ரணிலிடம் ரிசாத் வலியுறுத்தல்*

கொழும்பு, மே 20

இனவாத பௌத்த மதகுருமார்களில் ஒரு சிலர் சட்டத்தைக் கையிலெடுத்துத் தாங்கள் விரும்பியவாறு செயற்பட்டுக்கொண்டிருப்பதை அரசு >> 25

*காணாமற்போனோரின் உறவுகளின் கவனயீர்ப்பால்*

## மன்னார் மாவட்ட செயலகப் பின் கதவால் ரணில் ஓட்டம்

மன்னார், மே 20

காணமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் போராட்டம் காரணமாக தலைமை அமைச்சர் ரணில் விக்கிரம சிங்க மன்னார் மாவட்டச் செயலகத்தின் பின் வாசலால் வெளியேறி யாழ்ப்பாணத்துக்குப் >> 23

# 2019க்கு முன் வடக்கில் முதலீடு செய்வோருக்கு முழுத் தீர்வை விலக்கு

## யாழ்ப்பாண செயலக மாநாட்டில் தலைமை அமைச்சர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், மே 20

2019ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் வடக்கில் முதலீடு செய்பவர்களுக்கு முழுமையான வரிவிலக்கு வழங்கப்படும். எனவே வடக்கில் முதலீட்டுக்குப் பொருத்தமான இடங்களை அடையாளப்படுத்துமாறு, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுக் கேட்டுக் கொண்டார்.

'பலமிக்கதோர் இலங்கை' பொருளாதார அபிவிருத்தி தொடர்பில் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்று மாலை கலந்துரையாடல் இடம்பெற்றது. தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்களான சாகல ரத்நாயக்க, வஜிர அபேவர்த்தன, சுவாமிநாதன், இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை.சேனாதிராசா, ஈ.சரவணபவன், எம்.ஏ.சுமந்திரன், த.சித்தார்த்தன், சி.சிறிதரன், வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், அரச அதிகாரிகள் இதில் கலந்து கொண்டிருந்தனர்.

இங்கு உரையாற்றிய தலைமை அமைச்சர், "நாட்டின் ஏனைய மாகாணங்களுக்கு இணையாக வடக்கின் பொருளாதாரத்தையும் அபிவிருத்தி செய்ய வேண்டும். இலங்கை முழுவதும் 5 பொருளாதார வலயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. வடக்கு கிழக்குப் பொருளாதார வலயத்துடன் அனுராதபுரம் மற்றும் பொலநறுவை மாவட்டங்கள் இணைக்கப்பட்டுள்ளன" என்று தெரிவித்தார்.

"முதலீடுகளை மேற்கொள்வதற்கு வடக்கில் பொருத்தமான இடங்களை அடையாளப்படுத்த வேண்டும். 2019ஆம் ஆண்டு இறுதிக்குள் முதலிடுபவர்களுக்கு முழுமையான வரிச் சலுகை வழங்கப்படும். 200 சதவீதம் அவர்களுக்கு வரிச்சலுகை வழங்கப்படும். இதனைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்" என்று தலைமை அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

வடக்கில் தொழில்நுட்பத் துறையில் தகுதியானவர்களை அடையாளம் காண்பதற்கு முதலீட்டாளர்கள் சிரமப்படுவதாகவும் ரணில் சுட்டிக்காட்டினார்.

"இலங்கைக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை கிடைத்துள்ளது. ஆடை ஏற்றுமதிக்கு அடுத்ததாக மீன் ஏற்றுமதியே முக்கியமானது. வடக்கு கிழக்கில் மீன் ஏற்றுமதி ஊடாக, ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையின் நன்மையை இந்தப் பிராந்தியமும் பெற்றுக் கொள்ள வேண்டும்" என்றும் தலைமை அமைச்சர் கூறினார்.

இந்தக் கலந்துரையாடலின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், "இங்கே முதலீடு செய்ய வருபவர்கள் அனுமதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு அதிகாரிகள் பின்னால் அலைந்து திரிய வேண்டிய நிலை காணப்படுகின்றது. முதலீட்டாளர்கள் அலைக்கழிக்கப்படுகின்றனர்" என்பதைச் சுட்டிக் காட்டினார். இதனைக் கவனத்தில் எடுப்பதாக தலைமை அமைச்சர் பதில் வழங்கினார்.

அரசியல் தரப்பினருடனான கலந்துரையாடல் முடிவடைந்த பின்னர், அதிகாரிகளுடனான கலந்துரையாடல் நடைபெற்றது. இதற்கு தலைமை அமைச்சரின் செயலர் சமன் எக்கநாயக்கா தலைமை தாங்கினார். 'பலமிக்கதோர் இலங்கை' செயற்றிட்டம் தொடர்பில், தலைமை அமைச்சர் அலுவலகத்தின் மூத்த உதவிச் செயலர் அச்சுதன் விளக்கமளித்தார். (வ-5)

## போர் வீரர்கள் தினத்துக்கு ரூ. 4,800 மட்டுமே செலவு

### வடக்கு ஆளுநர் செயலகம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 20

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தால், பலாலியில் நடத்தப்பட்ட போர் வீரர்கள் தினத்துக்கு 4 ஆயிரத்து 800 ரூபா மாத்திரமே செலவு ஏற்பட்டது என்று, ஆளுநர் செயலகம் தெரிவித்துள்ளது.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தின் ஏற்பாட்டில் பிரமாண்டமான முறையில், பலாலியில் கடந்த 8 ஆம் திகதி போர் வீரர்கள் தினம் நடத்தப்பட்டிருந்தது. இந்த நிகழ்வுக்கு, வடக்கு மாகாண ஆளுநர் செயலகம் மேற்கொண்ட செலவு விவரம் தொடர்பில், தகவலை அறிவதற்கான சட்டத்தின் ஊடாகக் கேட்கப்பட்டிருந்தது.

அதற்குப் பதிலளித்துள்ள ஆளுநர் செயலகத்தின் தகவல் உத்தியோகத்தரான, உதவிச் செயலர் எக்ஸ்.செல்வநாயகம், பலாலியில் நடத்தப்பட்ட போர் வீரர்கள் தினத்துக்காக எமது செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட செலவுகள் மீளளிப்புச் செய்தல் அடிப்படையானதாகும். அழைப்பிதழுக்கான அட்டைக் கொள்வனவுக்கு 4 ஆயிரத்து 800 ரூபா செலவு செய்யப்பட்டது என்றும், அந்தச் செலவு மாத்திரமே ஏற்பட்டது என்றும் தெரிவித்துள்ளார். (த-5)

## மாவில்லு வர்த்தமானியில் விரைவில் அரசு திருத்தம்

### புதிய வர்த்தமானியை வெளியிட அரச தலைவரின் செயலர் இணக்கம்

கொழும்பு, மே 20

1990 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளால் முஸ்லிம்கள் வெளியேற்றப்படுவதற்கு முன்னர் முசலி மற்றும் மன்னார் மாவட்டத்தில் முஸ்லிம்கள் எவ்வாறு வாழ்ந்தார்களோ அந்தப் பிரதேசங்களைத் தவிர்த்து வனப் பாதுகாப்புப் பிரதேச வர்த்தமானியை வெளியிடுவதற்கு அரச தலைவரின் செயலாளர் பி.பி அபேயக்கோன் இணக்கம் தெரிவித்துள்ளார்.

முசலிப் பிரதேசத்தில் மாவில்லு வனப் பாதுகாப்பு வர்த்தமானியால் அந்தப் பிரதேசத்தில் பூர்வீகமாக வாழ்ந்த முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு தொடர்பாக ஆராயும் மாநாடு ஒன்று அரச தலைவரின் செயலாளர் தலைமையில் அரச தலைவர் செயலகத்தில் நடைபெற்றது. இதன்போதே இந்த இணக்கம் வெளியிடப்பட்டது.

முஸ்லிம் இயக்கங்களின் கூட்டமைப்பான முஸ்லிம் கவுன்ஸின் தலைமையில் முஸ்லிம் அமைச்சர்கள், முஸ்லிம் சிவில் இயக்கங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்ட இந்தக் கூட்டத்தில் அரச தலைவர் செயலக அதிகாரிகள், மகாவலி மற்றும் சுற்றாடல் அபிவிருத்தி அமைச்சின் செயலாளர், வனபாதுகாப்புத் திணைக்களப் பணிப்பாளர் ஆகியோரும் பங்கேற்றனர்.

இந்தக் கூட்டத்தில் முசலிப் பிரதேசத்தில் பூர்வீகக் காணிகள் தொடர்பாக மக்கள் கருத்துக்களை அறிந்து அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்கான மூவர் அடங்கிய சுயாதீனக் குழுவொன்றை நியமிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டதாக முஸ்லிம் கவுன்ஸில் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச தலைவருடன் கலந்து ஆராய்ந்து இந்தக் குழுவின் கால எல்லை பற்றி அறிவிப்பதாகவும், இந்தப் பிரச்சினையை இழுத்தடிக்காது பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென அரச தலைவர் தனக்கு தெரிவித்ததாகவும் அரச தலைவரின் செயலாளர் இந்தக் கூட்டத்தில் தெரிவித்தார்.

கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ரிசாத் பதியுதீன், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பைசர் முஸ்தபா, தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி, முஸ்லிம் கவுன்ஸில் தலைவர் என்.எம். அமீன், கலாநிதி ஏ.எஸ் நவ்பர் ஆகியோர் 2017ஆம் ஆண்டு மார்ச் மாதம் வெளியிடப்பட்ட வர்த்தமானியால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் பற்றி எடுத்து விளக்கினர். (த)

## சுற்றுலாத்துறை அபிவிருத்திக்கு வடமராட்சி கிழக்கு பொருத்தமா?

### ரணில் இன்று நேரில் ஆராய்வார்

யாழ்ப்பாணம், மே 20

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தை சூழல் இயைவு சுற்றுலாத்துறைப் பிரதேசமாக அபிவிருத்தி செய்வது தொடர்பில், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க இன்று நேரில் சென்று ஆராயவுள்ளார்.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க 2 நாள் பயணமாக யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்தார். தலைமை அமைச்சரின் வருகை காரணமாக யாழ்ப்பாணத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. தலைமை அமைச்சர் யாழ்ப்பாண மாவட்டச் செயலகக் கூட்டத்தில் பங்குபற்றியிருந்தார். மாவட்டச் செயலகச் சூழலில் போராட்டங்களைக் கட்டுப்படுத்த தண்ணீர் பாய்ச்சியடிக்கும் பொலிஸாரின் வாகனம் நிறுத்தப்பட்டிருந்தது. அத்துடன் தலைமை அமைச்சருக்கு கடும் பாதுகாப்பும் வழங்கப்பட்டிருந்தது. தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க இன்று வடமராட்சி கிழக்குப் பிரதேசத்துக்குச் செல்லவுள்ளார். வடமராட்சி கிழக்கு கடற்கரையோரத்தை அவர் பார்வையிடவுள்ளார். அந்தப் பகுதியை சூழல் இயைவு சுற்றுலாத்துறைப் பிரதேசமாக எவ்வாறு அபிவிருத்தி செய்வது என்பது தொடர்பில் இதன்போது அவர் ஆராயவுள்ளார். (வ-5)

## 1000 பட்டதாரிகளுக்கு வடக்கில் அரச வேலை

### யாழ்ப்பாணம் வந்த ரணில் உறுதி

யாழ்ப்பாணம், மே 20

வடக்கு மாகாணத்தில் ஆயிரம் பட்டதாரிகளுக்கு உடனடியாக வேலை வழங்கப்படும் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்தில் வைத்து நேற்று அறிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் உரையாற்றிய வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா ஆகியோர், வேலைதேடும் பட்டதாரிகளின் போராட்டம் பற்றி எடுத்துக் கூறினர். யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்கு முன்பாகவே பட்டதாரிகள் வேலை கேட்டு போராட்டம் நடத்துவது பற்றிப் பேசப்பட்டது. இதற்குப் பதிலளித்த தலைமை அமைச்சர், பட்டதாரிகள் வேலை கேட்டுப் போராடுவது நாடு முழுவதிலும் நடைபெறுகின்றது என்று குறிப்பிட்டார். அத்துடன், வடக்குப் பட்டதாரிகள் ஆயிரம் பேருக்கு நியமனம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்படும் என்றும் அவர் உறுதியளித்தார். (வ-5)

## பலாலி வானூர்தி நிலையத்தை சீரமைக்க நிதி தேடுகிறது அரசு

யாழ்ப்பாணம், மே 20

பலாலி வானூர்தி நிலையத்தை பிராந்திய வானூர்தி நிலையமாக மாற்றியமைப்பது தொடர்பில், தொழில்நுட்ப மீள் மதிப்பீடு மேற்கொள்ளப்படும் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். அதனை அபிவிருத்தி செய்வதற்கான பொருத்தமான நிதி வழங்குநரைத் தேடிக் கொண்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

பலாலி வானூர்தி நிலையத்தை, பிராந்திய வானூர்தி நிலையமாக மாற்றுவது தொடர்பில் பேசப்பட்டது. வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா ஆகியோர், தற்போதுள்ள காணிக்கு மேலதிகமாக மக்கள் காணியைச் சுவீகரிக்காமல் இதனைப் பிராந்திய வானூர்தி நிலையமாகத் தரம் உயர்த்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர்.

"இந்தியத் தொழில் நுட்பக் குழுவினர் வானூர்தி நிலையத்தை ஆராய்ந்தனர். தற்போதுள்ள ஓடுதளமே, பிராந்திய வானூர்தி நிலையமாக மாற்றுவதற்குப் போதுமானது என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். ஆனால் வான் படையினர், பிராந்திய வானூர்தி நிலையமாக மாற்றுவதற்கு மக்களின் காணிகள் மேலும் தேவை என்று குறிப்பிடுகின்றனர்" என்று தலைமை அமைச்சருக்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளால் எடுத்துரைக்கப்பட்டது.

இதன் பின்னர் பதில் வழங்கிய தலைமை அமைச்சர், "தொழில்நுட்ப மீள் மதிப்பீடு செய்யப்படும். பலாலி வானூர்தி நிலையம் பிராந்திய வானூர்தி நிலையமாக மாற்றப்படும். இதனை அபிவிருத்தி செய்வதற்கு பொருத்தமான நிதி வழங்குநரைத் தேடிக் கொண்டிருக்கின்றோம்" என்றார்.

பலாலி வானூர்தி தளத்தின் அபிவிருத்திப் பணியை இந்தியாவே மேற்கொள்ளும் என்று முன்னர் தகவல்கள் வெளியாகியிருந்தன. (வ-5)

## புதிய பயங்கரவாத சட்டம்: மன்னிப்புச் சபை அதிருப்தி

பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்குப் பதிலாகக் கொண்டு வரப்படவுள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் கைதுகளை ஊக்குவிக்கும் என்று பன்னாட்டு மன்னிப்புச் சபை அதிருப்தி வெளியிட்டுள்ளது.

இந்தச் சட்டமானது குற்றச்சாட்டுக்கள் இன்றி எவரையும் தடுத்து வைக்கப் பொலிஸாருக்கு அதிகாரங்களைக் கொடுக்கும் என்று மன்னிப்புச் சபையின் தென்னாசியப் பணிப்பாளர் பிராஜ் பட்நாயக் குற்றம் சுமத்தியுள்ளார்.

இலங்கையின் போர்க் காலத்தில் பயங்கரவாதத் தடைச்சட்டம் காரணமாகவே பல மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றன. இந்த நிலையில் மீளமைப் புகளை மேற்கொண்டு மேலும் மனித உரிமை மீறல்கள் இடம்பெறுவதைத் தடுக்க, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கிப் பன்னாட்டு நியமங்களுக்கு அமையச் சட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தவேண்டும். எனினும், புதிய அரசு அதனை மாற்றியமைப்பதாகக் கூறிப் பதவிக்கு வந்து இரண்டு வருடங்களாகிவிட்டபோதும் இன்னும் அது நிறைவேற்றப்படவில்லை என்று அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (த-5)

# தொண்டராக பணி செய்தால் நிரந்தர நியமனம் கிடைக்கும் என்று நம்பிக்கை கொள்ளாதீர்

## வடக்கு சுகாதார அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 20

தொண்டர்களாகப் பணியாற்றுவதன் மூலம் எதிர்காலத்தில் நிரந்தர நியமனம் பெற முடியும் என்ற நம்பிக்கையை வளர்த்துக்கொள்ள வேண்டாம். சாதகமான பதில் கிடைக்கப் பெறும் பட்சத்தில் சுகாதாரத் தொண்டர்களுக்கான நிரந்தர நியமனம் தொடர்பாகச் சுகாதார அமைச்சினால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் சி.திருவாகரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது.

பல்வேறு காலப்பகுதியிலும் சுகாதார சேவையின் அவசியம் கருதி எதுவித நியமனமும் வழங்கப்படாத நிலையில் கொடுப்பனவு ஏதும் பெறாது சேவைகளை வழங்கியவர்களே சுகாதாரத் தொண்டர்கள் ஆவர்.

தொண்டர்கள் எவரையும் பணியில் அமர்த்தவேண்டாம் என அறிவுறுத்தல்கள் 29.05.2015, 05.06.2015 ஆகிய திகதிகளில் அமைச்சினால் வழங்கப்பட்டிருந்தன.

இருப்பினும் இவர்கள் அவ்வப்போது ஏற்படும் தேவைகளின் பொருட்டுச் சுகாதார வைத்திய அதிகாரியால் பணிக்கு ஈடுபடுத்தப்பட்டிருக்கக் கூடும். அத்தகைய தொண்டர்கள் தாம் புரிந்த சேவைக்குப் பிரதிபலனாக நிரந்தர நியமனம் ஒன்றை எதிர்பார்ப்பது நியாயமானதாகும். எனினும் இவ்வாறான தொண்டர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கென சுற்றறிக்கை மூலம் அமைச்சுக்கு அதிகாரமளிக்கப்படவில்லை.

29.12.2014 ஆம் திகதி வெளியிடப்பட்ட 25/2014, 25/2014 (I) இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கைகளின் பிரகாரம் தகைமை பெற்றிருந்தவர்கள் ஏற்கனவே தமக்கான நிரந்தர நியமனத்தைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

மேற்படி சுற்றறிக்கையின் பிரகாரம் நிரந்தர நியமனம் வழங்கப்பட முடியாதவர்களே இன்று பல்வேறு மேன்முறையீடுகளை முன்வைத்து போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். மனிதாபிமான அடிப்படையில் இந்தத் தொண்டர்களில் அடிப்படைத் தகைமைகளுடன் நீண்டகாலச் சேவையாற்றியவர்களுக்காவது நிரந்தர நியமனம் வழங்கப்படவேண்டும் என்பது எமது அமைச்சின் நிலைப்பாடாக உள்ளபோதும் ஏற்கனவே சுகாதார சேவை உதவியாளர்கள் என்ற பணி நிலையில் அங்கீகரிக்கப்பட்ட ஆளணிக்கு மேலாக ஊழியர்கள் நியமிக்கப்பட்டுள்ளமையால் அமைச்சு இவர்களது கோரிக்கையை ஏற்றுக் கொள்ள முடியாதுள்ளது.

இருப்பினும் சுகாதாரத் தொண்டர்களது நிரந்தர நியமனம் தொடர்பாக நரம் பல்வேறு மட்டங்களில் கோரிக்கைகளைச் சமர்ப்பித்து நடவடிக்கை மேற்கொண்டவாறே உள்ளோம். இதனடிப்படையில் எமது பரிந்துரைகள் ஆளுநர் ஊடாகவும் நேரடியாகவும் உரிய தரப்பினருக்குச் சமர்ப்பிக்கப்பட்டே உள்ளன.

மேற்படி பரிந்துரைக்கான சாதகமான பதில் கிடைக்கப் பெறும் பட்சத்தில் சுகாதாரத் தொண்டர்களுக்கான நிரந்தர நியமனம் தொடர்பாக இந்த அமைச்சினால் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன் தொண்டர்களாகப் பணியாற்றுவதன் மூலம் எதிர்காலத்தில் நிரந்தர நியமனம் பெற முடியும் என்ற நம்பிக்கையை வளர்த்துக் கொள்ளவேண்டாம் என்றுள்ளது. (த-4)

*13.6 கோடி ரூபா துஷ்பிரயோகம்*

# பீ.பி. ஜயசுந்தர உட்பட நால்வருக்கு அழைப்பு

கொழும்பு, மே 20

பெரும் ஊழல், மோசடி மற்றும் துஷ்பிரயோகம் தொடர்பில் விசாரணை செய்துவரும் அரசதலைவர் ஆணைக் குழு, திறைசேரி யின் முன்னாள் செயலாளர் கலாநிதி பீ.பி.ஜயசுந்தர உட்பட நால்வரை விசாரணைக்கு அழைத்துள்ளது.

கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சின் செயலாளர், திறைசேரியின் தற்போதைய பிரதிச் செயலாளர், லங்கா சதொச தலைவர் ஆகியோரே ஏனைய மூவராவர்.

உள்நாட்டு பெரிய வெங்காயத்தின் கொள்வனவு விலையை கிலோவொன்றுக்கு 60 ரூபாவென அமைச்சரவை நிர்ணயித்திருந்த போது இவர்கள் நால்வரும் கிலோவொன்றை 90 ரூபாவுக்குக் கொள்வனவு செய்து அரசுக்கு 13.6 கோடி ரூபா நட்டம் ஏற்படுத்தியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

2014 இல் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவுக்கு ஆதரவு தேடுவதற்காக 90 ரூபா விலையில் 45 இலட்சம் கிலோ பெரிய வெங்காயத்தை இவர்கள் கொள்வனவு செய்துள்ளனர் என அந்தக் குற்றச்சாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் பேச்சாளர் ஒருவர் கூறினார். (த-4)

# என்னை வீழ்த்துவதற்கே வந்தது பொதுபலசேனா

## முஸ்லிம் பிரதிநிதிகளிடம் மகிந்த விசனம்

கொழும்பு, மே 20

எனது ஆட்சியைக் கவிழ்க்கவே பொதுபலசேனா களமிறக்கப்பட்டது. மீண்டும் அவர்களது வருகை இவ்வாட்சியாளர்களின் தேவை ஒன்றை நிறைவு செய்வதற்காகவே இருக்கும் என்பதில் எனக்குச் சிறிதும் சந்தேகமில்லை.

இவ்வாறு தெரிவித்தார் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச.

முஸ்லிம்களுக்கு எதிராகச் செயற்பட்டுவரும் பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு எதிராகக் கூட்டு எதிரணியிலுள்ள முஸ்லிம் பிரதிநிதிகள் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதன்போதே மகிந்த மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கையிலுள்ள முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் முன்னாள் அரச தலைவரிடம் எடுத்துரைக்கப்பட்டது என கூட்டு எதிரணியின் தமிழ் ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது அங்கு கருத்து வெளியிட்டுள்ள முஸ்லிம் பிரதிநிதி அப்துல் சத்தார்,

தற்போது ஞானசார தேரரின் செயற்பாடுகள் அத்துமீறிச் சென்று கொண்டிருக்கின்றன. இலங்கையில் கடந்த மூன்று நாள்களுக்குள் முஸ்லிம்களுக்கு எதிரான ஏழுக்கும் மேற்பட்ட சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன என மகிந்தவிடம் குறிப்பிட்டுள்ளார்.

'இந்தச் செய்திகளை நானும் ஊடகங்களில் அவதானித்து வருகிறேன். முஸ்லிம்கள் அறியாதவாறு கூட பல விடயங்கள் மறைக்கப்பட்டுவிட்டன. எங்கள் காலத்தில் சிறிய விடயங்களையும் ஊதிப் பெருப்பிக்கவென்றே சிலருக்குக் கொந்தராத்து வழங்கப்பட்டது போன்று நாமும் வழங்கியிருந்தால் அவைகள் வெளிச்சத்துக்கு வந்திருக்கும்.

ஞானசாரதேரர் சிங்கள மக்களிடத்தில் முஸ்லிம்கள் மீதான நச்சுக் கருத்துக்களை விதைத்து வருகிறார். இதை நிறுத்தாதுபோனால் இலங்கை நாடு மிகப் பெரும் விலை கொடுக்க நேரிடலாம். அதை செய்ய வேண்டியது நாம் அல்ல அது அரசின் வேலை அதிகாரத்தில் இருப்பவர்களின் வேலை ' என இதற்கு மகிந்த பதிலளித்துள்ளார்.

இன்று இலங்கை அரசு வடக்குகிழக்கு இணைப்பு, அரசமைப்பு மாற்ற முயற்சிகளைச் செய்து வருகிறது. அவற்றுக்கு முஸ்லிம்களே தடையாக உள்ளனர். இவர்களைக் களமிறக்கி முஸ்லிம்களை அச்சமடையச் செய்து தங்களது விடயங்களைச் சாதிப்பது அரசின் நோக்கமாக இருக்கலாம் என்று பேசப்படுகிறது ' எனப் பாணந்துறை பிரதேச சபை முன்னாள் தலைவர் மகிந்தவிடம் வினவினார்.

அதற்கு பதில் அளித்த மகிந்த, 'இருக்கலாம்.. இருக்கலாம். இவற்றில் ஏதாவது ஒன்றாகத் தான் இருக்கவேண்டும். இவற்றைவிட பெரிய திட்டங்களும் இருக்கலாம். அன்று எனது ஆட்சியைக் கவிழ்க்கவே பொதுபலசேனா களமிறக்கப்பட்டது. மீண்டும் அவர்களது வருகை இவ்வாட்சியாளர்களின் தேவை ஒன்றை நிறைவு செய்வதற்காகவே இருக்கும் என்பதில் எனக்கு சிறிதும் சந்தேகமில்லை என பதிலளித்தார். (த)

# திங்களன்று முழு நாளும் மருத்துவர் போராட்டம்

கொழும்பு, மே 20

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட் கிழமை முன்னெடுக்கவுள்ள அரை நாள் பணிப்புறக்கணிப்பு ஒரு நாள் பணிப்புறக்கணிப்பாக மாற்றப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள் ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செயற்குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக மருத்துவ அதிகாரிகள் சங்கத்தைச் சேர்ந்த மருத்துவர் நலிந்த ஹேரத் தெரிவித்தார்.

அனைத்துப் பல்கலைக்கழக மணவர் ஒன்றியத்தின் சைட்டம் எதிர்ப்பு பேரணியின் மீது பொலிஸார் கண்ணீர்ப் புகைத் தாக்குதல் மேற்கொண்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்வரும் திங்கட்கிழமை, அரை நாள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக அந்தச் சங்கம் முன்னர் அறிவித்திருந்தது. இந்த நிலையில் அது முழுநாள் போராட்டமாக மாற்றப்பட்டதாகச் சங்கம் நேற்றுத் தெரிவித்தது. (த-4)

*நினைவுக்கற்கள் விவகாரம்*

# அருட்தந்தை எழில்ரஜனிடம் நேற்றும் தீவிர விசாரணை

வவுனியா, மே 20

முள்ளிவாய்க்கால் கிழக்கு சின்னப்பர் தேவாலயத்தில் போரில் இறந்த 500 பொது மக்கள் நினைவாக நினைவுக் கற்களை பதிக்க ஏற்பாடு செய்த சிவில் சமூக செயற்பாட்டாளர் அருட்தந்தை எழில்ரஜன் மீது 3 மணிநேர கடும் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா உதவி பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்துக்கு நேற்று வருகை தருமாறு அருட்தந்தை எழில்ரஜனுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அங்கு சென்ற போதே அவரிடம் 3 மணிநேரம் விசாரணை இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

"நினைவுக் கற்கள் யாருடையவை? அவர்கள் எவ்வாறு இறந்தார்கள்? அதில் விடுதலைப்புலிகளின் பெயர்கள் இருந்தனவா? உள்ளிட்ட விடயங்களை அருட்தந்தையிடம் பொலிஸார் துருவித் துருவிக் கேட்டனர்" என்று தெரிவிக்கப்பட்டது. நினைவுகற்களில் பெயர்களை பொறித்த சிற்பாச்சாரியாரையும் அழைத்து பொலிஸார் விசாரணை களை மேற்கொண்டனர் எனவும் கூறப்பட்டது.

இறுதிப் போரில் கொல்லப்பட்டவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நேற்று முன்தினம் கடைப்பிடிக்கப்படவிருந்த நிலையில், முள்ளிவாய்க்கால் கிழக்கு சின்னப்பர் தேவாலயத்துக்கு அண்மையாக உயிர்



நீத்தவர்களுடைய பெயர்கள் பொறிக்கப்பட்ட நினைவுக்கற்களை வைத்து அஞ்சலி நிகழ்வுகள் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

நினைவுக்கற்களில் மக்களுடைய பெயர்களும் பொறிக்கப்பட்டன.. இந்த நிலையில் கடந்த 16ஆம் திகதி இரவு 8 மணிக்கு முல்லைத்தீவு பொலிஸாரால் அருட்தந்தை எழில்ரஜன் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். விசாரணையின் பின் இரவு அவர் விடுவிக்கப்பட்டார். எனினும் நினைவுக்கற்களை நடுகை செய்வதற்கும் அந்த இடத்தில் அஞ்சலிப்பதற்கும் முல்லைத்தீவு நீதிமன்றம் ஊடாக பொலிஸார் தடை உத்தரவைப் பெற்றிருந்தனர். (வ-21)

இணுவில் அருள்மிகு
ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார்
திருக்கோயில்
வருடாந்த மஹோற்சவம் - 2017



இரண்டாம் [கைலாசவாகனத்] திருவிழா
இன்று (20.05.2017) சனிக்கிழமை
முற்பகல் 11.15 மணி
சர்ப்பவாகனங்களில் சுவாமி வீதியுலா
மாலை 7.00 மணி
கைலாசவாகனத் திருவிழா

# பாரவூர்தி – மோ.சைக்கிள் விபத்தில் முதியவர் சாவு

*கைதடி - கோப்பாய் வீதியில் பரிதாபம்*

யாழ்ப்பாணம், மே 19

கோப்பாய்-கைதடி வீதியிலுள்ள இராணுவ முகாம் முன்பாகநேற்று இடம்பெற்ற விபத்தில் முதியவர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தென்னிலங்கையைச் சேர்ந்த தனியார் நிறுவனம் ஒன்றின் பாரவூர்தியும் மோட்டார் சைக்கிளும் மோதியே விபத்து இடம்பெற்றது. மோட்டார் சைக்கிளில் பயணித்த வல்வெட்டித்துறை யைச் சேர்ந்த சபாபதிப்பிள்ளை இரத்தின கோபால் (வயது-67) என்ற முதியவரே உயிரிழந்தார்.

"விபத்து இடம்பெற்றதையடுத்து முகாமிலிருந்த இராணுவத்தினர் அனைவரும் கைதடி கோப்பாய் வீதியின் இரு பக்கத்திலும் குவிக்கப்பட்டு போக்குவரத்து முற்றாகத் தடை செய்யுப்பட்டது. செய்தி சேகரிக்க முயன்ற செய்தியாளர்களுக்கும் இராணுவத்தினர் அனுமதி மறுத்தனர். அடையாள அட்டையைக் காண்பித்த நிலையிலும் மேல் அதிகாரியின் உத்தரவின் பின்பே அனுமதிக்கப்படலாம் என்று அவர்களால் நேரம் கடத்தப்பட்டது. எனினும் உடலம் ஏற்றப்படுவதனால் இனியும் பொறுமைகாக்க முடியாது என செய்தியாளர்கள் கேட்டுக்கொண்டதையடுத்தே அவர்கள் செய்தி சேகரிக்க அனுமதிக்கப்பட்டனர்" என்று எமது செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் உடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. மேலதிக விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(வ-101-106)

# பொறுப்புக்கூறல் பொறிமுறைக்கு வெளிநாட்டு நீதிபதிகள் அவசியம்

## இலங்கையிடம் கனடா மீள வலியுறுத்தல்

கொழும்பு, மே 20

பன்னாட்டு அல்லது பொதுநலவாய நாடுகளின் நீதிபதிகள், விசாரணையாளர்கள், சட்டத்தரணிகளை உள்ளடக்கிய பொறுப்புக் கூறும் செயல்முறையை இலங்கை அரசு உருவாக்கவேண்டும் என்று கனேடியத் தலைமை அமைச்சர் ஜஸ்டின் ரூடோ தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிப் போரின் 8ஆவது ஆண்டை நினைவு கூர்ந்து, கனேடியத் தலைமை அமைச்சர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு கூறப்பட் டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையின் இறுதிப்போரின் எட்டாவது வருட நிறைவை நாம் நினைவு கூருகின்றோம்.

போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், அவர்களின் குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிக்கின்ற அதேவேளையில், கடந்த 26 வருட போரில் இழந்த உயிர்களின் மதிப்பை வலியுறுத்தி அவர்களை நினைவு கொள்வோம்.

எமக்கு ஏற்பட்ட பேரதிர்ச்சியையும், இழப்புக்களையும் நினைவுகூரும் இந்த வேளையில், நாம் போரின் தாக்கத்திற்கு உள்ளானவர்களின் போர் வடுக்களை ஆற்றுவதற்கு உதவுவதுடன், முரண்பாடுகளை நீக்கி நீண்டகால சமாதானத்தை நாட்டிலே உருவாக்குவதற்காகத் தொடர்ந்தும் உழைக்கவேண்டும்.

போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நம்பிக்கையையும், நம்பகத்தன்மையும் வழங்கக்கூடிய பொறுப்புக்கூறும் செயல்முறையை இலங்கை அரசு உருவாக்கவேண்டும் என்பதை நான் மீண்டும் வலியுறுத்திக் கூறுகின்றேன்.

இதற்கு ஏதுவாக பன்னாட்டு, பொதுநலவாய நாடுகளின் விசாரணையாளர்கள், சட்டத்தரணிகள் மற்றும் நீதிபதிகள் ஆகியோரின் பங்களிப்பை உறுதிப்படுத்துவதன் மூலம் இலங்கை அரசு தனது சர்வதேசக் கடப்பாட்டை நிறைவேற்ற வேண்டும்.

கனேடியத் தமிழர்களுக்கு என் ஆழ்ந்த அனுதாபத்தையும் ஆதரவையும் தெரிவித்துக்கொள்வதுடன், எமது கூட்டாட்சியின் 150 ஆவது வருடத்தை நிறைவு செய்கின்ற வேளையில், தமது துயரங்களைத் தாண்டி கனேடியத் தேசத்தின் வளர்ச்சிக்குத் தமிழ் கனேடியர்கள் வழங்கிய பங்களிப்புகளை நாம் அங்கீகரிக்கின்றோம் என்றுள்ளது.

(த-5)

# தீவிரவாதத்தை மீண்டும் ஏற்படுத்த சிவாஜி முயற்சி

*சுதந்திரக் கட்சியின் இளைஞர் அணி சாடல்*

கொழும்பு, மே 20

வாக்குகளை அதிகரித்துக் கொள்ளவும் பொதுமக்களின் மத்தியில் செல்வாக்கைப் பெருக்கிக் கொள்வதற்காகவும்இனவாதத்தைக் கையில் எடுத்துள்ளார் வடக்கு மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம். இல்லாதொழிக்கப்பட்டுள்ளதீவிரவாதத்தைமீண் டும் ஏற்படுத்தமக்கள் மத்தியில் அது தொடர்பிலான சிந்தனையை தோற்றுவிக்க அவர் முயற்சிக்கிறார்.

இவ்வாறு சாடியுள்ளது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் இளைஞர் அணி.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் இளைஞர் அணியின் தலைவர் சாந்த பண்டார இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

புலம்பெயர் விடுதலைப் புலி ஆதரவாளர்களுக்கு இன்று செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாமற்போயுள்ளது. அப்பாவி மக்களையும், தனிநாட்டுக் கோரிக்கைகையையும், இனவாதத்தையும் பாவித்து வருமானத்தைப் பெருக்கிப் பிழைப்பு நடத்தியவர்கள் இந்த் நாட்டிலும் நாட்டிற்கு வெளியிலும் இன்றும் இருக்கின்றார்கள். மக்கள் மத்தியில் மீண்டும் இனவாதச் சிந்தனையைத் தூண்டி நிதி திரட்டும் செயற்பாடுகளே முன்னெடுக்கப்படுகின்றன. இனவாதத்தைத் தூண்டுவதை விடுத்து பொது மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் தலைமை அமைச்சர், அரச தலைவர் மற்றும் அரசுடன் பேச்சு நடத்துமாறு நாம் சிவாஜிலிங்கத்திடம் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கத்தின் செயற்பாடுகளை நாங்கள் விமர்சிப்பதோடு வன்மையாகக் கண்டிக்கின்றோம். அவர் வடக்கு மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் பேசுவதில்லை. அபிவிருத்தி தொடர்பில் பேசுவதில்லை. வடக்கு முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் படித்த மனிதர். நாட்டின் பிரச்சினைகள் தொடர்பில் நன்கு அறிவார். இலவசக் கல்வியூடாகப் படித்து முன்னேறியவர் என்ற அடிப்படையில் அவருக்கு நாடு தொடர்பில் கரிசனை வேண்டும். பொறுப்புடன் செயற்பட வேண்டியது அவரது கடமை.

நாட்டில் மீண்டும் தேவையற்ற பிரச்சினைகள் தோன்றாமலிருக்கவும், அமைதியைப் பாதுகாத்துக்கொள்ளவும் தெற்கில் உள்ள தலைவர்களுக்கு காணப்படும் பொறுப்பு வடக்கில் உள்ள தலைவர்களுக்கும் காணப்படுகின்றது என்பதை வலியுறுத்துகின்றோம். நல்லிணக்கம் தொடர்பில் தெற்கில் உள்ள தலைவர்களுக்கு உள்ள அக்கறை வடக்கில் உள்ள தலைவர்களுக்கும் வர வேண்டியது அவசியம்என்றார். (த-4)

# ஐ.தே.க. அமைச்சர்களில் கைவைக்கவேண்டாம்

## மைத்திரியிடம் ரணில் காட்டம்

கொழும்பு, மே 20

அமைச்சரவை மாற்றம் பற்றி பல்வேறு ஊகங்களும் சர்ச்சைகளும் எழுந்திருக்கும் நிலையில், ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர்களை மாற்ற முயலவேண்டாமென அந்தக் கட்சியின் தலைவரும் தலைமை அமைச் சருமான ரணில் விக்கிரமசிங்க அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும், முன்னாள் அரச தலைவர் சந்திரிகா குமாரதுங்கவுக்கும் காட்டமாகத் தெரிவித்துள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

அமைச்சரவையில் மாற்றமொன்றைச்செய்யவேண்டுமானால் அது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்களிடையே மாத்திரமே செய்யப்படவேண்டும் எனவும், ஐக்கிய தேசியக் கட்சி அமைச் சர்கள் மீது கை வைக்க அனு மதிக்கமாட்டோம் எனவும் ரணில் தெரிவித்துள்ளார். (த-4)

## புதிய...

மாகாண முதலமைச்சர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவருடன் கலந்துரையாடியுள்ளோம். எனவே அடிப்படை விடயங் களை ஆராய்ந்து ஒரு சில மாதங்களில் புதிய அரசமைப்புத் தொடர்பான முழுமையான அறிக்கையை வெளியிடுவோம்"

இவ்வாறு மன்னாரில் நேற்றுத் தெரிவித்தார் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க. மன்னார் மாவட்டச் செயலகத்துக்கென புதிதாக அமைக்கப்பட்ட 4 மாடிக் கட்டடத்தொகுதி மன்னாரில் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. அதில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

போரால் சேதமடைந்த மற்றும் பாதிக்கப்பட்ட மன்னார் மாவட்டத்தை முன்னேற்றுவதற்காக மாகாண சபை, கொழும்பு அரசு என்று பார்க்காது 2 தரப்புகளும் இணைந்து பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம்.

### சிறப்பு நாள்

மன்னார் மாவட்டத்துக்கு இன்று (நேற்று) ஒரு சிறப்பு நாள். போரில் படையினர் மற்றும் பொது மக்கள் என ஆயிரக்கணக்கானோரின் கொல்லப்பட்டனர் என்பதனை நாங்கள் நினைவு கூரவேண்டும். இரு தரப்பில் இருந்தும் போரில் ஈடுபட்டவர்கள் உயிரிழந்தார்கள். போரால் பாதிக்கப்பட்டவர்கள் வெளிநாட்டவர்கள் அல்ல. அவர்கள் இலங்யைர்களே. போரால் அப்பாவிப் பொதுமக்கள் அதிகளவில் உயிரிழக்க நேர்ந்துள்ளது.

1983ஆம் ஆண்டு தொடக்கம் பல ஆயிரக்கணக்கான மக்கள் இவ்வாறான இழப்புக்களைச் சந்திக்க நேர்ந்துள்ளது. அவர்களுக்கு நன்மையளிக்கும் கருமங்களில் நாங்கள் ஈடுபடுவோம். ஆகவே உயிரிழந்தவர்களை நினைவு கூரவேண்டிய நாள் இன்று. அவர்களைப் பற்றிச் சிந்திக்கும் போது எங்களுக்கும் ஒன்று நினைவுக்கு வருகின்றது.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இருந்த இளையோருக்கு எந்தவிதமான கட்டுப்பாடுகளும் விதிக்கப்படவில்லை. வேறு வழிகளும் அவர்களுக்கு தெரியவில்லை. ஆகவே அவர்களையும் நாங்கள் இந்தச் சமூகத்தோடு இணைத்துக்கொண்டு, அவர்களை ஒரு பொதுமகனாக இந்தச் சமூகத்தில் ஏற்றுக்கொண்டு அவர்களுக்கான கௌரவத்தை வழங்க ஒத்துழைக்க வேண்டும். அதற்கு அவகாசத்தை எமக்கு வழங்க வேண்டும்.

### மீளவும் போர் ஏற்படக்கூடாது

நாட்டில் மீண்டும் ஒரு போர் இடம் பெறக்கூடாது. அதற்கான வழி வகைகளை நாம் மேற்கொள்ளக்கூடாது. நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டும். அரசியல் ரீதியில் தீர்வு ஒன்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் எங்களுக்கு தோன்றுகின்றது.

### வடக்கில் அபிவிருத்தி

மன்னார் மாவட்டம் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். மன்னாரில் அபிவிருத்திப் பணிகளை முழுமைப்படுத்துவதைப் போன்றே யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, தம்புள்ளை இடையேயான நெடுஞ்சாலையை அமைப்பதற்கான திட்டமும் முன்னெடுக்கப்பட்டுள்ளது. அதேபோன்று வடக்கு மாகாணத்தில் வீடமைப்புத் திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன. வடக்கு மாகாணத்தில் கைத்தொழில் துறையை முன்னேற்றும் நடவடிக்கைகளுக்கு சிறப்பு சலுகைகளை வழங்கத் தீர்மானித்துள்ளோம்.

வடக்கு மாகாணத்தில் சுற்றுலா மற்றும் மீன்பிடித் துறையை விருத்திசெய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பான கலந்துரையாடல்கள் ஒரு சில மாதங்களில் ஆரம்பிக்கப் படும்.

### காணாமற்போனோர் விவகாரம்

போரில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

### புதிய அரசமைப்பு

புதிய அரசமைப்பை உருவாக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நான் சென்ற அதிகமான நாடுகளின் தலைவர்கள் வலியுறுத்தினார்கள். யப்பான் தலைமை அமைச்சர் இந்த விடயத்தை வலியுறுத்தினார். இந்தியத் தலைமை அமைச்சர் மோடி இலங்கைக்கு வந்தபோதும் புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பாகக் கலந்துரையர்டினார். அவர் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடமும் இந்த விடயத்தை அழுத்தமாக வலியுறுத்தினார்.

புதிய அரசமைப்புத் தொடர்பில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனுடனும், எதிர்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனுடனும் கலந்துரையாடப்பட்டுள்ளது. மிக விரைவாக ஒரு தீர்மானத்துக்கு வர வேண்டும் என்று அவர்களால் வலியுறுத்தப்பட்டது. ஆகவே இந்த விடயம் தொடர்பில் அடிப்படை விடயங்கள் ஆராயப்பட்டு ஒரு சில மாதங்களில் முழுமையான அறிக்கை ஒன்றை வெளியிடவுள்ளோம்.

புதிய அரசமைப்பு உருவாக்கும் பணிகளை நாங்கள் இழுத்தடித்துக்கொண்டு செல்ல முடியாது. இனவாதம்,மதவாதம் என்று கதைத்துக்கொண்டு இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது. இந்த நாட்டில் பிளவை ஏற்படுத்துகின்ற விடயங்களை கலந்துரையாட முடியாது.

நாங்கள் அனைவரும் இந்த விடயத்தில் ஒருமித்துக் கலந்துரையாடி முடிவுகளை எடுக்க வேண்டும். சிறந்த நல்லிணக்கம் உள்ள நிலைத்து நீடிக்கக் கூடிய அமைதிக்கான ஒரு தீர்வையே பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர்.

மக்களுக்கு பொறுப்புக்கூறக்கூடிய அவர்களுக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுக்கும் வகையில் அரசு ஒன்றை ஏற்படுத்த வேண்டும். செயற்பாடு ரீதியாக நாடாளுமன்றம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும்.

### மன்னார் அபிவிருத்தியில் எம்.பிக்கள் முழு அக்கறை

மன்னார் மாவட்டத்தின் அபிவிருத்திகள் மற்றும் குறைபாடுகள் தொடர்பாக நாடாளுமன்ற குழுக்களின் பிரதி அவைத்தலைவர் செல்வம் அடைக்கலநாதன், நாடாளுமன்ற உறுப்பினர்களான சாள்ஸ் நிர்மலநாதன்,கே.கே. மஸ்தான் ஆகியோர் நாடாளுமன்றத்தில் என்னைச் சந்திக்கின்ற போதும் தொடர்ந்தும் தொந்தரவு கொடுத்து வருகிறார்கள்.

இங்கு வருதை தருமாறு அமைச்சர் ரிசாத் பதியுதீன் வேண்டுகோள் விடுத்திருந்தார். மாவட்டத்தின் ஒருங்கிணைப்புக் குழுவின் கோரிக்கைகள் அடங்கிய விண்ணப்பம் எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ளது.

அதற்கமைவாக நிதி ஒதுக்கீடுகளை மாவட்டத்துக்கு வழங்குவதற்கும், மாகாண சபையூடாக நிதித் திட்டங்களை வழங்குவதற்கும் அவகாசத்தை நாங்கள் கேட்டுள்ளோம் - என்றார்.

இந்த நிகழ்வில் அமைச்சர்களான வஜீர அபேவர்த்தன, ரிசாத் பதியுதீன், டி.எம்.[illegible] நாதன், சாகல ரத்னாயக்க, நாடாளுமன்றக் குழுக்களின் பிரதி அவைத் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், நாடாளுமன்ற உ[illegible] பினர்களான சாள்ஸ் நிர்மலநாதன்,கே.கே. மஸ்தான், வடக்கு மாகாண அமைச்சர் பா. டெனீஸ்வரன் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

(வ-4, 56)

## யாழ்ப்பாணம் – காரை. இடையே விரைவு தபால் சேவை ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 20
யாழ்ப்பாணத்துக்கும் காரைநகருக்கும் இடையே யான விரைவுத் தபால் சேவை நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது. தபாலக வாகனம் மூலம் இந்தத் தபால் சேவை தினமும் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

"யாழ்ப்பாண தலைமை தபாலகத்துக்கும் சங்கானை, சுழிபுரம், வட்டுக் கோட்டை, மானிப்பாய், அளவெட்டி, பண்டத்தரிப்பு, காரைநகர் ஆகிய தபாலகங்களுக்கும் இடையே இந்தத் தபால் சேவை தினமும் துரித கதியில் இடம்பெறும். குறித்த தபாலகங்களில் சேகரிக்கப்படும் தபால்கள் யாவும் இந்த வாகனம் மூலம் காரைநகருக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையே தினமும் துரிதமாக அனுப்பி வைக்கப்படும்" என்று தலைமைத் தபாலகம் தெரிவித்தது.

இதற்கு முன்னர் காரைநகருக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையேயான தபால் சேவைகள் யாவும் இலங்கைப் போக்குவரத்து சபை பேருந்து மூலமே இடம்பெற்றன. (வ-17)

# 74 நாள்களையும் கடந்தது போராட்டம்

### காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் காத்திருப்பு

முல்லைத்தீவு, மே 20
முல்லைத்தீவு மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்ட வர்களின் உறவினர்கள் முன்னெடுக்கும் தொடர் அமைதி வழிப்போராட்டம் நேற்று 74 ஆவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டது.

நேற்றைய போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், காணாமல் ஆக்கப்பட்ட தங்களது உறவினர்களின் பெயர்களை அரசமர இலையில் எழுதி, அதனைப் போராட்டம் நடைபெறும் இடத்தில் தொங்கவிட்டனர்.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்கு முன்னால் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், தங்களுக்கு நியாயமான பதில் கிடைக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து தங்களது போராட்டத்தை அமைதி வழியில் முன்னெடுத்து வருகின்றனர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் மன்னார் மாவட்ட மாதர் அபிவிருத்தி ஒன்றிய உறுப்பினர்கள் நேற்று நேரில் சென்று தமது ஆதரவைத் தெரிவித்தனர்.



அத்துடன் துணியால் செய்யப்பட்ட அரசமர இலையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பெயர், எந்த இடத்தில் வைத்துக் காணாமல் ஆக்கப்பட்டார், அவரைத் தற்போது தேடிக்கொண்டு இருக்கும் உறவினர் பெயர் போன்றவற்றை எழுதி அதனைப் போராட்டம் நடத்திவரும் தகரக்கொட்டகையில் தொங்க விட்டனர். "தர்மம் சார்ந்த கருத்துக்களை வெளிப்படுத்தும் பௌத்த மதத்தை பின்பற்றும் இனத்த வரால், எம்மீது இழைக்கப்பட்ட அநீதியை வெளிப் படுத்தும் போது, இதனை செய்தவர்கள் நிச்சயமாக வெட்கப்பட வேண்டும்" என்று மன்னார் மாவட்ட மாதர் ஒன்றிய உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். (ஐ-7)

## கட்டாக்காலி கால்நடைகளைப் பிடித்து மீளளிக்கும் தண்டப் பணம் அதிகரிப்பு

*யாழ்ப்பாண மாநகர சபை அறிவிப்பு*

யாழ்ப்பாணம், மே 20
கட்டாக்காலி கால்நடைகளை மீளப் பெறுவதற்கு அறவிடப்படும் தண்டப் பணத் தொகையை யாழ்ப்பாண மாநகர சபை நிர்வாகம் அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

தண்டப் பணத் தொகை அதிகரிக்கப்பட்ட பின்னர் யாழ்ப்பாணம் மாநகரில் கட்டாக்காலிகளாக நடமாடும் கால்நடைகளைப் பிடிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் கூறப்பட்டது.

யாழ்ப்பாணம் மாநகர சபையால் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கட்டாக்காலியாக நடமாடும் கால்நடைகள் பிடிக்கப்படுகின்றன. அவற்றை உரிமையாளர்கள் தண்டப் பணத்தைச் செலுத்தியே மீளப் பெற்றுச் செல்கின்றனர். திரும்பத் திரும்ப இந்தக் கால்நடைகளை உரிமையாளர்கள் மேய்ச்சலுக்காக அவிட்டு விடுகின்றனர்.

கட்டாக்காலிக் கால்நடைகள் யாழ்ப்பாண நகரில் நடமாடுவதால் போக்குவரத்துக்கு இடைஞ்சல் ஏற்படுவதோடு மக்களும் பல்வேறு அசௌகரியங்களையும் எதிர்கொள்கின்றனர்.

இதன் காரணத்தால் இந்தக் கால்நடைகளைப் பிடிப்பதற்கு முன்பாக அவற்றை மீள உரிமையாளரிடம் வழங்குவதற்கான அறவிடப்படும் தண்டப் பணத் தொகையை அதிகரிப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன" என்று யாழ்ப்பாண மாநகர ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார். (வ-17)

## இடர் நிறை காலத்து உடனுறை உதவி விழா திறந்த பல்கலையில்

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் இடர் நிறை காலத்து உடனுறை உதவி மகிழ் விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் யாழ்ப்பாணப் பிராந்திய அலுவலகத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. யாழ்ப்பாணப் பிராந்திய உதவிப் பணிப்பாளர் கி.கந்தவேள் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக நுகேகொட திறந்த பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் பக்கீர் காதர் மொகிதீன் பக்கீர் ஜபார், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஓய்வுநிலை பேராசிரியர் மா.சின்னத்தம்பி ஆகியோர் கலந்துகொள்வர். (வ-8)

## சரசாலை வாள்வெட்டுக் கும்பலை கைது செய்ய நீதிமன்று உத்தரவு

சாவகச்சேரி, மே 20
சரசாலை, கனகன்புளியடிச் சந்தியில் உள்ள உணவகத்துக்குள் அத்துமீறி நுழைந்து அதன் உரிமையாளர் மற்றும் உணவு உண்டவர்கள் உட்பட 3 பேரை கோடரியால் வெட்டிக் காயப்படுத்திய கும்பலைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு சாவகச்சேரி நீதிமன்ற பதில் நீதிவான் செ.கணபதிப் பிள்ளை பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

கனகன்புளியடிச் சந்தியில் உள்ள உணவகத்துக்குள் கடந்த 7ஆம் திகதி அத்துமீறி நுழைந்த 3 பேர் உணவகத்தின் உரிமையாளரையும் உணவை உண்ட இருவரையும் கோடரியால் வெட்டிக் காயப்படுத்தினர். சம்பவம் தொடர்பாக பொலிஸார் சாவகச்சேரி நீதிவான் மன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

வழக்கை விசாரித்த பதில் நீதிவான், கோடரி வெட்டுடன் தொடர்புடைய மூவரையும் கைதுசெய்து மன்றில் முற்படுத்துமாறு உத்தரவிட்டார். இந்தச் சம்பவத்தில் கைதடி நுணாவிலைச் சேர்ந்த வேணுகோபால் சுகன்யன் (வயது -22) நாகசாமி நந்தன் (வயது-24) மட்டுவில் சந்திரபுரத்தைச் சேர்ந்த சிவபாலன் சிவலக்ஷன் (வயது-31) ஆகியோரே காயமடைந்தனர். (வ-9)

## பகவத்கீதை வாராந்த விளக்கவுரை

யாழ்ப்பாணம், மே 20
யாழ்ப்பாணம் சின்மயா மிஷனில் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமைகளிலும் காலை 7.45 மணி முதல் 8.45 மணி வரை சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியாரால் ஸ்ரீமத் பகவத்கீதை வாராந்த விளக்கவுரை நடாத்தப்பட்டு வருகிறது.

இதில் நாளை ஞாயிற்றுக்கிழமை, ஸ்ரீமத் பகவத்கீதையின் ஏழாம் அத்தியாயமான "ஞான விக்ஞான யோகம்" பகுதியில் "யார் இறைவனிடம் சரணடைவதில்லை?" என்ற தலைப்பில் விரிவுரை நடைபெற இருக்கின்றது.

ஆர்வலர்கள் அனைவரும் இதில் கலந்து பயன் பெறுமாறு சின்மயா மிஷன் கேட்டுள்ளது. (வ)



### முள்ளிவாய்க்கால் நினைவிடத்தில்

# அரசமிலையில் பெயர் எழுதி அஞ்சலி செலுத்தினர் மக்கள்

வன்னியில் இறுதியாக நடைபெற்ற போரில் உயிரிழந்தவர்களின் பெயர்களை அரசமிலையில் எழுதி, அதனை முள்ளிவாய்க்கால்நினைவிடத்தில் வைத்து மன்னார் மாதர் அபிவிருத்தி ஒன்றியத் தைச் சேர்ந்த பெண்கள் அஞ்சலி செலுத்தினர்.

இறுதிப்போரில் உயிரிழந்தவர்கள் நினைவாக முள்ளிவாய்க்காலில் அமைக்கப்பட்ட நினைவிடத்தில் நேற்று முற்பகல் 10 மணியளவில் ஒன்று கூடிய மன்னார் மாதர் அபிவிருத்தி ஒன்றிய பெண்கள், முள்ளிவாய்க் காலில் உயிரிழந்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தினர். இறுதிப் போரில் அநியாயமாகக் கொல்லப்பட்ட தங்கள் உறவினர்கள் சிலரின் பெயரை அரச இலையில் எழுதி, அதனை நினைவிடத் தில் வைத்து அஞ்சலி செலுத்தினர். உயிர்கள் இடத்தில் அன்பு செலுத்தப்பட வேண்டும் என்ற அறக்கருத்துக்களைப் போதிக்கும் பௌத்த மதத்தைப் பின்பற்று கின்ற ஒரு இனத்தவரால் நடத்தப்பட்ட இனப்படு கொலையை வெளிப்படுத்தும் வகையில், துணியால் வடிவமைக்கப்பட்ட அரசமிலையை அவ்விடத்தில் வைத்து அஞ்சலி செலுத்தியதாக அதில் கலந்துகொண்ட பெண்கள் தெரிவித்தனர். (ஐ-7)

## மதுபோதையில் பொது இடத்தில் அட்டகாசம் செய்ததால் வந்த நிலை

சாவகச்சேரி, மே 20
மதுபோதையில் பொது இடத்தில் குழப்பம் விளைவித்த நபரை 80 மணித்தியாலயங்கள் சமூகப் பணியில் ஈடுபடுத்துமாறும் அவரை குடிவெறுப்பு நிலையத்தில் முற்படுத்தி சிகிச்சை வழங்குமாறும் சாவகச்சேரி நீதிவான் மன்று உத்தரவிட்டது.

சாவகச்சேரிப் பொலிஸாரால் தாக்கல்செய்யப்பட்ட வழக்கை விசாரித்த பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை, குற்றவாளியை 6 மாத காலத்துக்குள் 80 மணித்தியாலயங்கள் சமூகப் பணியில் ஈடுபடுத்துமாறு உத்தரவிட்டார்.

அத்துடன் காலப் பகுதியில் அவருக்கு குடிவெறுப்பு நிலையமான குருந்தகத்தில் சிகிச்சை வழங்குமாறும் நீதிமன்று கட்டளையிட்டது. (வ -9)

## ஆதி வைரவருக்கு அலங்காரத் திருவிழா

தீவகம், ஊர்காவற்றுறை முதலாம் வட்டாரம் ஆதி வைரவர் ஆலயத்தின் வருடாந்த அலங்காரத் திருவிழா எதிர்வரும் 29ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெறும் திருவிழாவின் நிறைவு நாளான ஜூன் 7ஆம் திகதியன்று முற்பகல் 8 மணியளவில் 108 சங்கு முழுக்கு நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-8)

## வேலைதேடும் பட்டதாரிகளுக்கு நாளை கூட்டம்

யாழ்ப்பாணம், மே 20
வேலைதேடும் பட்டதாரிகள் பிரச்சினை தொடர்பான கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு டானியல் ஞாபகார்த்த கல்வி நிறுவனத்தில் (D.M.I) (361, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்) தலைவர் சொ. சிவபாலன் தலைமையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. (வ)

## மணிக்கூட்டுக் கோபுரத்தின் கடிகாரம் மீளச் செயலிழப்பு

யாழ்ப்பாணம், மே 20
யாழ்ப்பாண நகரிலுள்ள மணிக்கூடுக் கோபுரத்தின் கடிகாரம் மீண்டும் செயலிழந்துள்ளது.
"யாழ்ப்பாண மணிக்கூடுக் கோபுரத்தின் கடிகாரம் அடிக்கடி பழுதடைந்து வருகின்றது. கடந்த 3 மாதகாலத்துக்கு முன்னரும் இந்த கடிகாரம் பழுதடைந்தது. அது சீராகப்பட்டு மீளவும் செயற்படுத்தி வைக்கப்பட்டது.
"யாழ்ப்பாண நகர மணிக்கூடு கோபுரத்தின் கடிகாரத்தில் சுழல் சக்கரம் பழுதடைந்துள்ளது. சக்கரம் சீராக்கத்துக்காகக் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. விரைவில் கடிகாரத்துக்குச் சக்கரம் பூட்டப்பட்டு இயக்க வைக்கப்படும்" என்று மாநகர ஆணையாளர் பொ. வாகீசன் தெரிவித்தார். (வ-17)

## வடக்கு மருத்துவர்கள் திங்களன்று போராட்டம்

யாழ்ப்பாணம், மே 20
வடக்கு மாகாண வைத்தியசாலைகளில் கடமையாற்றும் மருத்துவர்கள் நாளைமறுதினம் திங்கட்கிழமை காலை 8மணி முதல் 12மணிவரை போராட்டத்தில் ஈடுபடுவர் என்று அறிவிக்கப்பட்டது.
நாடு முழுவதும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தால் முன்னெடுக்கப்படும் முழுநாள் போராட்டத்துக்கு ஆதரவாகவே இந்த அறிவிப்பை அந்தச் சங்கத்தின் வடக்கு மாகாண இணைப்பாளர் மருத்துவர் காண்டீபன் தங்கராஜா விடுத்துள்ளார்.
இது தொடர்பில் அவரால் அனுப்பி வைக்கப்பட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிராக மாணவர் அமைப்புக்கள் போராட்டம் நடத்தி வருகின்றன. பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் நடத்தப்பட்ட போராட்டத்தில் பங்கேற்ற மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தபட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாளைமறுதினம் திங்கட்கிழமை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் போராட்டம் நடத்தப்பட உள்ளது. அதே வேளை அளுத்கடையில் இருந்து கொழும்பு தேசிய வைத்தியசாலை நோக்கி மருத்துவர்களின் பேரணியும் அன்றையதினம் முன்னெடுக்கப்படுகிறது.
இந்தப் போராட்டத்துக்கு ஆதரவாக வடக்கு மாகாண மருத்துவர்கள் காலை 8மணி முதல் 12மணி வரை பின்வரும் கோரிக்கைகளை முன்வைத்து போராட்டத்தில் ஈடுபடுவர்.
சைட்டம் மருத்துவ கல்லூரிக்கு எதிராக பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் நடத்தப்பட்ட போராட்டத்தில் பங்கேற்ற மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தியமை மற்றும் அவர்களை கைது செய்தமை, இலங்கை மருத்துவ சபை மீது மேற்கொண்ட வெடிகுண்டு தாக்குதல் சம்பவத்துக்குக் காரணமானவர்களை கைது செய்ய நடவடிக்கை எடுக்காமை, .சைட்டம் மருத்துவ கல்லூரியின் முன்னாள் தலைமை நிர்வாக அதிகாரிக்கு இலக்கு வைத்து நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பான விசாரணை முடிவடைந்த பின்னரும் அதுதொடர்பில் எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பது, தொழிற்சங்க நடவடிக்கைகளையும், அதன் தலைமையையும் நசுக்கும் முயற்சியில் அரசு ஈடுபட்டு வருவதைக் கண்டித்தும், சைட்டம் மருத்துவ கல்லூரி மாணவர்களுக்கு அரச வைத்தியசாலைகளை பயன்படுத்துவதற்கு சுகாதார அமைச்சு வழங்கியதற்காக லஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் மேற்கொண்ட முறைப்பாட்டுக்கு எந்தவித விசாரணைகளையும் முன்னெடுக்காமை போன்ற கோரிக்கைகளை முன்வைத்தே இந்த போராட்டம் இடம்பெறவுள்ளது.
(வ-21-7)

(மற்றொரு செய்தி 3ஆம் பக்கத்தில்)

## கோவிற்குடியிருப்பில் நேற்று வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி

*நீர் வெறுப்பு நோயால் நாய் ஒன்று உயிரிழந்ததால்*

சாவகச்சேரி, மே 20
சாவகச்சேரி, கோயிற்குடியிருப்பு சாலையில் பயணித்தோருக்கும் கால்நடைகளுக்கும் கடித்த வளர்ப்பு நாய்க்கு நீர் ஊற்றிய போது அது உயிரிழந்தது. அதனால் அந்தப் பகுதியில் உள்ள வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்து நேற்று ஏற்றப்பட்டது.
சாவகச்சேரி கோயிற்குடியிருப்பு பகுதியில் உள்ள கைலாசபிள்ளை சாலையில் உள்ள வீடொன்றின் வளர்ப்பு நாய் அந்த வழியே பயணித்த 8 பேருக்கு கடித்தது. கால்நடைகளுக்கும் அந்த நாய் கடித்துள்ளது.
நாயால் கடியுண்ட பொதுமக்கள் அந்தப் பிரிவில் கடமையாற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கு அறிவித்தனர். அங்கு வந்த பொது சுகாதாரப் பரிசோதகர், அந்த நாய்க்கு நீர் ஊற்றினார். சிறிது நேரத்தில் நாய் உயிரிழந்தது. இதனால் நாய்க்கு நீர் வெறுப்பு நோய் ஏற்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டது. குறித்த நாயால் கடியுண்டவர்களுக்கு வைத்தியசாலையில் உரிய தடுப்பூசி ஏற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன். அத்துடன், அந்தப் பகுதியில் உள்ள வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்தும் நேற்று ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (வ-9)



## சிறுமிகள் மீது துர்நடத்தை; செல்வந்தரின் மறியல் நீடிப்பு

கிளிநொச்சி, பளைப் பகுதியில் சிறுமிகள் மீதான துர்நடத்தைக் குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட செல்வந்தரின் விளக்கமறியலை எதிர்வரும் 31ஆம் திகதி வரை நீடித்து கிளிநொச்சி நீதிவான் மன்று உத்தரவிட்டது.
பளைப் பகுதியில் சிறுமிகள் மீது பாலியல் துர்நடத்தை மேற்கொள்ளப்படுவதாக பளைப் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டது. விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் ஏப்ரல் 9ஆம் திகதி செல்வந்தர் ஒருவரைக் கைது செய்தனர். அவர் கிளிநொச்சி நீதிவான் மன்றின் உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.
இந்த வழக்கு கிளிநொச்சி நீதிவான் மன்றில் நேற்று விசாரணைக்கு வந்தது. சந்தேகநபர் மன்றில் முற்படுத்தப்பட்டார். வழக்கை விசாரணை செய்த பதில் நீதிவான், சந்தேகநபரின் விளக்கமறியலை எதிர்வரும் 31ஆம் திகதி வரை நீடித்து உத்தரவிட்டார். (வ-ய)

## மரக்கறிகளின் நேற்றைய நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | சுன்னாகம் |
|---|---|---|---|---|
| முள்ளங்கி | 80 | 80 | 60 | 80 |
| கத்தரி | 100 | 120 | 100 | 100 |
| கரட் | 200 | 200 | 200 | 200-320 |
| மரவள்ளி | 60 | 80 | 60 | 70 |
| பயிற்றை | 100 | 120 | 100 | 120 |
| பாகல் | 160 | 120 | 160 | 180 |
| கருணைக்கிழங்கு | 120 | 100 | | 100 |
| பெ.வெங்காயம் | 90 | 100 | 90 | 100 |
| சி.வெங்காயம் | 200 | 300 | 250 | 220 |
| பூசணி | 60 | 50 | 50 | 60 |
| தக்காளி | 90 | 100 | 100 | 80 |
| வாழைக்காய் | 50 | 40 | 40 | 50 |
| கீரை | 30 | 30 | 15 | 30 |
| பொன்னாங்காணி | 20 | 40 | 35 | 30 |
| பச்சை மிளகாய் | 100 | 200 | 200 | 160 |
| புடோல் | 100 | 80 | 100 | 80 |
| கோவா | 150 | 200 | 160 | 150 |
| வெண்டி | 80 | 100 | 80 | 80 |
| போஞ்சி | 160 | 200 | 240 | 200 |
| லீக்ஸ் | 100 | 100 | 120 | 100 |
| தேங்காய் | 70 | 65 | 60-90 | 70 |
| உருளைக்கிழங்கு | 110 | 120 | 120 | 120 |
| தேசிக்காய் | 80 | 60 | 60 | 70 |
| வல்லாரை | 20 | 20 | 15 | 10 |
| கறிமிளகாய் | 140 | 180 | 140 | 140 |
| இராசவள்ளி | 200 | 100 | 250 | 200 |
| முருங்கைக்காய் | 120 | 100 | 120 | 120 |

## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 700 | 700 | 1000 | 800 |
| நண்டு | 400 | 300 | 500 | 300 |
| கணவாய் | 600 | 600 | 800 | 700 |
| பாரை | 500 | 600 | 700 | 800 |
| சுறா | 500 | 700 | 100 | 800 |
| சீலா | 400 | 400 | 500 | |
| விளை | 500 | 400 | 600 | 600 |
| முரல் | 400 | 400 | 500 | 300 |
| கும்பிளா | 400 | 500 | 450 | 500 |
| கிளாக்கன் | 800 | – | 700 | |
| ஓரா | 300 | 300 | 500 | |
| திரளி | 200 | 200 | 200 | 200 |
| நகரை | 200 | 150 | 400 | |
| சூடை | 150 | 100 | 200 | 150 |
| ஒட்டி | 250 | 400 | 300 | |
| திருக்கை | 350 | 250 | 400 | 400 |
| மதனம் | 200 | 150 | 300 | |
| கொய் | 150 | 60 | 80 | 100 |
| பாலை | 200 | 220 | 600 | 400 |
| வாழை | 200 | – | 500 | |

## கற்கோவளம் அடிதடி; 4 பேர் விளக்கமறியலில்

யாழ்ப்பாணம், மே 17
வடமராட்சி, கற்கோவளம் பகுதியில் 2 கும்பல்களுக்கு இடையே ஏற்பட்ட அடிதடியுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர்களை எதிர்வரும் 24ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்தறை நீதிவான் மன்றம் உத்தரவிட்டது.
வடமராட்சி கற்கோவளத்தில் 2 கும்பல்களுக்கு இடையே வாள்கள் பொல்லுகளுடன் சென்று அடாவடியில் ஈடுபட்டு வரும் நிலையில், ஒரு கும்பலைச் சேர்ந்த 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
சந்தேகநபர்கள் 4 பேரும் பருத்தித்துறை நீதிவான் மன்றில் நேற்று முற்படுத்தப்பட்டனர். வழக்கை விசாரணை செய்த நீதிவான், சந்தேகநபர்கள் எதிர்வரும் 24ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

**பின்னணி**

கற்கோவளம் பகுதியில் சில நாள்களாக 2 கும்பல்களுக்கு இடையே முரண்பாடு நீடித்து வருகிறது. அது கைகலப்பாகியதில் 3 பேர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். அது தொடர்பில் சம்பவ இடத்துக்குப் பொலிஸார் சென்றதும் அடிதடியில் ஈடுபட்டோர் அங்கிருந்து ஓடித் தலைமறைவாகினர். இந்த நிலை வழமையாக இருந்து வருகிறது. (வ-10-26)

## உதவி அஞ்சல் அதிபர் நியமனம் கிடைத்தோருக்கு 2 வாரப் பயிற்சி

யாழ்ப்பாணம், மே 20
தமிழ்மொழி மூலமான தெரிவு செய்யப்பட்ட உதவி அஞ்சல் அதிபர்களுக்கான (தரம் 3) இரண்டு வார கால பயிற்சிகள் யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.
யாழ்ப்பாண தலைமைத் தபாலகத்தின் அஞ்சல் பயிற்சிக் கல்லூரியில் இந்த பயிற்சிகள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை ஆரம்பமாகின.
'நேர்முக பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்ட 17 தமிழ்மொழி மூலமான உதவி அஞ்சல் அலுவலர்களுக்கும் 2 வார காலப் பயிற்சி நிறைவு பெற்றதும் வெற்றிடங்கள் காணப்படும் உப தபாலகங்களில் உதவி அஞ்சல் அதிபர்களாக நியமிக்கப்படுவார்கள்.
தமிழ்மொழி மூலமான உதவி அஞ்சல் அதிபர்களாக 144 பேர் தெரிவு செய்யப்பட்டனர். அவர்களில் 2 கட்டங்களாக 127 பேருக்கு அஞ்சல் பயிற்சிக் கல்லூரியில் 2 வார காலப் பயிற்சிகள் வழங்கப்பட்டு நியமனங்களும் வழங்கப்பட்டுள்ளன. முதற்கட்டமாக 78 பேருக்கும் இரண்டாம் கட்டமாக 49 பேருக்கும் யாழ்ப்பாண அஞ்சல் பயிற்சிக் கல்லூரியில் 2 வார காலப் பயிற்சிகள் வழங்கப்பட்டன. தற்போது 3ஆம் கட்டமாக 17 பேருக்கு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன' என்று அஞ்சல் திணைக்களத் தகவல்கள் தெரிவித்தன. (வ-17)

# கலைகளைக் கட்டிக்காக்க முன்வராத இளையோர்கள்

## கற்சிலைமடு

## அண்ணாவியார் கவலை

முல்லைத்தீவு, மே 20
எமது முன்னோர்களால் முன்னெடுக்கப்பட்டு வந்த கலைகளை அழியவிடாது தொடர்ந்து கட்டிக் காக்க இளையோர்கள் முன்வராததால் அவைகளைக் கைவிடப்படும் நிலை ஏற்பட்டுள்ளதாகக் கற்சிலைமடு பிரபல அண்ணாவியார் கார்த்திகேசு இராசேந்திரம் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில், எமது முன்னோர்களால் முன்னெடுக்கப்பட்ட கோவலன், காத்தவராயன் போன்ற கூத்துக்களும் அரிச்சந்திரா, சத்தியவான் சாவித்திரி, நந்தனார், பண்டாரவன்னியன் போன்ற மேடை நாடகங்களையும் மேடை ஏற்றி வந்த நிலையில் அதன் நடிகர்கள் ஓய்வு நிலை அடைந்ததால் இப்போதுள்ள இளைஞர், யுவதிகள் அவற்றில் பங்கு கொள்ள ஆர்வமில்லாது உள்ளனர். இதனால் எமது கலைகள் அழியும் நிலை ஏற்பட்டுள்ளது.
எனவே இந்தக் கலைகளை அழிய விடாது பாதுகாக்க இளைஞர், யுவதிகளைப் பெற்றோர்கள் ஊக்குவிக்க வேண்டும் -என்றார். (த-500)

# கொக்கிளாயில் சிலிக்கன் பெற நிபந்தனைகள்

## அறிக்கையை அனுப்பி வைத்தார் கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலர்

யாழ்ப்பாணம், மே 20
கொக்கிளாய் பிரதேசத்தில் தொழில் புரியும் உள்ளூர் மீனவர்களைப் பாதிக்காமல் அங்கு தொழிற்சாலை அமைப்பதற்கு இணக்கம் தெரிவித்தால் மட்டுமே கொக்கிளாயில் சிலிக்கன் பெறுவதற்கான ஒப்புதலை வழங்க முடியும் எனப் பிரதேச செயலாளர் அறிக்கை அனுப்பியுள்ளார்.
கொக்கிளாய் பிரதேசத்தில் காணப்படும் சிலிக்கன் மணலை அகழ்வு செய்வது தொடர்பில் கடந்த மாதம் இடம்பெற்ற ஆய்வுக்கூட்டம் தொடர்பான இறுதி அறிக்கையிலேயே கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலாளர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.
குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
கொக்கிளாய்ப் பகுதியில் தொழில் புரியும் மீனவர்களைப் பாதிக்காது அங்கு தொழிற்சாலை அமைப்பதற்கு இணக்கம் தெரிவிக்கப்படும் சந்தர்ப்பத்தில் மட்டுமே இந்தப் பகுதியில் சிலிங்கன் பெறுவதற்கான ஒப்புதலை வழங்க முடியும்.
அதேபோன்று சுற்றுச் சூழல் அதிகாரிகள், கனியவளத் திணைக்களத்தினர் மாதம் ஒருமுறை இந்தத் தொழிற்சாலையின் பாதுகாப்புத் தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பிக்கவேண்டும்.
மக்களால் ஏதாவது முறைப்பாடு முன்வைக்கப்பட்டால் பிரதேச செயலாளர் பார்வையிடுவதற்கு அனுமதிக்கப்படவேண்டும். இங்கு பணிபுரிவதற்கு உள்ளூர் ஊழியர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படவேண்டும். இந்தத் தொழிற்சாலையினால் சுற்றுச் சூழலுக்கோ அல்லது மனித உயிர்களுக்கோ ஆபத்து நிகழும் எனப் பிரதேச செயலாளர் கண்டறிந்தால் தொழிற்சாலையை உடனடியாக மூடும் அதிகாரம் இருக்கவேண்டும்.
மேற்குறித்த நிபந்தனைகளுக்கு உட்பட்டு இதற்கான பணிகளை முன்னெடுக்க இணங்கினால் அது தொடர்பில் பிரதேச செயலகமும் ஆராயத் தயாராகவுள்ளது என்றுள்ளது. (த-101)

பிணையில் விடுவிக்கப்பட்டு 50 நாள்கள் கடந்தும்

# கிராம அலுவலரின் நற்சான்றிதழ் சமர்ப்பிக்காதவர் விளக்கமறியலில்

நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்டு 50 நாள்கள் கடந்தும் கிராம அலுவலரின் நற்சான்றிதழைச் சமர்ப்பிக்காத நபரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார் சாவகச்சேரி நீதிமன்ற பதில் நீதிவான்.
நாவற்குளி ஐயனார் கோவிலடிப் பகுதியில் கடந்த மார்ச் மாதம் 15ஆம் திகதி 24 ஆயிரம் ரூபா பெறுமதியான பசுமாடொன்றை திருடியமை தொடர்பாகக் கைதுசெய்யப்பட்ட அதே இடத்தைச் சேர்ந்த நபரை நீதிமன்று கடந்த மார்ச் மாதம் 30 ஆம் திகதி 50 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதித்திருந்தது.
சந்தேக நபரும் பிணையாளரும் ஒரு வார காலத்தினுள் பிரிவுக் கிராம அலுவலரிடம் சான்றிதழ் பெற்று நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு மன்றினால் உத்தரவிடப்பட்டுநேற்றுவரை வழக்குஒத்திவைக்கப்பட்டிருந்தது. வழக்குநேற்றுநீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது சந்தேகநபர் இன்னமும் கிராம அலுவலரின் சான்றிதழை நீதிமன்றில் சமர்ப்பிக்கவில்லையெனப் பொலிஸார் நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர்.
இதனையடுத்துச் சந்தேக நபரை எச்சரிக்கை செய்த பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை அவரை எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (த-9)

# 3 கோடி 18 இலட்சம் ரூபா முல்லைக்கு உரமானியம்

## 4ஆயிரத்து 459 ஏக்கரில் சிறுபோகம்

முல்லைத்தீவு, மே 20
முல்லைத்தீவு மாவட்டத்தில் இம்முறை சிறுபோகச் செய்கையின்போது 4ஆயிரத்து 459 ஏக்கருக்கான உரமானியக் கொடுப்பானவாக 3கோடி 18 இலட்சம் ரூபா பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்டக் கமநல அபிவிருத்தி உதவிஆணையாளர் தெரிவித்தார்.
அவர்மேலும்தெரிவிக்கையில், இந்த வருடம் மழையின்மையால் வறட்சியை எதிர்கொள்ளும் நிலையில் சுமார் 200 குளங்களுக்கு மேல் நீர் இல்லாமல் சிறுபோகம் மேற்கொள்ளப்படவில்லை.
இந்த நிலையில் துணுக்காய் கமநலச் சேவை நிலையத்தின் கீழ் 783 விவசாயிகள் 783ஏக்கரில் நெல்பயிரிட்டுள்ளனர். இவர்களுக்கு ஏக்கருக்கு தலா 5 ஆயிரம் ரூபா வீதம் 39 இலட்சத்து 15 ஆயிரம் ரூபாவும், உடையார் கட்டு கமநலச்சேவை நிலையத்தின் கீழ் 650 ஏக்கரில் நெல் பயிரிடும் 750 விவசாயிகளுக்கு 30 இலட்சம் ரூபாவும், பாண்டியன் குளம் கமநலச் சேவை நிலையத்தின் கீழ் 2771 ஏக்கரில் நெல் பயிரிடும் 1925 விவசாயிகளுக்கு 1கோடி 56 ஆயிரத்து 250 ரூபாவும், முள்ளியவளை கமநலச்சேவை நிலையத்தின் கீழ் 600 ஏக்கரில் நெல் பயிரிடும் 275 விவசாயிகளுக்கு 30 இலட்சம் ரூபாவும், குமுழமுனை கமநலச்சேவை நிலையத்தின் கீழ் 12 ஏக்கரில் நெல் பயிரிடும் 4 விவசாயிகளுக்கு 60ஆயிரம் ரூபாவும் உரமானியமாக வழங்கப்படவுள்ளது.
மேலும் கொக்குத்தொடுவாய் கமநல சேவைநிலையத்தின் கீழ் செய்கை மேற்கொண்ட 14 விவசாயிகள் 40 ஏக்கருக்கு 2இலட்சம் ரூபாவும், ஒலுமடு ஒட்டுசுட்டான் கமநல சேவைநிலையத்தின் கீழ் 500 ஏக்கரில் செய்கை மேற்கொள்ளப்படும் 250 விவசாயிகளுக்கு 25 இலட்சம் ரூபாவும், ஒலுமடு கமநலச்சேவை நிலையத்தின் கீழ் 343 ஏக்கரில் செய்கை மேற்கொண்ட 275 விவசாயிகளுக்கு 17 இலட்சத்து 18 ஆயிரத்து 750 ரூபாவும், புதுக்குடியிருப்பு கமநலச்சேவைநிலையத்தின் கீழ் 386 ஏக்கரில் செய்கை மேற்கொண்ட 183 விவசாயிகளுக்கு 19 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாவும் என மொத்தம் 3கோடி 18 இலட்சம் ரூபா நிதி 4 ஆயிரத்து 459 விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட உள்ளது-என்றார். (த-500)




# ரூ. 348 மில்லியன் செலவில் பஸ் நிலையமும் அங்காடியும்

## மன்னார் - தலை மன்னார் வீதியில் அமைக்குமாறு சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. ரணிலிடம் கோரிக்கை



யாழ்ப்பாணம், மே 20
மன்னார் மாவட்டத்துக்கான பேருந்து நிலையமும் பல்பொருள் அங்காடி ஒன்றும் சுமார் 348 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளன. அவை மன்னார்-தலைமன்னார் பிரதான வீதியில் அமைய வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவிடம் வேண்டுகோள் விடுத்தார்.
மன்னார் மாவட்டத்துக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்ட தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க தலைமையில் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
மன்னார் மாவட்டத்துக்கான பேருந்து நிலையமும் பல்பொருள் அங்காடி ஒன்றும் சுமார் 348 மில்லியன் ரூபா செலவில் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அவை மன்னார் மாவட்டத்தின் மன்னார்-தலைமன்னார் பிரதான வீதியிலேயே அமைக்கப்படவேண்டும். இந்த மாவட்டத்தின் தேவைகள் மட்டுமல்ல இந்த மாகாணத்தின் தேவைகள் குறித்தும் தலைமை அமைச்சரிடம் நிறையக் கோரவேண்டிய தேவையுள்ளது . இருப்பினும் இது ஓர் அரசியல் பேசுகளமல்ல என்பதால் அபிவிருத்தியை மட்டுமே இங்கு பேசுகின்றோம்.
எல்லா மாவட்டத்திலும் அநேகர் காணாமற்போனோர் விடயம், நில விடுவிப்பு, வேலைவாய்ப்பு எனப் போராடும் நிலையில் அது தொடர்பில் தலைமை அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு செல்லவேண்டிய நிலை உள்ளது என்றார்.
இதற்குப் பதிலளித்து உரையாற்றிய தலைமை அமைச்சர் ரணில், இலங்கையின் இனப் பிரச்சினைக்கான தீர்வைக் காணுமாறு அண்மையில் வருகை தந்த இந்தியத் தலைமை அமைச்சரும் வலியுறுத்தியிருந்தார். போரால் பாதிக்கப்பட்ட மாகாணத்தின் அபிவிருத்திக்கு மத்தியும் மாகாணமும் இணைந்து செயலாற்றுவதன் மூலமே அபிவிருத்தியை மேம்படுத்த முடியும் என்றார். (த-101)

# தேர்தல்களை நடத்தப் பின்னடிக்கிறது மைத்திரி அரசு

## கபே அமைப்பின் நிற்றைவேற்றுப் பணிப்பாளர் தெரிவிப்பு




வவுனியா, மே 20
மகிந்த அரசின் காலத்தில் அடிக்கடி தேர்தல் நடைபெற்று அதன் மூலமாகத் தேர்தலில் ஒரு வெறுப்பு ஏற்பட்டது. மைத்திரி அரசின் காலத்தில் பல்வேறு காரணங்களைக் கூறித் தேர்தல் பிற்போடப்பட்டு வருகிறது என்று கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்தார்.
உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் வாக்கெடுப்புச் சட்டத் திருத்தங்கள் தொடர்பாக அரசியல் பிரதிநிதிகளை அறிவுறுத்தும் பயிற்சிப் பட்டறை வவுனியா மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்றது.
அதில் கலந்துகொண்ட பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
தற்போதைய அரசு பல்வேறு காரணங்களைக் காட்டி உள்ளூராட்சித் தேர்தலைப் பிற்போட்டுச் செல்கிறது. மகிந்த அரசின் காலத்தில் அடிக்கடி தேர்தல் நடைபெற்று அதன் மூலமாகத் தேர்தலில் ஒரு வெறுப்பு ஏற்பட்டது. அந்த வகையில் மக்களின் ஜனநாயக உரிமை மீறப்படுவதை அவதானிக்க முடிகிறது.
தற்போது வடக்கு மாகாணத்தில் கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு போன்ற பகுதிகளில் உள்ளூராட்சித் தேர்தல் பிற்போடப்படப்பட்டுள்ளது. அதேபோல் மட்டக்களப்பிலும் பல்வேறு தொகுதிகளில் கடந்த 5 வருடங்களுக்கு மேலாக தேர்தல் நடத்தப்படவில்லை. தேசிய மட்டத்திலும் ஒன்றரை வருடத்திற்கு மேலாக தேர்தல்கள் நடத்தப்படவில்லை.
தற்போதுள்ள சட்டத்தின்படி தேர்தலில் 25 வீதம் பெண்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கப்படவேண்டும். ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும்போது வடக்கு மாகாணத்தில் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்கள் காணப்படுகின்றன. வடக்கு மாகாணத்தில் தான் இந்த பொறுப்புக்கள் அதிகமாகக் காணப்படுகின்றன.
கபே அமைப்பு கிராம மட்டத்தில் உள்ளூராட்சித் தேர்தலில் பெண்கள் போட்டியிடக்கூடியவகையில் விழிப்புணர்வுச்செயற்பாட்டைசெய்து வருகின்றது-என்றார். (த-4-402)

# உரிய வசதிகளில்லாத கல்வி நிலையங்கள் இழுத்து மூடப்படும்

## வலி.கிழக்குப் பிரதேச சபை செயலாளர் அறிவிப்பு

அச்சுவேலி, மே 20

தனியார் கல்வி நிலையங்கள் உரிய நியமங்களுக்கு அமைய மாணவர்களுக்கான அடிப்படை வசதிகளைக் கொண்டிருக்காவிடின், ஏழு நாள்கள் முன்னறிவித்தலுடன் அவை இழுத்து மூடப்படும்.

இவ்வாறு கூறினார் வலி. கிழக்குப் பிரதேச சபையின் செயலாளர் யுகராசா ஜெலீபன்.

வலி.கிழக்குப் பிரதேச சபைப் பிராந்தியத்தில் செயற்பட்டுவரும் தனியார் கல்வி நிலையங்களின் இயக்குநர்களுக்கான கலந்துரையாடல் கடந்த புதன்கிழமை வலிகிழக்குப் பிரதேச சபையின் தலைமைச் செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதில் தலைமை உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தனியார் கல்வி நிலையங்களுக்கான உரிமங்களை வழங்குவதும், அவற்றின் செயற்பாடுகளைக் கண்காணித்து ஒழுங்கு முறையாக செயற்பட வைப்பதும் உள்ளூராட்சிச் சபைகளின் அதிகாரத்துக்கு உட்பட்டதாகும். அந்த வகையில் வழங்கப்பட்ட அனுமதியை நீக்கம் செய்து மூடுவதற்கான அதிகாரம் பிரதேச சபைக்கு உண்டு. இதில் எவரும் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை.

தனியார் கல்வி நிலையங்களின் செயற்பாடுகள் மற்றும் அவற்றை வழிப்படுத்தல் தொடர்பாக மேல்நீதிமன்ற நீதிபதி வழங்கியுள்ள அறிவுறுத்தலுக்கு அமையவும், உள்ளூராட்சிக் கட்டளைச் சட்டம் மற்றும் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமையவும், தனியார் கல்வி நிலையங்களைப் பதிவு செய்து கண்காணித்து வருகின்றோம்.

தனியார் கல்வி நிலையங்கள் மலசலகூட வசதி, குடிதண்ணீர் வசதி, மாணவர்களுக்குப் பொருத்தமான இருக்கை வசதி என்பவை இல்லாமலும், பொருத்தமான நியமங்களைப் பின்பற்றாமலும் செயற்படுவது அவதானிக்கப்பட்டிருப்பதோடு, அது தொடர்பான முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன.

தனியார் கல்வி நிலையங்கள் வருமானத்தை நோக்காகக் கொண்டு செயற்படும் அமைப்புக்களாகும். அவை மாணவர்களுக்கான அடிப்படை வசதிகள் கொண்டிராமையும், மனிதாபிமான ரீதியில் அவற்றை ஏற்பாடு செய்யாமல் இருப்பதும் கவலை அளிக்கின்றது. குடிதண்ணீர் மற்றும் மலசலகூடத் தேவைகளுக்கு அயலில் உள்ள வீடுகளுக்கு மாணவர்கள் செல்வதும் அவதானிக்கப்பட்டுள்ளது.

எமது பிரதேசத்தில் உள்ள தனியார் கல்வி நிலையங்கள் உரிய படிவத்தின் மூலம் விண்ணப்பித்துப் பதிவு இலக்கத்தைப் பெற்றுக் கொள்வதோடு பதிவிலக்கத்தைப் பெயர்ப்பலகையில் பொறித்துக் கொள்ளவேண்டும். எமது பிரதேசம் இதில் முன்மாதிரியாக இருப்பதற்கு இயக்குநர்கள் ஒத்துழைக்கவேண்டும். இல்லாவிடில் அதற்கான விளைவுகளை எதிர்கொள்ளவேண்டும்.

எதிர்காலத்தில் தனியார் கல்வி நிலையங்களின் வசதிகள், நியமங்கள் உரிய முறையில் மதிப்பீடு செய்யப்பட்டு ஏ.பி.சி என்ற வகைப்பாட்டின் கீழ் தரச்சான்றிதழ் வழங்கப்படும். அத்துடன் மாணவர்களிடம் அறவிடப்படும் கட்டண வீதமும் பொதுமைப்படுத்தப்படும்.

தனியார் கல்விநிலையங்களுக்கான ஒழுங்கமைப்பு நடைமுறைக்கு அமைய மாணவர் விவரம், ஆசிரியர் விவரம் தொடர்பான பதிவேடுகள் உரியமுறையில் பேணப்படவேண்டும் என்றார். (த - 11)

# முல்லைத்தீவுக்கு மே 22இல் வருகிறார் மைத்திரி

## தேசிய வறுமை ஒழிப்பு ஆரம்ப நிகழ்வில் பங்கேற்பதற்காக

யாழ்ப்பாணம், மே 20

முல்லைத்தீவில் நேற்று முன் தினம் இடம்பெறவிருந்து, பின்னர் ஒத்திவைக்கப்பட்ட தேசிய வறுமை ஒழிப்பு உள்ளிட்ட அரச தலைவரின் நிகழ்வுகள் எதிர்வரும் 22ஆம் திகதி இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய வறுமை ஒழிப்பு நிகழ்வை ஆரம்பித்து வைப்பதற்காக முல்லைத்தீவுக்கு நேற்று முன் தினம் வியாழக்கிழமை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன வருகை தரவிருந்தார். அன்றைய தினம் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெறுகின்றமையால் அரச தலைவர் தனது பயணத்தை ஒத்திவைக்க வேண்டும்எனக் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து குறித்த பயணம் ஒத்திவைக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் குறித்த பயணம் எதிர்வரும் 22ஆம் திகதி இடம்பெறவுள்ளதாகவும், குறித்த நிகழ்வுடன் முல்லைத்தீவில் புதிதாக அமைக்கப்பட்ட மாவட்டச் செயலகத்தின் கட்டடத்தை அரசதலைவர் திறந்து வைக்கவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த - 101)

# பிறழ்வுகளில் இருந்து சிறுவரைப் பாதுகாக்க சிறப்பு நடவடிக்கைகள்

## வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் தெரிவிப்பு



வவுனியா, மே 20

பல்வேறு பிறழ்வுகளில் இருந்து எமது சிறுவர்களைப் பாதுகாப்பதற்கான இடமாக வவுனியாவில் நந்தவனம் சிறுவர் இல்லத்தை அமைத்துள்ளோம் என வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்

வவுனியா வைரவப்புளியங்குளம் பகுதியில் நேற்று நந்தவனம் என்ற சிறுவர் இல்லத்தைத் திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த 30 வருட காலம் நடைபெற்ற போரினால் எமது சமுதாயம் சீரழிந்துள்ளது. அதன் விளைவுகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இதனை எமது சமூகம் அனுபவித்து வருகின்றது. இவ்வாறான பிரச்சினைகளைச் சீரமைப்பதற்குச் சிறுவர் இல்லம் அவசியமானது. எங்கள் சமூகம் ஒழுக்கம், கட்டுப்பாடு, கட்டுமானம் உள்ள சமூகமாக இருக்கவேண்டும். அதற்கு எமது வடக்கு மாகாண சபை உதவமுன்வரவேண்டும். இதேபோன்ற சிறுவர் இல்லம் கிளிநொச்சியிலும் உள்ளது. ஏனைய மாவட்டங்களிலும் இவ்வாறான சிறுவர் இல்லங்களை அமைக்கவுள்ளோம். போரினால் சொத்துக்களை, உயிர்களை, கலை கலாசார விழுமியங்களை இழந்துள்ளோம். இழந்த கட்டமைப்பை மீண்டும் கட்டியெழுப்புவோம்.

முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட உறவுகளை நினைவு கூர்ந்தோம். இந்த நினைவு கூரல்கள் வெளிமாவட்டங்களிலும் புலம்பெயர் இடங்களிலும் நடைபெற்றன. எமது மக்கள் கொல்லப்பட்டதை மறக்கவும் முடியாது. மன்னிக்கவும் முடியாது

நேற்று (நேற்று முன் தினம்) எமது எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் உரையாற்றும்போது ஊடகவியலாளர் ஒருவர் அவரது உரையைக் குழப்ப முற்பட்டார். சுயலாபத்துக்காகச் சிலர் இவ்வாறான குழப்பங்களை ஏற்படுத்த முனைகின்றனர். இதை ஏற்றுக் கொள்ளமுடியாது. அந்த இடம் அரசியல் கதைக்கும் இடமாக இருக்கக் கூடாது.

இன்று பல சமூகப் பிறழ்வுகள் ஏற்படுகின்றன. பாடசாலைச் சிறுவர்கள் வீதியால் செல்லமுடியாதவாறு சில இளைஞர்கள் தொந்தரவு செய்கிறார்கள். எமது சமூகம் கட்டுக்கோப்புள்ள சமூகம். மீண்டும் கட்டுப்பாடான சமூகமாக, சுயமரியாதையுள்ள சமூகமாக உருவாகவேண்டும். அதற்கு மத்தியஅரசு வடக்கு மாகாண சபைக்கு நிதி வழங்கவேண்டும். இளவயதுக் கர்ப்பம், பாலியல் துன்புறுத்தல்களால் பாதிக்கப்பட்ட பலர் வைத்தியசாலைக்கு வருகிறார்கள். இவர்களுக்கு உளச் சிகிச்சை வழங்கும் நிலையமாகக்கூட இந்த நந்தவனம் மாற வேண்டும் என்றார்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை ஆணையாளர் விஸ்வரூபன், மாவட்டச் சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் நந்தசீலன், சிறுவர் இல்லப் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (த -402)

# வவுனியாவில் தாக்குதல்கள்; 15 பேர் பொலிஸாரால் கைது

வவுனியா, மே 20.

வவுனியா, பூவரசங்குளம் பிரிவுக்குட்பட்ட இரண்டு கிராமங்களில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற கைகலப்புச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகத்தில் 15 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த ஞாயிற்றுக் கிழமை பம்பைமடுப் பகுதியில் இளைஞர் ஒருவர் இரும்புப் பைப்பினால் தாக்கப்பட்டதில் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். ஆயினும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இந்தத் தாக்குதல் தொடர்பில் முதலில் 6 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். மேலும் இருவரைத் தேடி வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அதே தினத்தில் தாலிக்குளம் பகுதியில் சிவில் பாதுகாப்பு உறுப்பினர்கள் இருவர் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அவர்கள் திருப்பித் தாக்கியதில் வயோதிபர் ஒருவர் காயமடைந்ததுடன் 3 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதலுடன் தொடர்புடைய சந்தேகத்தில் 9பேரைப் பொலிஸார் கைது செய்தனர். நீதிமன்றின் உத்தரவுப்படி அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இரண்டு சம்பவங்களின் பின்னணியிலும் 20 வயதிற்குட்பட்டவர்களே உள்ளார்கள் என்று கூறப்படுகிறது. (த -4)

### இரணைமடுக் குளத்தின் கீழ் சிறுபோகத்தில்

# மேலதிக விதைப்புச் செய்தோர் அவற்றை அழிப்பதற்கு உத்தரவு

யாழ்ப்பாணம், மே 20

இரணைமடுக்குளத்தின் கீழ் சிறுபோகத்தில் மேலதிக விதைப்பில் ஈடுபட்டவர்கள் அவற்றை உடனடியாக அழிக்கவேண்டும். இல்லாவிடில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனக் கமநல சேவைத் திணைக்களங்களினால் விவசாய அமைப்புக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடுக்குளத்தின் கீழ் 2017 ஆம் ஆண்டுக்கான சிறுபோகத்தின்போது 890 ஏக்கர் வயல் மட்டுமே விதைப்புக்கு அனுமதிக்கப்பட்ட நிலையில் 1,030 ஏக்கர் நிலத்தில் விதைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனால் ஒட்டுமொத்தமாக ஆயிரம் ஏக்கருக்கும் 7ஆவது தடவை விநியோகம் செய்யும் நீரை வழங்க முடியாத நிலமை ஏற்படும். இவ்வாறான நெருக்கடிகளைத் தவிர்க்கும் வகையில் மேலதிக விதைப்புச் செய்யப்பட்ட நிலம் உடனடியாக அழிக்கப்படும் என விவசாய சம்மேளனக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இதற்காக இரணைமடுக்குளத்தின் கீழ் 2017ஆம் ஆண்டு சிறுபோகத்துக்கு அனுமதிக்கப்பட்ட 890 ஏக்கர் வயல் நிலங்கள் உட்பட விதைப்பு மேற்கொள்ளப்பட்ட அனைத்து வயல்களும் அவசர அவசரமாக அளவிடப்பட்டன. இதன் பிரகாரம் மொத்தமாக 1030 ஏக்கர் நிலம் விதைக்கப்பட்டிருந்தமை இனம்காணப்பட்டதுடன் மேலதிக விதைப்பை மேற்கொண்ட விவசாயிகளும் அடையாளம் காணப்பட்டனர்.

இதனால் ஒட்டுமொத்த வயல்களுக்கும் ஏற்படும் நெருக்கடிகளை தவிர்க்கும் நோக்கில் மேலதிகமாக மேற்கொள்ளப்பட்ட விதைப்பை உடனடியாக அழிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

மேலதிக விதைப்பாக இனம்காணப்பட்ட 140 ஏக்கர் நிலத்தின் உரிமையாளர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கான முன்னோடி நடவடிக்கையாக முதலாவது கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விதைப்பை உடனடியாக அழிப்பதோடு அவ்வாறு விதைப்பை மேற்கொண்டவர்களுக்கான உர மானியமும், நீர்ப்பங்கும் நிறுத்தப்படும் என்பதை அறிந்து மேலதிகமாக 4 ஏக்கரில் விதைப்பை மேற்கொண்ட விவசாயி ஒருவர் நேற்று முன்தினம் அதனை அழிப்பதில் ஈடுபட்டார். (த-101)

# கல்வி மேம்பாட்டுக்காக மாகாண சபையின் அதிகாரங்களைக் கொழும்பு அரசு பறிக்காது

## தலைமை அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, மே 20

கல்வி மேம்பாட்டுக்காக தேசிய கொள்கை ஒன்றை வகுக்கும் பொழுது, மாகாணசபை கொண்டுள்ள அதிகாரங்களைக் கொழும்பு அரசு தன்வசப்படுத்திக்கொள்ளாது. புதிதாக ஆசிரியர்களை இணைத்துக் கொள்வதற்காகப் பெருந்தொகை நிதியை அரசு ஒதுக்கீடு செய்கின்றது.

இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பண்டாரவளை சென்.தோமஸ் கல்லூரியின் 75 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கண்காட்சியை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஆசிரியர்கள் மற்றும் பாடசாலையின் முன்னேற்றங்கள் தொடர்பான மதீப்பீட்டு முறையொன்று அறிமுகப்படுத்தப்படும். அதற்கும் மேலதிகமாக முன்னர் நடைமுறையிலிருந்த பாடசாலைப் பரிசோதனைச் சேவையை ஆரம்பித்து, அதில் ஈடுபட்டுள்ளோர் பாடசாலைகளுக்குச் சென்று வழங்கப்படும் அறிக்கையை பாடசாலை அபிவிருத்தி சபையிடமும் கல்வி அதிகாரிகளிடமும் சமர்ப்பித்து முன்னேற்ற மதிப்பீடு தொடர்பிலும் கவனம் செலுத்தப்படும்.

இரண்டு அல்லது மூன்று வருடங்களுக்கு ஒருமுறை ஆசிரியர்களைத்தெளிவுபடுத்துவதற்கான நடைமுறையொன்று ஏற்பாடு செய்யப்படும். சிறந்த ஆசிரியர்கள் சேவையில் இருந்தால் மாத்திரமே, கல்வியின் மூலமான இலக்கை வெற்றிகொள்ளலாம். எதிர்வரும் 5 வருடங்களில் இந்தக் கல்வி மறுசீரமைப்பு மேற்கொள்ளப்படும். - என்றார்.

(ஐ - 10)

## மீதொட்டமுல்ல இடர் பாதிப்புக்கள் தொடர்பில்

# ஆணைக்குழுவுக்கு எவரும் அறிக்கை சமர்ப்பிக்க முடியும்

கொழும்பு, மே 20

மீதொட்டமுல்ல குப்பை மேடு சரிந்து விழுந்த இடரால் ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பில் எதிர்வரும் ஜீன் 27 ஆம் திகதிக்கு முன்னர் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடுகளைச் சமர்ப்பிக்க முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மீதொட்டமுல்ல இடர் தொடர்பில் ஆராய்வதற்கென அரச தலைவர் ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன இந்தத் தனிநபர் ஆணைக்குழுவுக்கு முன்னாள் மேன் முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் கலாநிதி சந்திரதாஸ நாணயக்காரவை நியமித்துள்ளார்.

மீதொட்ட முல்ல இடர் தொடர்பில் விரிவான முறையில் ஆராய்ந்து அறிக்கையை சமர்ப்பிப்பது இந்தக் குழுவின் பொறுப்பாகும். மீதொட்டமுல்ல இடர் தொடர்பில் எழுத்து மூலம் தகவல்களையோ, முறைப்பாடுகளையோ சமர்ப்பிக்குமாறு ஆணைக்குழுவின் தலைவர் மக்களையும், பொது அமைப்புக்களையும் கேட்டுள்ளார்.

மூன்று மொழிகளிலும் முறைப்பாடுகள் ஏற்றுக் கொள்ளப்படவுள்ளன. கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் அமைந்துள்ள இந்த ஆணைக்குழுவுக்குத் தகவல்களையும், முறைப்பாடுகளையும் அனுப்பி வைக்க முடியும்.

எதிர்வரும் ஜீன் மாதம் 27 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர், மீதொட்டமுல்ல இடரால் ஏற்பட்ட சேதங்கள் பற்றி ஆராயும் குழு நான்காவது பிரிவு, பண்டாரநாயக்க ஞாபகார்த்த பன்னாட்டு மாநாட்டு மண்டபம் பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 07 எனும் முகவரிக்கு முறைப்பாடுகளை அனுப்பி வைக்க முடியும்.

பின்னனி

கொலன்னாவ மீதொட்டமுல்லவில் இருந்த 300 அடி உயரமுள்ள குப்பை மேட்டின் உச்சியில் ஏப்ரல் மாதம் 14 ஆம் திகதி தீ விபத்து ஏற்பட்டது. தீ விபத்தை அடுத்து குப்பை மேடு அருகில் இருந்த வீடுகளுக்கு மேல் சரிந்து விழுந்தது. இதில் 30க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்ததுடன் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பாதிப்படைந்தனர்.

(ஐ -10)

# யோசிதவின் மனு மீதான விசாரணை அடுத்த வாரம்

கொழும்பு, மே 20

வெளிநாடு செல்வதற்கு அனுமதி வழங்குமாறு கூறி யோசித ராஜபக்ச மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார். அவருடைய மனுவை எதிர்வரும் 23 ஆம் திகதி விசாரணைக்கு எடுப்பதற்கு கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

நிதி மோசடிக் குற்றச்சாட்டில் பிணை வழங்கப்பட்டுள்ள யோசித ராஜபக்ச, வெளிநாடு செல்வதற்கு தடை விதித்து கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

சிகிச்சை பெறுவதற்காக இரண்டு மாத காலத்துக்கு ஆஸ்திரேலியா செல்ல வேண்டி இருப்பதால், வெளிநாடு செல்வதற்கான தடையை நீக்குமாறு யோசித ராஜபக்சவின் சட்டத்தரணி நீதிமன்றில் கோரியிருந்தார். குறித்த கோரிக்கை தொடர்பில் சட்ட மா அதிபரின் ஆலோசனையைப் பெற்று விளக்கமளிப்பதற்கு காலம் வழங்குமாறு, அரச தரப்புச் சட்டத்தரணி கேட்டுக் கொண்டதற்கிணங்க, எதிர்வரும் 23ம் திகதி வழக்கை மீண்டும் விசாரிக்க நீதிபதி ஏ.ஆர். ஹெய்யன்துடுவ தீர்மானித்தார்.

(ஐ - 10)

# ஹெரோயின் கடத்த முற்பட்ட இளைஞன் கைது

கொழும்பு, மே 20

திருகோணமலைச் சிறைச் சாலைக்குள் ஹெரோயின் கடத்த முற்பட்ட 20 வயது இளைஞர் ஒருவர் துறைமுகப் பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த இளைஞன் கைதி ஒருவருக்கு , பற்பசைப்பைக்கற்றுக்குள் அடைக்கப்பட்ட 100 மில்லிகிராம் ஹெரோயினை உணவுப் பொதிக்குள் மறைத்து வழங்க முற்பட்டார்.

"எனக்கும், இந்தக் கடத்தலுக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை. எனக்கு அறிமுகமான ஒருவரே பொதி ஒன்றைக் கொடுத்து என்னை அனுப்பினார்" என்று கைது செய்யப்பட்ட இளைஞர் வாக்குமூலம் அளித்துள்ளார்.

அதனையடுத்து இந்தக் கடத்தலுடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரியைக் கைது செய்யும் நடவடிக்கையில் துறைமுகப் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (ஐ - 10)

வாடகைக்குண்டு
வெள்ளவத்தை இராமகிருஸ்ணா கோயிலுக்கு அண்மையில் இரண்டு அறைகள் Hall, Kitchen, 2 Toilets, Flat வாடகைக்கு உண்டு.
071 520 1751 (C/78779) (22,18)

வீடு விற்பனைக்கு
யாழ்ப்பாணம், கொழும்புத்துறை வீதி, பாண்டியந்தாழ்வில் 1½ பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு.
077 614 6434 (C/78779) (27,18)

வீடு வாடகைக்கு தேவை
யாழ்ப்பாணம் மத்திய பகுதியை அண்டிய பகுதியை அல்லாமல் குடும்பம் ஒன்றிற்கு வீடு வாடகைக்கு தேவை.
077 389 5395/ 076 667 4945

வாடகைக்கு
நல்லூரில் அனெக்ஸ் வாடகைக்கு உண்டு, தனி அறை, சிறிய குசினி, இணைந்த குளியலறை, திறந்த விறாந்தை வாடகைக்குண்டு.
011 236 2611 (CS-3697) (22,17)

காணி விற்பனைக்கு
கல்வியங்காடு, 3 ஆம் கட்டையடி, பருத்தித்துறை வீதியில் இரண்டு பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
R.நகுலேந்திரன் 077 183 7261,
சி.யோதிலிங்கம் 071 801 9175

காணி விற்பனைக்கு
கல்வியங்காடு, 3 ஆம் கட்டையடி, மதவடிச் சந்தி ஒழுங்கையில் நான்கு பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
R.நகுலேந்திரன் 077 183 7261,
சி.யோதிலிங்கம் 071 801 9175


நல்லூர்க் கந்தன் திருமண சேவை
எல்லா மதம், எல்லா இனம், வெளிநாடு, உள்நாடு ஆகிய சகல திருமணங்களும் எம்மால் செய்து கொடுக்கப்படும்.
இல.303, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
வி.ஜெயந்தி T.P: 077 9733 183, 021 227 1468

தேவை
Lovely Natural Flower Center
இக்கு வேலைக்கு பெண்கள் தேவை.
(பூமாலை கட்டத் தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது)
077 400 5023 (AJA CS 4089) (14)

அச்சக வேலைக்கான உடனடி வேலைவாய்ப்பு
யாழ்ப்பாணத்தில் இயங்கும் அச்சகம் ஒன்றுக்கு புத்தகம் கட்டுவதில் (Book Binding) அனுபவம் வாய்ந்த பெண் வேலையாளர்கள் தேவை. பழக விரும்புபவரும் விரும்பத்தக்கது. சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.
சுய ஆவணகளுடன் 23.05.2017 அன்று 10.00 மணிக்கு நேரில் வரவும்.
மானிப்பாய் வீதி, ஆறுகால்மடம் சந்தி
077 392 0797

மணமகள் தேவை
*1982இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 13¼ பாவமுடைய கனடா பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்குப் படித்த அழகான மணமகள் தேவை.
*1987 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 9½ பாவமுடைய ஆஸ்திரேலியா பிரஜா உரிமை பெற்ற PhD எஞ்சினியர் மணமகனுக்கு எஞ்சினியர் மணமகள் தேவை.
*1982 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 26¾ பாவமுடைய நோர்வே பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்குப் படித்த அழகான மணமகள் தேவை.
*1983 இல் பிறந்த 8 இல் செவ்வாய் 25 பாவமுடைய பெல்சியம் பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்குப் படித்த மணமகள் தேவை.
*1986 இல் பிறந்த 4 இல் செவ்வாய் 66 பாவமுடைய கனடா பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்குப் படித்த மணமகள் தேவை.
கமலக்கண்ணன் திருமண சேவை
இல.62, இராமலிங்கம் வீதி
பூங்கனிச் சோலையடி, முடமாவடி.
077 607 0862

செவிப்புலனுக்கான முழுமையான தீர்வுகள்
"இலவச செவிப்புலன் பரிசோதனை மற்றும் காது கேட்க வைக்கும் கருவிகளைப் பொருத்திப் பரீட்சித்தல்"
நவீன தொழில்நுட்பத்துடன் தயாரிக்கப்பட்ட கேட்க வைக்கும் கருவிகள்
Behind the ear (BTE) | Ultra Small BTE | Moxi Kiss BTE | Completely in the ear (CIC) | Micro CIC | Full Shell | Half Shell and Canal




மற்றும் இலவச கண்பார்வை பரிசோதனை (Free Vision Test)
தெரிவு செய்யப்பட்ட மூக்குக் கண்ணாடிகள் மற்றும் காதுகேள் கருவிகளுக்கு 50% வரை விலைக்கழிவுகள்.
J.M.விக்கிரமராச்சி அன் கம்பனி
No.178, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
021 221 9288 / 021 222 8109
(AJA/CS/4084)(11)

## சைட்டம் கல்லூரியில் புதிய மாணவர்களுக்கு அனுமதி

கொழும்பு,மே 20
மாலபே தனியார் மருத்துவக் கல்லூரியின் (சைட்டம்) புதிய கல்வியாண்டுக்கான மாணவர் அனுமதி தொடர்ந்து நடைபெற்று வருகிறது என்று கல்லூரியின் பதிவாளர் திருமதி ஹூஸ்னி ஹூசேன் தெரிவித்தார்.

மாணவர் அனுமதியை இடைநிறுத்துமாறு அரசிடமிருந்து இதுவரை எந்த அறிவிப்பும் வரவில்லை. வழக்கம் போலவே ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியான பின்பு மாணவர்களுக்கான அனுமதி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, அரச தலைவர் செயலகம் தனியார் மருத்துவக் கல்லூரியின் புதிய அனுமதிகளை இடைநிறுத்துமாறு அறிவித்தல் கொடுத்திருந்த போதிலும், சைட்டம் நிர்வாகம் அதனை உதாசீனம் செய்துள்ளது என்று அரச மருத்துவர் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது. (ஐ)

# கைக்குண்டுத் தாக்குதல்களால் எம்மை எவரும் மிரட்ட முடியாது

### இலங்கை மருத்துவ சபைத் தலைவர் தெரிவிப்பு

கைக்குண்டுத் தாக்குதல்களால் எங்களை மிரட்டவோ, எங்களது போராட்டங்களைப் பலவீனப்படுத்தவோ எவராலும் முடியாது. இவ்வாறு இலங்கை மருத்துவ சபைத் தலைவர் பேராசிரியர் காலோ பொன்சேகா தெரிவித்தார்.

இலங்கை மருத்துவ சபையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

மிரட்டல்களும், அடக்குமுறைகளும் எங்களுக்குப் புதிதல்ல. ஏற்கனவே இவ்வாறான பல அசம்பாவிதங்களை நாங்கள் சந்தித்திருக்கின்றோம். மருத்துவக் கல்வியின் தரத்தை நிர்ணயிக்கும் உரிமை மருத்துவச் சபைக்கு மாத்திரமே உரியது. அத்துடன், மருத்துவர்களின் ஒழுங்குமுறையை நிர்வகிப்பதும் எங்களது பொறுப்பு. மாலபே தனியார் மருத்துவக் கல்லூரி (சைட்டம்) தொடர்பில் பல்வேறு சட்டச்சிக்கல்கள் உள்ளன. அரசு இந்தவிடயத்தைசுமுகமாகத் தீர்க்க முயற்சி செய்து வருகின்றது- என்றார். (ஐ)

## நாட்டின் சில பகுதிகளில் அடைமழை தொடரும்

### வளிமண்டலவியல் திணைக்களம் அறிவிப்பு

கொழும்பு,மே 20
நாட்டின் குறிப்பிட்ட சில பகுதிகளில் கடும் மழையுடன் கூடிய சீரற்ற காலநிலை இன்னும் சில நாள்களுக்குத் தொடரும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

மத்திய,சப்ரகமுவ, மேல், வடமேல் மற்றும் தென்மாகாணங்களில் கடும் காற்றுடனும், இடியுடனும் கூடிய மழைபெய்யுமென்று வானிலை அதிகாரியான மொஹமட் சாலிதின் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"தென்மேல் பருவப்பெயர்ச்சிக் காற்று வீசுவதால், தென்மேற்குப் பிராந்தியங்களில் மழைபெய்யும். சில இடங்களில் 100 மி.மீ. மழைவீழ்ச்சி பதிவாகக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. மலைநாட்டுப் பகுதியில் மணிக்கு 50 கி.மீ. வேகத்தில் பலத்த காற்றுவீசும்.

கரையோரப் பகுதிகளிலும் காற்றுவீசும் சந்தர்ப்பமும் அதிகமாக உள்ளது. இடிமின்னல் தாக்கத்தின் அபாயமிருப்பதால், மக்கள் அவதானமாகச் செயற்பட வேண்டும் மீனவர்களும் கடலுக்குச் செல்வது குறித்து அவதானமாக இருக்க வேண்டும். அடிக்கடி வானிலை அறிவிப்புகளைக் கேட்டறிய வேண்டும்" என்றார். (ஐ)

## நன்றி நவிலல்

கடந்த 18.04.2017 செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவி

**அமரர் மனோன்மணி தங்கராஜா**



அவர்களின் இறுதிச்சடங்கில் பங்கேற்றவர்களுக்கும், துண்டுப்பிரசுரம் பதாகைகளை வெளியிட்டு எமது குடும் பத்தாரைப் பெருமைப்படுத்திய முருக மூர்த்திப்பிள்ளையார் கோயில் நிர்வாகசபை, திருப்பணிச்சபை யினருக்கும் மற்றும் முருகமூர்த்தி இளைஞர்களுக்கும், அயலவர்களுக்கும், நண்பர்களுக்கும் வெளிநாட்டில் இருந்து தொலைபேசி மூலமாக அனுதாபம் தெரிவித் தோருக்கும் மற்றும் பல்வேறு வகையில் உதவிகள் பல புரிந்த அயலவர்களுக்கும், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட வேளையில் சிகிச்சை அளித்த வைத்தியர்கள், தாதியர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, அந்தியேட்டிக் கிரியைகளில் பங்குபற்றியோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

64/7, முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## மலையக மக்கள் முன்னணியின் மத்திய செயற்குழுக்கூட்டம் நாளை

கொழும்பு,மே 20
மலையக மக்கள் முன்னணியின் மத்திய செயற்குழுக்கூட்டம் அதன் தலைவர் கல்வி இராஜாங்க அமைச்சர் வீ. இராதாகிருஷ்ணன் தலைமையில் நாளை இடம்பெறவுள்ளது. கட்சி மற்றும் தொழிற்சங்கத்தின் எதிர்கால நடவடிக்கைகளைப் பலப்படுத்துவது தொடர்பில் ஆராய்வதற்காகவே மத்தியகுழு கூடுகின்றது என்று அதன் பொதுச் செயலாளர் ஏ. லோறன்ஸ் தெரிவித்தார்.

"மே தினம், மோடியின் மலையகப் பயணம் உள்ளிட்ட செயற்பாடுகளால் கடந்த காலங்களில் கட்சி ரீதியான சந்திப்புகளை நடத்த முடியாமல் இருந்தது. இந்த நிலையிலேயே, கட்சியின் இளைஞர் முன்னணி, மகளிர் முன்னணி, ஆசிரியர் முன்னணி ஆகியவற்றைப் பலப்படுத்தும் நோக்கில் சந்திப்பு இடம்பெறவுள்ளது" என்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை, அரசமைப்பு மறுசீரமைப்பு, தேர்தல் உள்ளிட்ட விடயங்கள் பற்றியும் இதன்போது கலந்துரையாடப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## 30ஆவது ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
20
.
12
.
1943



உதிர்வு
16
.
05
.
1987

**அமரர் சட்டநாதர் சண்முகநாதன்**

(திமர் பரிசோதகர் இலங்கைப் போக்குவரத்துச் சபை)

ஆண்டுகள் முப்பதாகியும் அகலவில்லை எம் நெஞ்சங்களிலிருந்து பப்பாவின் நினைவலைகள். எம் ஏழுபேரையும் உலகுக்குக் காண்பித்த எங்கள் தந்தையை -இன்று எட்டுத் திசைகளிலும் வாழ்ந்தும் எல்லோரது பாராட்டும் கிடைத்தாலும் எங்களுக்கு உங்களது மறைவு என்றுமே அழியாது!!!

தசாப்தங்கள் மூன்று கடந்தாலும் நினைத்திருவோம்
என்றுமே உங்களை நன்றியுடன்!!!
உங்கள் ஆத்மா சாந்திக்காக இறைவனிடம் இறைஞ்சிடும் குடும்பத்தினர்

| | |
|---|---|
| மனைவி | :- திருமதி.ச.இந்திராணி |
| மகன் | :- சஞ்சீவன் |
| மகள்மார் | :- ராஜினி, சுமதினி, குமுதினி, தர்சினி, ஜெயந்தினி, அமிர்தினி |
| மருமகன்மார் | :- த.சுரேந்திரன்,ப.தேவதீபன்,ஆ.பிரபாச்சந்திரன், செ.ஜெயராஜ்,ஆ.பிரசாந்தன்,ச.திலீப்குமார், |
| மருமகள் | :- ச.நதீரா |
| பேரப்பிள்ளைகள் | :-அஸ்விரி அபிஷேக், தேவமதுஷா, தேவகனுஷன், கர்த்தருக்குள் நித்திரையடைந்த சந்திரிரி ரேசா, பிரயோதினி, சாலோன், ஜெனினா, ஒளிவியா, ஷமாரா, சனன் ஜோயல், ஒவேல். |

இல.22,ஒபன் சை, தெகிவளை,
கொழும்பு.

தகவல்:
ச.சஞ்சீவன் (மகன்)

## 15ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் இராசலிங்கம் அமரசோதி

மலர்வு
03.10.1948

உதிர்வு
05.06.2002

திதி: 20.05.2017

என்றும் உங்கள் நினைவுடன் உங்கள் ஆசீர்வாதத்தை வேண்டி நிற்கும்

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
117A, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குழி, யாழ்ப்பாணம்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**நடராசா இராசபூபதி**

மலர்வு
02.03.1943

உதிர்வு
31.05.2016

ஆண்டு ஒன்று வெகுவாய்
- கரைந்துவிட்டாலும்
எங்கள் நெஞ்சில் உங்கள் நினைவு
கல் போல் கரையாமல் இருக்கின்றது
எம் நினைவுகளில் மட்டுமல்ல
கனவுகளிலும் வந்து நித்தம்
எம்மோடு உறவாடிச் செல்கிறீர்கள்.
என்றும் உங்கள்
- நினைவுகளைத் தாங்கி
வாழும் உறவுகள்....

குடும்பத்தினர்.
மீசாலை மேற்கு,
மீசாலை (வயற்கரை)

# வடக்கு மக்களின் மீள்குடியமர்வுக்கு பேண்தகு நடவடிக்கைகள் தேவை

கொழும்பு.மே 20

மீள்குடியேற்றம் புனர்வாழ்வளிப்பு அமைச்சு, வடக்கு மக்களுக்கான மீள்குடிமர்வு தொடர்பில் பேண்தகு நடவடிக்கை எடுக்க வேண்டும். மாவட்டச்செயலக மட்டத்தில் மீள்குடியேற்ற உப செயலகம் ஒன்றைத் திறந்து வைக்க அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் முன்வரவேண்டும். இவ்வாறு சிறிலங்கா சுதந்திர கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கருணாகரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, வடக்கில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் உள்ளிட்ட மாவட்டங்களில் மீள்குடியேற்றம் தொடர்பான வேலைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

அங்கு மீள்குடியேற்றத்துக்கான காணி விடுவிப்பு, எல்லைநிர்ணயம், வீடு கட்டுவதற்கான உதவி, மலசலகூடம், வாழ்வாதாரம், வேலைவாய்ப்பு, இழந்த ஆவணங்களை மீளப்பெறுதல், முள்ளந்தண்டு வடம் பாதித்தோர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் இதனைவிட கல்வி, சுகாதார, நலச்சேவைகள் என பல பெரிய துறைகள் நீண்டு கொண்டு செல்கின்றன.

2009 மே மாதம் 18 ஆம் திகதி போர் ஓய்வுக்கு வந்த பின்னர் மீள்குடியேற்றம் புனர்வாழ்வளிப்பு என்ற சொற்றொடர் பயன்பாட்டில் உள்ளது.

இந்தச் சொற்றொடருக்கும் பேண்தகு அடிப்படையில் நடவடிக்கைகள் எடுத்து மக்களுக்கு வாழ்வாதார ரீதியான சகல சுபீட்சம் ஏற்படுத்த வேண்டும் எனின் மாவட்ட மட்டத்தில் மீள்குடியேற்ற உப செயலகம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு பொருத்தமான நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டு உயர் கருத்தாக்க அடிப்படையில் செயற்றிட்டங்களை முன்வைக்க வேண்டும்.

இந்த உப செயலகம் அமைப்பது தொடர்பில் மீள்குடியேற்ற அமைச்சர், அரசதலைவர், தலைமை அமைச்சர் ஆகியோரின் ஒத்தாசைகளுடன் முன்னெடுத்தால் மீள்குடியேற்றம் எனும் பெரிய பிரச்சினைக்கு உடன்தீ ர்வு எட்டலாம்.

முதற்கட்டமாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவிலும் இரண்டாம் கட்டமாக மன்னார், வவுனியாவிலும் இந்தச் செயற்றிட்டம் இடம்பெற வழிவகுக்க வேண்டும்.

இதனைவிட மாவட்ட மட்டத்தில் ஒரு சில அதிகாரிகள் தயாரிக்கும் திட்டம் கொழும்புக்கு வருவதால் எந்தத் திட்டமும் முழுமை பெறாது.

எனவே உயர் எண்ண சிந்தனையுடன் செயலாற்றி வலுக்கொடுக்க அமைச்சர் சுவாமிநாதன் விரைந்து முன்னெடுக்க வேண்டும் - என்றார். (ஐ-50)

# அமைச்சரவை மாற்றத்துக்கு அரச தலைவர் இணக்கம்

கொழும்பு, மே 20

நீண்ட நாள்களாக இழுத்தடிக்கப்பட்டு வரும் அமைச்சரவை மாற்றத்துக்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன இணக்கம் தெரிவித்துள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதனடிப்படையில், விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர, மின்வலுத்துறை அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய, கனிய எண்ணெய் வளத்துறை அமைச்சர் சந்திம வீரக்கொடி, நீர்ப்பாசனம் மற்றும் நீர்வள முகாமைத்துவ அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா ஆகியோருக்குப் பதவிகள் கிடைக்காமல் போகலாம் என்று கூறப்படுகிறது.



இந்த அமைச்சர்களில் ஒருவர் அமைச்சரவையில் இருந்து கொண்டு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவுக்கு அரசின் சகல தகவல்களையும் வழங்கி வருவதாக அரச புலனாய்வுச் சேவை உறுதிப்படுத்தியுள்ளது.

இந்த அமைச்சர் தொடர்பாக அரசதலைவர் கடும் வெறுப்பிலும், கோபத்திலும் இருப்பதாகச் சுதந்திரக் கட்சியின் தகவல்கள் கூறுகின்றன.

தமது பதவிகளில் திறம்படச் செயற்பட முடியாத காரணத்தால் ஏனைய அமைச்சர்கள் பதவிகளை இழக்கவுள்ளனர் என்று பேசப்படுகிறது.

இவர்களுக்குப் பதிலாக எஸ்.பி. திஸநாயக்க, சரத் அமுனுகம, டிலான் பெரேரா, திலங்க சுமதிபால ஆகியோர் நியமிக்கப்படவுள்ளனர்.

எவ்வாறாயினும் ஐக்கிய தேசியக் கட்சியினர் வகித்து வரும் பதவிகளில் எந்த மாற்றங்களும் மேற்கொள்ளப்பட மாட்டாது எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஐ-4)

# தொலைக்காட்சி நாடகங்களை மட்டுப்படுத்தச் செயற்றிட்டம்

கொழும்பு, மே 20

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் தொலைக்காட்சி நாடகங்களை மட்டுப்படுத்த முன்னெடுக்கப்படும் செயற்றிட்டம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. உள்நாட்டு திரைப்படத்துறை மற்றும் நாடகத்துறையின் உயர்வுக்காக இந்த நடைமுறை வருவதாகக் கூறப்பட்டது.

அரச தலைவருக்கும், கல்வியியலாளர்கள, கலைஞர்களுக்குமிடையிலான சந்திப்பு அரச தலைவர் செயலகத்தில் நேற்று நடைபெற்றது. இது தொடர்பில் அரச தலைவர் ஊடகப் பிரிவு அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கலை, பண்பாடு மற்றும் திரைப்படத்துறையின் எதிர்காலம் மற்றும் அவ்விடயம் தொடர்பில் முன்வைக் கப்படும் அறிஞர்களின் முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதற்குத் தொடர்ச்சியான செயற்றிட்டம் தேவை.

ஊடக, கலாசார மற்றும் கல்வி அமைச்சுக்களின் பிரதிநிதிகளைக் கொண்ட குழுவின் மூலம் அந்த செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு அரச தலைவர் ஆலோசனை வழங்கினார்.

காப்புரிமைப்பங்கு செலுத்துதல் தொடர்பான பிரச்சினை தொடர்பாகவும் இங்கு கலந்துரையாடப்பட்டது. குறித்த விடய அறிவுடைய நடுநிலையான அறிஞர்களின் ஆலோசனையைப் பெற்று அதற்கான அரச கொள்கையொன்றை உருவாக்குமாறு அரச தலைவர் ஆலோசனை வழங்கினார்.

ஜோன் டீ சில்வா கலையரங்கின் அபிவிருத்தி செயற்பாடுகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. கலாசார அமைச்சர் மற்றும் தொடர்புடைய அலுவலர்களின் பங்குபற்றுதலுடனான கலந்துரையாடலை ஏற்படுத்தி தொடர் நடவடிக்கை எடுக்குமாறு மைத்திரி ஆலோசனை வழங்கினார்.

அத்துறைகளை சீராக்குவதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும் கலைஞர்கள் கருத்துக்கள் மற்றும் யோசனைகளைத் தெரிவித்தனர்.

பாடசாலைப் மாணவர்களில் கலை ரசனையை மேம்படுத்துவதனூடாக அறிவும் விழுமியங்களும் நிறைந்த அடுத்த தலைமுறையை உருவாக்கலாம் எனவும் அரச தலைவர் தெரிவித்தார். அமைச்சர்களான எஸ்.பீ.நாவின்ன, கயந்த கருணாதிலக்க, அகில விராஜ் காரியவசம் ஆகியோரும் அமைச்சு செயலாளர்கள்,அரச அலுவலர்கள் மற்றும் கலைஞர்களும் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர். என்றுள்ளது. (ஐ-4)

# பியர் விற்பனை யாழில் தடை செய்ய வேண்டும்

*பொது அமைப்பின் பிரதிநிதிகள் கோரிக்கை*

யாழ்ப்பாணம்,மே 20

கால் போத்தல் சாராயம் மற்றும் சிறிய அளவிலான பியர் ரின் யாழ். குடாநாட்டில் விற்பனை செய்வதைத் தடை செய்ய சட்டம் இயற்றப்பட்டு நடைமுறைப்படுத்த வேண்டும்.

இவ்வாறு மூன்றாண்டு சிறுவர் நலஅபிவிருத்தி தொடர்பில் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்து கொண்ட பொது அமைப்பின் பிரதிநிதிகள், அரச அலுவலர்கள் கூட்டாகக் கேட்டுக் கொண்டனர்.

சிறுவர்களின் போஷாக்கு மட்டம் மற்றும் வறுமை நிலை தொடர்பில் மூன்றாண்டு அபிவிருத்தித் திட்டம் சங்கானை பிரதேச வேள்ட்விசன் நிறுவனத்தால் நேற்று முன்தினம் 18 ஆம் திகதி ரில்கோ விருந்தினர் விடுதியில் தயாரிக்கப்பட்டது.

யாழ். வேள்ட்விசன் திட்டமுகாமையாளர் ஜி.ஜே அனுராஜ் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்ட மக்கள் பிரதிநிதிகள் கூட்டாகக் கருத்து தெரிவிக்கையில்,

சங்கானையில் மட்டுமன்றி ஏனைய பிரதேசங்களிலும் அதிகரித்த வறுமை, போசாக்கு மட்டம் குறைவு, மாணவர்கள் நலிவுற்று இருத்தல், இளம் சமூகத்தின் பாதிப்பு என்பன தொடர்பில் ஆராயப்பட்டது.

இதன்போது இன்றைய இளம் சமூகத்தினர், ஏன் பாடசாலை செல்லும் மாணவர்கள், இளவயதினர் கால்போத்தல் சாராயத்தை, சிறிய பியர் ரின்களை கடைகளில் வாங்கித் தமது காற்சட்டையில் மறைத்து சென்று மறைவான இடங்களில் குடித்து விட்டுப் போதையில் செல்கின்றனர். இதனால் சமூகச் சீர்கேடு அதிகரித்த வண்ணம் உள்ளது.

எனவே சிறிய போத்தல்கள், ரின்களில் வரும் மது மற்றும் பியர் போன்ற மதுசார விற்பனைகளை யாழ். குடாநாட்டில் விற்பனை செய்வதைத் தடை செய்ய சட்டம்இயற்றப்படவேண்டும்.

எனவே சம்பந்தப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த விடயத்தை ஆராய்ந்து கூடுதல் முக்கியத்துவம் அளிப்பதன் ஊடாகவே இனிவருங்காலத்தில் ஆவது சிறந்த சமூக உருவாக்கத்துக்கு வழிகோலும்என தெரிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் சங்கானை பிரதேச சமூக மட்ட பிரதிநிதிகள், பிரதேச செயலக கிராம அலுவலர்கள், உதவி பிரதேசசெயலாளர், உதவி திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகள் வேள்ட்விசன் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இதில் குடும்ப வறுமை போஷாக்கு அடைவுமட்டம், சுத்தமான குடிதண்ணீர், சிறுவர்துஷ்பிரயோகம், குடும்ப பாதுகாப்பு ஆகிய 5 முக்கிய தலைப்புக்களில் பெறுபேற்றை அடிப்படையாகக் கொண்ட (RFW) ஆய்வு முறையில் திட்டம் தயாரிக்கப்பட்டது. (ஐ-50)

## மரண அறிவித்தல்



### முத்துக்குமாரு ஜெயரட்ணம்

**(பிரபல வர்த்தகர்)**

யாழ் உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும் , கனடாவை வதிவிடமாகவும் கொண்ட ஜெயரட்ணம் முத்துக்குமார் (பிரபல வர்த்தகர் -உரும்பிராய்சந்தி)15.05.2017திங்கட்கிழமைகனடாவில்காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துக்குமார் - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான ஜெயக்குமார் (இலங்கை), ஜெயரூபி (இலங்கை), மற்றும் ஜெயரூபன் (கனடா), ஜெயக்கொடி (கனடா), ஜெயமுகுந்தன் (கனடா), ஜெயலலிதா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சரஸ்வதி (கனடா), பரமேஸ்வரி (ரத்ணம் - இலங்கை), காலஞ்சென்ற சுந்தரலிங்கம் (பேபி - இலங்கை), புவனேஸ்வரி (பிள்ளை - இலங்கை), சுந்தரமூர்த்தி (இலங்கை), யோகலிங்கம் (கண்ணன் - லண்டன்), மகேஸ்வரி (குஞ்சு - கனடா), சுப்பிரமணியம் (இலங்கை) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்ற நாதன் (இலங்கை), மற்றும் நகுலச்சந்திரன் (கனடா), சகுந்தலாதேவி, (இலங்கை), அபிராமிதேவி (கனடா), ஏஞ்சல் (கனடா), நிரஞ்சனா (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஜெயப்பிரவின், ஜெயகரன், இந்துயா, நதியா, ஜெசிக்கா, ஜெயன், ஜெப்திக்கா, ஜெத்ரோ, ஜெதுசன், ஜெயமீரா, ஜெனு, ஜெரூஸ், ஜவாகர் ஆகியோரின் அன்புப் பேரனும், ஷ்சானி அவர்களின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (20.05.2017) சனிக்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சிவகுல வீதி,**
**உரும்பிராய் தெற்கு,**
**உரும்பிராய்.**

தகவல்:
**முத்துக்குமாரு குடும்பம்**

## மரண அறிவித்தல்



### ஞானப்பிரகாசம் கிறிஸ்ரி இராஜநாயகம் (மெக்கானிக் கிறிஸ்ரி)

யாழ்ப்பாணம் மூளாய் லேனைப் பிறப்பிடமாகவும் மத்தியூஸ் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட ஞானப்பிரகாசம் கிறிஸ்ரி இராஜநாயகம் (மெக்கானிக் கிறிஸ்ரி), 16.05.2017 செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வே.ஞானப்பிரகாசம் - ஞா.மரியம்மா தம்பதியரின் சிரேஷ்ட/ புதல்வனும், றோக்மலர், றீற்றா, காலஞ்சென்றவர்களான இக்னேசியஸ், அன்ரன், லெஸ்லி மற்றும் ஜெகநாதன், பற்றிக் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், மேரி பற்றிமாவின் அன்புக் கணவரும், யூட் அனுராஜ், கிறிஷாந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், கரோலின் (டோட்டி), திலக் ஆகியோரின் அன்பு மாமனும், லேயா, ஜெய்டன், ஜெய்சன்,அஜய் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி யாத்திரைத் திருப்பலி புனித மரியன்னை பேராலயத்தில் 18.05.2017 வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மத்தியூஸ் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

**021 320 5515**

# தீர்வு வழங்காவிடின் மீண்டும் போராடுவோம்

## பெற்றோலியத் தொழிற்சங்கங்கள் எச்சரிக்கை

கொழும்பு,மே 20
"நாங்கள் ஏற்கனவே முன்வைத்த கோரிக்கைகளுக்கு இதுவரை எந்தவித தீர்வும் வழங்கப்படவில்லை. எதிர்வரும் 22ஆம் திகதிக்கு முன்னர் உரிய தீர்வுகள் வழங்கப்படாவிட்டால் மீண்டும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவோம்" இவ்வாறு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தொழிற்சங்கங்கள் அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளன.
இது குறித்துத் தொழிற்சங்கங்கள் மேலும் தெரிவித்ததாவது,
"திருகோணமலை எண்ணெய்த் தாங்கிகளை இந்தியாவுக்குக் கையளிப்பதை நிறுத்துதல், அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கான எண்ணெய் விநியோகப்பணிகளை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு வழங்குதல், சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை நவீனமயப்படுத்துதல் ஆகிய மூன்று பிரதான கோரிக்கைகளின் கீழ் முன்னெடுக்கப்பட்ட பணிப்புறக்கணிப்பு , தலைமை அமைச்சர் ரணில் விக்கிரம சிங்கவின் எழுத்து மூல உறுதி மொழியையடுத்து தற்காலிகமாகக் கைவிடப்பட்டது. எனினும், அந்த உறுதிமொழி இதுவரை நிறைவேற்றப்படவில்லை. எனவே, எதிர்வரும் திங்கட்கிழமைக்கு முன்னர் எங்களது கோரிக்கைகளுக்கு உரிய தீர்வுகள் வழங்கப்படாவிட்டால், மறு அறிவித்தல் எதுவுமின்றி மீண்டும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்" - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பை வழங்கும் பொறுப்பு அரசுக்குரியது

*கல்வி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு*

கொழும்பு,மே 20
இந்த நாட்டில் இருக்கின்ற சிறுபான்மைச் சமூகங்களுக்கான உரிய பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பு அரசுக்கே உள்ளது. மகிந்த ராஜபக்ச அரசில் சிறுபான்மையினருக்கு எதிராகச் செயற்பட்ட ஞானசார தேரர், கூட்டரசின் ஆட்சியிலும் அதேபோன்றே செயற்படுகின்றார். அவரது செயற்பாடுகள் தொடர்பாக அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அவர் அமைச்சர் மனோ கணேசனின் அமைச்சுக்குச் சென்று அமைச்சரை அச்சுறுத்தியமையானது , மிகவும் கண்டிக்கத்தக்க ஒரு விடயம். தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவர் என்ற வகையில் இதனை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன். இவ்வாறு கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
அமைச்சர் மனோ கணேசன் இந்தக் கூட்டரசை ஆட்சிக்குக் கொண்டு வருவதற்கு முழுமையாகத் தன்னை அர்ப்பணித்துச் செயற்பட்ட ஒருவர். அவருடைய அமைச்சுக்கு, பௌத்த துறவி ஒருவர் சென்று அவரை அச்சுறுத்தி, "ஒரு தமிழர் இந்த அமைச்சில் இருக்க கூடாது. ஒரு பெரும்பான்மையினத்தவரே இருக்க வேண்டும்" எனக் கூறியிருப்பது மிகவும் கண்டிக்கத்தக்க ஒரு நிகழ்வாகும். அவருக்கு இந்த அதிகாரத்தைக் கொடுத்தது யார்?இதே செயலை ஒரு இந்து மதத்தைச் சேர்ந்த ஒருவரோ அல்லது கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த ஒருவரோ அல்லது முஸ்லிம் மதத்தைச் சேர்ந்த ஒருவரோ செய்திருந்தால் இன்று அவர்களின் நிலமை என்ன?
பௌத்த துறவிகள் என்பவர்கள் விகாரைகளில் இருந்து மத போதனைகளைச் செய்ய வேண்டும். அதை விடுத்து சண்டியர்களைப்போலச் செயற்படுவதானது, அந்த மதத்துக்குப் பங்கம் விளைவிக்கும் ஒரு செயலாகவே கருத வேண்டியுள்ளது. எமது நாட்டில் பன்னாட்டு வெசாக் தினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு ஒரு சில நாள்களில், இவ்வாறான ஒரு சம்பவம் நடந்திருக்கின்றமையானது வருத்தத்துக்குரிய ஒரு விடயமாகும். இது திட்டமிட்ட அடிப்படையில் எமது கூட்டரசுக்குச் சேறு பூசும் வகையில் நடத்தப்பட்டதா?என்ற சந்தேகமும் எழுகின்றது.
மேலும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் அமைச்சருமான மனோகணேசனுக்கு ஏற்பட்ட இந்த நிலமை நாளை எங்களுக்கும் ஏற்படலாம். எனவே இந்தச் செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்துவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அதே நேரத்தில் ஞானசார தேரர் கூறுவது போல அல்லாமல் பௌத்த மதம் என்பது இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வந்த ஒரு மதம்.
மேலும் உலகில் பல்வேறு நாடுகளில் பௌத்த மதம் பின்பற்றப்படுகிறது. எனவே இந்த மதம் தனியே சிங்களவர்களுக்கு மாத்திரம் சொந்தமான ஒரு மதம் என்று கூற முடியாது. அது எந்த மதமாக இருந்தாலும் அதே நிலை தான்.
அது இந்து மதமாக இருந்தால் என்ன, முஸ்லிம் மதமாக இருந்தால் என்ன, கிறிஸ்தவ மதமாக இருந்தால் என்ன ஒரு தனிப்பட்ட இனத்துக்கோ, சமூகத்துக்கோ குறித்தொரு மதம் சொந்தமானது அல்ல. இன்று மீண்டும் ஒரு முஸ்லிம் எதிர்ப்பு இயக்கம் உருவாகியிருக்கின்றது.
இதனை அரசு தடுத்து நிறுத்த வேண்டும். கடந்த சில நாள்களாக முஸ்லிம்களின் வியாபார நிலையங்கள் திட்டமிட்ட அடிப்படையில் சேதமாக்கப்பட்டன. இது மீண்டும் மகிந்த ஆட்சியை நினைவுபடுத்துகின்றது.
கடந்த கால அரசு இவ்வாறான செயற்பாடுகளைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காததன் காரணமாகவே, அந்த ஆட்சியை மக்கள் ஓரம் கட்டியிருக்கின்றார்கள். இந்த அரசு முறையான நடவடிக்கைகளை எடுக்காவிட்டால் கூட்டரசும் பல சிக்கல்களைச் சந்திக்க வேண்டிவரும். எனவே இது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் - என்றார். (ஐ)

## குறைந்த வருமானம் பெறும் மின் பாவனையாளர்களுக்கு மின்குமிழ்கள் வழங்க ஏற்பாடு

கொழும்பு,மே 20
குறைந்த வருமானம் பெறும் சுமார் 38 இலட்சம் பாவனையாளர்களுக்கு எல்.ஈ.டீ. மின்குமிழ்களை வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது இவ்வாறு மின்சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்திகள் அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.
அமைச்சரது அமைச்சரது அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
நாட்டில் சுமார் 38 இலட்சம் மக்கள் சாதாரண மின்குமிழ்களையே பாவித்து வருகின்றனர். அவை எல்.ஈ.டீ. மின்குமிழ்களை விட 70 விகிதம் அதிக மின்சாரத்தை விரயம் செய்கின்றன.
எல்.ஈ.டீ. மின்குமிழ்களின் விலை அதிகம் என்பதால், குறைந்த வருமானம் பெறுபவர்களால் அவற்றை வாங்க முடிவதில்லை. எனவே, எமது அமைச்சின் மூலம் அவற்றை வழங்கி , 24 மாதங்களில் அதன் பெறுமதியை மாதாந்தம் அறவிடலாம். மொத்தப் பெறுமதி மின் கட்டணப் பட்டியலில் சேர்க்கப்பட்டு , மாதாந்தம் தவணை முறையில் கழிக்கப்படும். இந்தத் திட்டத்துக்கு சம்மதம் தெரிவிப்பவர்களுக்கு மட்டுமே இந்தச் சலுகை வழங்கப்படும் - என்றார். (ஐ)

## மைத்திரிக்கு யாழ்ப்பாணத்தில் கால்பதிக்க முடியாத நிலமை

### கவலைப்படுகிறார் மகிந்த

கொழும்பு, மே 20

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன யாழ்ப்பாணத்தில் கால் பதிக்க அனுமதியற்ற ஒரு நிலை உருவாகியுள்ளது என்று முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.
ரத்மலானை விகாரை ஒன்றில் இடம் பெற்ற சமய நிகழ்வொன்றுக்குப் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது, இராணுவத்தினர் உயிரைப் பணயம் வைத்து நாட்டுக்குச் சமாதானத்தைப் பெற்றுத் தந்தனர். அதனை இன்று பலர் மறந்துள்ளனர். உயிரைப் பணயம் வைத்துப் பெற்றுக்கொண்ட சுதந்திரம் பாதுகாக்கப்படவேண்டியது மிக அவசியமானதாகும். நாட்டில் தற்போது உருவாகியுள்ள நிலமை கவலைக்கிடமானது - என்றார். (ஐ-10)

## மத்திய மாகாணத்தில் மீண்டும் டெங்கு அபாயம்

*மத்திய மாகாண சுகாதாரப் பணிப்பாளர் தெரிவிப்பு*

கொழும்பு,மே 20
மத்திய மாகாணத்தில் மீண்டும் டெங்குத் தொற்று மிக வேகமாகப் பரவி வருகிறது. இவ்வாறு மத்திய மாகாண சுகாதாரப் பணிப்பாளர் மருத்துவர் திருமதி சாந்தி சமரசிங்க தெரிவித்தார்.
இலங்கை முழுவதிலும் டெங்குக் காய்ச்சல் பரவி வரும் நிலையில், மத்திய மாகாணத்தின் நிலமை தொடர்பில் அவரிடம் வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது,
கடந்த மாதங்களில் மத்திய மாகாணத்தில் டெங்குக் காய்ச்சல் பரவும் வேகம் குறைந்திருந்தது. சில தினங்களாக மழை பொழிய ஆரம்பித்ததால் மீண்டும் டெங்குக் காய்ச்சல் தலை தூக்க ஆரம்பித்துள்ளது.
கண்டி மாநகரசபைப்பிரிவு, மற்றும் மாத்தளை மாநகரசபைப் பிரிவு ஆகிய பிரதேசங்களில் டெங்கு நோய் தீவிரமாகப் பரவி வருகிறது. அதனைத் தவிர கம்பளை, யட்டிநுவர, அக்குறணை, பூஜாபிட்டிய, உக்குவளை ஆகிய பிரதேசங்களும் டெங்கு வேகமாகப் பரவும் பிரதேசங்களாக இனம் காணப்பட்டுள்ளன.
மத்திய மாகாணத்தில் இதுவரை 2 ஆயிரத்து 89 டெங்கு நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர். அதில் நால்வர் உயிரிழந்தனர். கண்டி மாவட்டத்தில் ஆயிரத்து 492 நோயாளர்களும், மாத்தளை மாவட்டத்தில் 517 டெங்கு நோயாளர்களும், நுவரெலியா மாவட்டத்தில் 180 நோயாளர்களும் இனம் காணப்பட்டுள்ளனர். அவர்களுள் கண்டி மாவட்டத்தில் மூன்று பேரும் , மாத்தளை மாவட்டத்தில் ஒருவரும் உயிரிழந்தனர்.
டெங்கு நுளம்பு பரவும் இடங்களை அழித்து டெங்கைக் கட்டுப்படுத்துவதற்கு அரச தரப்பினரின் உதவி கிடைத்த போதும் , பொது மக்கள் இது தொடர்பில் கவனம் செலுத்துவது மிகவும் குறைவு. இதுவே டெங்கைக் கட்டுப்படுத்துவதற்கு உள்ள பெரிய தடை- என்றார். (ஐ)

## யானை தாக்கி 5 வயதுச் சிறுமி சாவு: இருவர் படுகாயம்

கொழும்பு, மே 20
யானைத் தாக்குதலுக்கு உள்ளான சிறுமியொருவர் உயிரிழந்தார். ஒன்றரை வயதுக் குழந்தை உட்பட இருவர் படுகாயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் அநுராதபுரம், கல்கிரியகம பகுதியில், நேற்று அதிகாலை இடம்பெற்றது. இதில் ஐந்து வயதுச் சிறுமியொருவரே உயிரிழந்தார். சிறுமியின் ஒன்றரை வயதுத் தங்கையும், பாட்டியும் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
பாட்டியுடன், பாலர் பாடசாலைக்குச் சென்றுக் கொண்டிருந்தவர்கள், யானைத்தாக்குதலுக்கு உள்ளாகினர். மூவரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் ஐந்து வயதுச் சிறுமி உயிரிழந்தார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-10)

# சகல மாகாணங்களிலும் ஒரே நாளில் தேர்தல்

## அமைச்சர் சுசில் குணரத்ன தெரிவிப்பு

கொழும்பு, மே 20
சகல மாகாணங்களிலும், மாகாண சபைத் தேர்தலை ஒரே தினத்தில் நடத்துவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது என்று வட மத்திய மாகாணத்தின் புதிய அமைச்சர் சுசில் குணரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"நாட்டிலுள்ள சகல மாகாணங்களுக்குமான ஆட்சிக் காலத்தை 2019 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் வரையில் நீடித்து, மாகாண சபைத் தேர்தல் ஒரே தினத்தில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அரசமைப்பின் 17 ஆவது சரத்தைத் திருத்தம் செய்து, நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

வட மத்திய, சப்ரகமுவ மற்றும் கிழக்கு ஆகிய மாகாணங்களின் உத்தியோகபூர்வ ஆட்சிக் காலம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதமும், மத்திய, வடக்கு, வடமேல் மாகாணங்களின் உத்தியோகபூர்வ ஆட்சிக் காலம் அடுத்த வருடம் செப்ரெம்பர் மாதத்திலும், மேல் மற்றும் தென் மாகாணங்களுக்கான உத்தியோகபூர்வ தேர்தல் நடத்தப்பட வேண்டிய காலம் 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதமும், ஊவா மாகாணத்துக்கான தேர்தல் நடத்தப்பட வேண்டிய கால எல்லை 2019 செப்ரெம்பர் மாதமும் ஆகும்" - என்றார்.

(ஐ - 10)

## பிலியந்தலைத் துப்பாக்கிச் சூடு சிகிச்சை பலனின்றிச் சிறுமி சாவு



கொழும்பு, மே 20
பிலியந்தலைத் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த சிறுமி சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்தார் என்று தேசிய மருத்துவமனைப் பணிப்பாளர் தெரிவித்தார்.

பிலியந்தலைப் பகுதியில் போதைப்பொருள் சுற்றிவளைப்பொன்றுக்குச் சென்ற, பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் சிறப்பு விசாரணையாளர், பொலிஸ் பரிசோதகர் ரங்கஜீவ தலைமையிலான பொலிஸ் குழுவினர் மீது அண்மையில் துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்ததுடன், சிறப்பு விசாரணை அதிகாரி, பொலிஸ் பரிசோதகர் ரங்கஜீவ உள்ளிட்ட இரு பொலிஸ் உத்தியோகத்தர்களும், சிறுவர்கள் இருவர் உள்ளிட்ட மூன்று பொதுமக்களும் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்களில் பொலிஸ் பரிசோதகர் உட்பட 11 வயதான சிறுமியொருத்தியும், 15 வயதான சிறுவன் ஒருவனும், மற்றொரு பொதுமகனும் களுபோவில மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டனர். இவர்களில் கவலைக்கிடமான நிலையில் இருந்த சிறுமி சிகிச்சை பலனின்றி நேற்று மருத்துவனையில் உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ -10)

## வழிபாட்டுத்தலங்கள் மீது தாக்குதல் சிறப்புப் பொலிஸ் குழு விசாரணை




கொழும்பு, மே 20
முஸ்லிம் பள்ளிவாசல்கள் மற்றும் வழிபாட்டுத் தலங்கள் மீது முன்னெடுக்கப்பட்ட தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் சந்தேக நபர்களைக் கைது செய்வதற்குச் சிறப்புப் பொலிஸ் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தரவின் நேரடிக் கண்காணிப்பின் கீழ், பொலிஸ் மா அதிபர் அலுவலக பிரதானி, பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரன்மல் கொடித்துவக்குவின் மேற்பார்வையில், பொலிஸ் தலைமையகத்துக்குப் பொறுப்பான மூத்த பொலிஸ் அத்தியட்சரின் கீழ் இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்கவின் உத்தரவுக்கு அமைவாக இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

பெற்றோல் குண்டுத் தாக்குதலுக்கு உள்ளான பாணந்துறை பழைய பசார் வீதியிலுள்ள பள்ளிவாசல், வெல்லம்பிட்டி கொஹிலவத்த ஜும்மா பள்ளிவாசல் ஆகியவை தொடர்பில் சிறப்பு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இன, மத நல்லிணக்கத்தைச் சீர்குலைக்கும் திட்டமிட்ட குழுவொன்று இவ்வாறான நடவடிக்கைகளின் பின்னணியிலிருந்து செயற்படுகிறது என்று ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

"சந்தேகநபர்களைக் கைது செய்து, கடும் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளப் பொலிஸ் தலைமையகம் தீர்மானித்துள்ளது. பொலிஸ் தலைமையகத்தின் சிறப்புப் பொலிஸ் பிரிவொன்று சம்பவம் இடம்பெற்ற பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. நேற்று முதல் அவர்கள் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்" என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை பள்ளிவாசல்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருந்த நிலையில், அன்றைய தினம் நள்ளிரவு 1 மணிக்கு வெல்லம்பிட்டி பள்ளிவாசல் மீது கல் வீச்சுத் தாக்குதலும், பாணந்துறை பள்ளிவாசல் மீது பெற்றோல் குண்டுகளை வீசித் தாக்குதல் நடத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

(ஐ -10)

## பேரணியில் கைதான மாணவர்களுக்குப் பிணை

கொழும்பு, மே 20
சட்ட விரோதமாகச் செயற்பட்ட குற்றச்சாட்டின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட பிக்கு மாணவரொருவர் உட்பட 8 மாணவர்களையும் பிணையில் விடுதலை செய்யுமாறு கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

கொழும்பில் அண்மையில் இடம்பெற்ற அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்களின் ஆர்ப்பாட்டப் பேரணியின் போது, சட்ட விரோதமாகச் செயற்பட்ட குற்றச்சாட்டின் அடிப்படையில், பிக்கு மாணவர் ஒருவர் உட்பட 8 மாணவர்கள் கைது செய்யப்பட்டனர்.

குறித்த 8 பேரையும் பொலிஸார் நேற்று நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போதே அவர்களைப் பிணையில் விடுதலை செய்யுமாறு நீதிமன்றம் உத்தர விட்டது.

மாலபே தனியார் மருத்துவ கல்லூரியைத் தடைசெய்தல் உள்ளிட்ட 15 கோரிக்கைகளை முன்வைத்து அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்கள் எதிர்ப்புப் பேரணியை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ -10)

## ஐந்து மாடிக்கட்டட விபத்து; விசாரணைகள் ஆரம்பம்



கொழும்பு, மே 20
கொழும்பு - வெள்ளவத்தைப் பிரதேசத்தில் 5 மாடிக் கட்டடம் இடிந்து விழுந்த விபத்துத் தொடர்பான விசாரணைகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வெள்ளவத்தை சவோய் திரையரங்குக்குப் பின்புறமாக அமைந்துள்ள 'தி என்சலன்ஸ்' என்ற 5 மாடிக் கட்டடம் நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் இடிந்து விழுந்தது.

இந்த விபத்தில் 23 பேர் காயமடைந்தனர். அவர்களில் 14 பேர் களுபோவில மருத்துவமனையிலும், ஏனைய 9 பேர் கொழும்பு தேசிய மருத்துவமனையிலும் சேர்க்கப்பட்டுள்ளனர். கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்களில் ஒருவர் நேற்று முன்தினம் இரவு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இந்த இடர் தொடர்பாக வீடமைப்புத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாஸவின் பணிப்பில் சிறப்பு விசாரணைக் குழுவொன்று விபத்து இடம்பெற்ற பகுதிக்கு நேற்றுச் சென்றது. அங்கு சிறப்பு விசாரணை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று வீடமைப்பு அதிகார சபையின் பணிப்பாளர் தெரிவித்தார். (ஐ -10)





## ரஷ்ய எதிர்ப்பு உணர்வுகளை திட்டமிட்டு விதைக்கிறார்கள்

புடின் குற்றச்சாட்டு

"

ரஷ்ய வெறுப்புணர்வை அமெரிக்க மக்களிடத்தில் சிலர் திட்டமிட்டு ஏற்படுத்துகிறார்கள். இந்தக் குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் பொய்யானவை. ஆதரமற்றவை. அடிப்படை இல்லாதவை.

மொஸ்கோ, மே 20
"அமெரிக்க மக்களிடத்தில் ரஷ்யாவுக்கு எதிரான வெறுப்புணர்வை திட்டமிட்டு ஏற்படுத்த சிலர் முயற்சி செய்கிறார்கள் எனக் குற்றம்சாட்டினார் விளாடிமிர் புடின்.

அமெரிக்க அதிபர் ட்ரம்ப் ரஷ்ய அயலுறவுத் துறை அமைச்சர் சேர்கெய் இருவருக்கும் இடையில் அண்மையில் சந்திப்பொன்று இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான அமெரிக்காவின் வியூகங்களை ட்ரம்ப், ரஷ்யாவுக்கு வழங்கினார் என்று குற்றம்சாட்டப்பட்டது. இது அமெரிக்காவில் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டை புடின் ஏற்கனவே மறுத்திருந்தார்.

தேவையேற்படின் ட்ரம்ப் - சேர்கெய் இடையிலான சந்திப்புத் தொடர்பிலான அறிக்கையை வழங்கவும் தயார் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

இந்த விவகாரத்தில் தற்போது மீண்டும் தலையிட்டுள்ளார் புடின். மொஸ்கோவில் நேற்று முன்தினம் உரையாற்றுகையில், "ரஷ்ய வெறுப்புணர்வை அமெரிக்க மக்களிடத்தில் சிலர் திட்டமிட்டு ஏற்படுத்துகிறார்கள். இந்தக் குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் பொய்யானவை. ஆதாரமற்றவை; அடிப்படை இல்லாதவை. இவற்றைப் பரப்புவோர் முன்வைப்போர், நேர்மையற்றவர்கள் முட்டாள்கள்" எனப் புடின் மேலும் தெரிவித்தார். (ம)

தென்கொரியச் சிப்பாய்களை

# போருக்குத் தயாராகு
# அதிபர் மூன் ஜெ கட்ட

## வடகொரியா அத்துமீறல் என்றும் கடும் எச்

சியோல், மே 20
வடகொரியா எல்லையில் அத்துமீறி தாக்குதல் நடத்தத் திட்டமிட்டுள்ளது என்று எச்சரித்த தென்கொரிய அதிபர் மூன் ஜெ இன், போருக்குத் தயாராகுமாறு தென்கொரியச் சிப்பாய்களுக்கு கட்டளை பிறப்பித்தார்.

தென்கொரிய அதிபர் தேர்தல் அண்மையில் நடைபெற்றது அதில் மூன் ஜெ இன் வெற்றி பெற்றார். தனது முதல் உரையில் வடகொரியாவுடன் அமைதிப் போக்கைக் கடைப்பிடிக்கும் தனது விருப்பத்தை அவர் வெளிப்படுத்தினார்.

"கொரியத் தீபகற்பத்தில் ஏற்பட்டுள்ள போர்ப் பதற்றத்தை முடிவுக்குக் கொண்டுவர நான் விரும்புகிறேன். இது தொடர்பில் வொஷிங்டன் (அமெரிக்கா), பீஜிங் (சீனா), பியாங்யாங் (வடகொரியா) நகரங்களுக்குச் செல்லத் திட்டமிட்டுள்ளேன்.

பதற்றம் தணிந்து உலக அமைதியை ஏற்படுத்த வடகொரியா தயாராக வேண்டும்" என்று தெரிவித்தார்.

இவரது இந்த உரைக்கு உலகெங்கும் பெரும் வரவேற்புக் கிடைத்தது. தற்போது தனது



முன்னைய அறிவிப்புக்களில் இருந்து முற்றிலும் வேறுபட்டு, வடகொரியாவுடன் போருக்குத் தயாராகுமாறு தென்கொரியச் சிப்பாய்களுக்கு அவர் கட்டளை பிறப்பித்தார்.

வடகொரியா அண்மையில் ஏவுகணைச் சோதனை நடத்தியது.



வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மதுரோவின் பதவி விலகலை வலியுறுத்தி அங்கு நடைபெற்றுவந்த போராட்டங்கள் தற்போது கடும் தீவிரமடைந்துள்ளன. அவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்ட இளம்பெண் ஒருவர்மீது கலகமடக்கும் பொலிஸாரால் தண்ணீர் பீய்ச்சிஅடிக்கப்படுகிறது. அது தொடர்பாள ஒளிப்படமே இது. (ம)

## ஐரோப்பிய
## உதவிகள்

டுடேர்தே திட்ட

பிலிப்பைன்ஸ் அதிபர் றொட்றிக்
டுடேர்தே, ஐரோப்பிய நாடுக
உதவி தமக்குத் தேவையில்
என்று அறிவித்தார்.

பிலிப்பைன்ஸ் அதிபராகப் பெ
பேற்றதில் இருந்து போல
பொருள் கடத்தல் காரர்களுக்
ராக கடும்போக்கைக் கடைப்பி
வருகிறார் டுடேர்தே. எவ்வித
னறிவிப்பு மற்றும் எச்சரிக்கை
லாமல் போதைப் பொருளு
தொடர்புடையவர்கள் சுட
கொல்லப்படுகின்றனர்.

ஐ.நா., அமெரிக்கா தலையிட்ட
னரும் டுடேர்தே கட்டுப்படவில்
ஐரோப்பிய ஒன்றியமும் டு
தேயை கடுமையாகச் சாடி
ஐரோப்பிய நாடுகளும் இந்த
காரத்தில் தலையிட வாய்ப்புள்
என்பதால் அவற்றின் உதவி
நிராகரித்தார் டுடேர்தே.



## விசாரிக்கப்படவுள்ளார் டொனால்ட் ட்ரம்ப்; அவருக்குத் தெரியாமல் அதிரடி நகர்வுகள்

வொஷிங்டன், மே 20
அமெரிக்க அதிபர் தேர்தலில் ரஷ்யாவின் தலையீடு, ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுததாரிகளுக்கு எதிரான அமெரிக்காவின் இரகசியத் திட்டங்களை ரஷ்யாவுக்கு வழங்கியமை, மத்திய உளவுத்துறை அதிகாரி ஜேம்ஸ் கோமேயின் பதவிநீக்கம் போன்ற குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ட்ரம்ப் மற்றும் அவரது குழுவினருக்கு எதிராக நேரடியாகவும் மறைமுகமாகவும் விசாரணை நடத்த அந்த நாட்டின் துணை சட்டமா அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இந்த நடவடிக்கைகள் அத்தனையும் மிக இரகசியமான முறையில் மேற்கொள்ளப்பட்டன என்றும் அவை நடைமுறைப்பத்தப்பட்ட பின்னரேயே ட்ரம்





புக்குத் தெரிவிக்கப்பட்டது என்றும் அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

அதிபர் தேர்தலில் மிகவும் பின்னடைவைச் சந்தித்த ட்ரம்ப், திடீர் எழுச்சி பெற்று வெற்றிபெற்றமைக்கு ரஷ்யாவே காரணம் என்று ஆரம்பத்தில் குற்றம் சாட்டப்பட்டன. ட்ரம்புக்கும் ரஷ்ய அயலுறவுத்துறை அமைச்சருக்கும் இடையிலான சந்திப்பு அண்மையில் இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில் வைத்து ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான அமெரிக்கத் திட்டங்களை ட்ரம்ப் ரஷ்யாவுக்கு வழங்கினார் என்று ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. இந்த இரு விடயங்கள் தொடர்பில் மத்திய உளவுத்துறைதலைவர் ஜேம்ஸ்கோமே விசாரணை நடத்திவந்தார். அவர் அண்மையில்பதவிநீக்கம்செய்யப்பட்டார்.

இவை அனைத்தும் சேர்ந்து ட்ரம்புக்கு எதிராக பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்த நிலையில் மத்திய உளவுத்துறை முன்னாள் தலைவர் முல்லரை இது தொடர்பில் விசாரணை நடத்த அமெரிக்காவின் துணை சட்டமா அதிபர் நியமித்து நடவடிக்கை எடுத்துள்ளார். இந்த நியமனத்தை ட்ரம்ப் வன்மையாகக் கண்டித்தார். அரசியல்வாதி ஒருவருக்கு எதிராக "அமெரிக்க வரலாற்றில் நடைபெறும் மிகப்பெரிய சூனியவேட்டை இது" என்று ட்ரம்ப் தெரிவித்தார். (ம)

# ...மாறு ...டளை

## ...ச்சரிக்கை

அந்த நாடு மீண்டும் மற்றொரு ஏவுகணைச் சோதனையை மேற்கொள்ளவுள்ளது என்று எச்சரிக்கப்பட்டுள்ள நிலையிலேயே மூன் ஜெ இன் இவ்வாறு தெரிவித்தார்.

முன்னதாக, வடகொரியாவுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைக்காக அமெரிக்கா தனது போர்க் கப்பலை கொரியத் தீபகற்பத்தில் நிறுத்தியுள்ளது.

தவிர ஜப்பானும் தனது போர்க் கப்பலை அங்கு அனுப்பியுள்ளது. இதனால் அங்கு போர்ப் பதற்றம் இரட்டிப்பாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

...ளை
...ரவு
...து.

## ...ிய நாடுகளின் ...ள் வேண்டாம்

...ட்டவட்டம்


...ாட்றிக்கோ
...நாடுகளின்
...வயில்லை

...கப் பொறுப்
...போதைப்
...ளுக்கு எதி
...டைப்பிடித்து
...வ்வித முன்
...க்கை இல்
...ாருளுடன்
...ர் சுட்டுக்

...யிட்ட பின்
...டவில்லை.
...ம் டுடெர்
... சாடியது.
...இந்த விவ
...ப்புள்ளது
...உதவியை
(ம)



# நான் என்றும் பச்சைத் தமிழன்; இப்படிச் சொல்கிறார் ரஜனிகாந்



சென்னை, மே 20

"நான் என்றும், எப்போதும் பச்சைத் தமிழன். கன்னடன் அல்லன்" இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் திரையுலக நடிகர் ரஜனி.

சென்னையில் தனது ரசிகர்களைச் சந்தி...வருகிறார் ரஜனி. ஐந்தாவது நாளாக சென்னை கோடம்பாக்கத்தில் உள்ள ஓர் விடுதியில் நேற்றும் ரசிகர்களைச் சந்தித்தார். அதன்போது உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"ரஜனிகாந்த் தமிழரா என்ற கேள்வி வருகிறது. எனக்கு இப்போது 67 வயதாகிறது. 23 ஆண்டுகள் மட்டும் தான் கர்நாடகாவில் இருந்தேன். மீதம் 44 ஆண்டுகள் தமிழ் நாட்டில்தான் இருக்கிறேன். உங்கள் கூடவே வளர்ந்தேன். மராட்டியக்காரனாகவோ, கன்னடக் காரனாகவோ வந்திருந்தால் கூட என்னை ஆதரித்து பெயர், புகழ், பணம் என அள்ளிக் கொடுத்து நீங்கள்தான் என்னைத் தமிழனாக ஆக்கிவிட்டீர்கள்.

ஆகவே, நான் பச்சைத்தமிழன். என்னுடைய மூதாதையர்கள் கிருஷ்ண கிரி நாச்சிக் குப்பத்தில் பிறந்தவர்கள் என்பதைச் சொல்லியிருக்கிறேன். இங்கிருந்து வெளியேபோ என்று சொல்லித் தூக்கிப் போட்டால் நான் இமயமலையில்தான் போய் விழுவேனேதவிர. வேறு எந்தவொரு மாநிலத்திலும் போய் விழமாட்டேன். தமிழ் மக்கள், நல்ல மக்கள், நல்ல உள்ளங்கள் இருக்கிற பூமியில் இருந்தால் இருக்க வேண்டும். இல்லையென்றால் சித்தர்கள் இருக்கின்ற இமயமலையில் இருக்க வேண்டும்.

> ❝ எதிர்ப்பு இன்றி வளரமுடியாது. அதிகளவான எதிர்ப்புக்களே அரசியலில் மூலதனம். தமிழகத்தில் அரசியல் நிர்வாகம் சீர்கெட்டுப்போய் உள்ளது.

எதிர்ப்பு இன்றி வளரமுடியாது. அதிகளவான எதிர்ப்புக்களே அரசியலில் மூலதனம். தமிழகத்தில் அரசியல் நிர்வாகம் சீர்கெட்டுப்போய் உள்ளது.

ஸ்டாலின் ஒரு நல்ல நிர்வாகி. சீமான் ஒரு போராளி. அவரது சில கருத்துகளை கேட்டு நான் பிரமித்து போயிருக்கிறேன்.

அன்புமணி ராமதாஸ் நன்றாக படித்தவர். விவரம் தெரிந்தவர். தலித் மக்களுக்காக தொடர்ந்து உழைப்பவர் திருமாவளவன். சூழ்நிலை வரும்போது களத்தில் இறங்குவேன் அதுவரை பொறுமை காப்போம்" என ரஜனி மேலும் தெரிவித்தார். (ம)

நியூயோர்க் நகரில் துயரம்

# பாதசாரிகள் மீது பாய்ந்தது கார் ஒருவர் சாவு; 12 பேர் படுகாயம்

நியூயோர்க், மே 20

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் பாதசாரிகள் மீது காரொன்று வேகமாக மோதியதில் ஒருவர் உயிரிழந்தார். மேலும், 12 பேர் காயமடைந்துள்ளனர். இந்த விபத்து தீவிரவாதத் தாக்குதலாக இருக்குமோ? என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

அமெரிக்காவின் வணிக தலைநகரமான நியூயோர்க் நகரில் உள்ள டைம்ஸ் நவ் சதுக்கத்தில் நேற்றுக் காலை (இலங்கை நேரப்படி) பாதசாரிகள் சாலையை கடக்கும்போது கார் ஒன்று வேகமாக அவர்கள் மீது மோதியது. இந்த விபத்தில் ஒருவர் சம்பவ இடத்தில் உயிரிழந்தார்.

மேலும், 12 பேர் காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். காரின் செலுத்துனர் உடனடியாகக் கைதுசெய்யப்பட்டார். அவரிடம் மேற்கொண்ட விசாரணையில் விபத்து எதிர்பாராத விதமாக நடந்தது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும் இது ஆயுதக் குழுவின் சதிச்செயலாக இருக்குமோ என்ற கோணத்தில் விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன. நியூயோர்க் நகரின் அனைத்துப் பகுதிகளும் உசார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன'என்று அதிபர் ட்ரம்பின் உத்தியோகபூர்வ இல்லமான வெள்ளை மாளிகையின் செய்தித் தொடர்பாளர் சீன் ஸ்பைசர் தெரிவித்தார். (ம)





உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# முள்ளிவாய்க்காலில் இருந்து உரத்துச் சொல்லப்பட்ட செய்தி

தமிழினப் பெருந்துயரான முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் இம்முறையும் மிக உணர்வுபூர்வமாக நடந்து முடிந்தது. சிலதிட்டமிடல்குறைபாடுகளும்குழப்பங்களும்காணப்பட்டாலும்கூட நிகழ்வுசிறப்பாகவேநடந்துமுடிந்தது. இந்த நிகழ்வை அனைத்துத் தமிழர்களும் ஒன்றிணைந்து, ஒருங்கிணைந்து ஏன் நடத்த வேண்டும் என்பதன் முக்கியத்துவத்தை வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெளிவாகத் தனது உரையில் குறிப்பிட்டார்.

தமிழினப்படுகொலையை நினைவுகூர்வதில் தமிழ் அரசியல் தலைமைகள் பிளவுண்டு நிற்பதன் சோகம் இந்தத் தடவையும் முள்ளிவாய்க்கால் மண்ணில் நிகழ்ந்தேறியமை வருத்தம்தருவது. இனிவரும்காலங்களிலாவது அந்தநிலை மாறிதமிழர்கள்என்றவகையில்அனைவரும்ஒன்றிணைந்து இந்தஒருநிகழ்வையாவது நடத்துவதற்கானகாலம்கனிந்து வரவேண்டும்.

தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தின் தோல்வியாக முள்ளிவாய்க்கால் மண் 8 வருடங்களுக்கு முன்னர் உலகுக்கு அறிவிக்கப்பட்டது. ஆனால், அந்தச் சாம்பல் மேட்டிலிருந்து எழுந்துவரும் திராணியைத்தமிழ் இனம் கொண்டிருக்கிறது என்பதை அங்கு பொது நிகழ்வு ஒன்றை நடத்தியதன்மூலம் கடந்த ஆண்டு நிரூபித்தது தமிழ் இனம். இந்த ஆண்டு மேலும் ஒருபடி முன்னகர்ந்து தமிழினவிடுதலைப் போராட்டத்தின்அடுத்தகட்ட அரசியல் முன்னகர்வுக்கான களமாகவும் முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம் அமைந்திருந்தது எனலாம்.

அதில் காத்திரமாகக் கவனிக்க வேண்டிய நிகழ்வு, நினைவேந்தலில் எதிர்க் கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தலைவருமானஇரா.சம்பந்தனும்நாடாளுமன்றஉறுப்பினர்எம்.ஏ.சுமந்திரனும்கலந்துகொண்டமை. தற்போதைய அரசுக்குத் தெளிவான ஒரு அரசியல் செய்தியை வழங்குவதாக அது இருந்தது.

தற்போதைய மைத்திரி, ரணில்கூட்டு அரசில்தமிழ்த் தேசியக்கூட்டமைப்புஎதிர்க்கட்சியாகஅமர்ந்திருந்தாலும், அது அரசோடுஒத்தோடும்தரப்பாகவே செயற்பட்டுவருகிறது. கிட்டத்தட்ட அரசில் நேரடியாகப் பங்கேற்காத பங்காளியாக, வெளியிலிருந்து அரசுக்கு ஆதரவளிக்கக்கூடிய கட்சியாகவேதொழிற்பட்டுவருகிறது.அந்தவகையில்அரசோடு நெருங்கிச் செயப்படுபவர்கள் சம்பந்தனும் சுமந்திரனும்


கூட்டமைப்பின் அத்தகைய அரசியல் நிலைப்பாட்டுக்கு ஒருநோக்கம்இருக்கிறது. புதியஅரசமைப்புஒன்றின்ஊடாகத் தமிழ் மக்களுக்கு ஒரு நியாயமான தீர்வைப் பெற்றுக்கொடுப்பது என்பதே அந்த நோக்கம். அதனால் அரசுக்கு நெருக்கடி கொடுக்காத அணுகுமுறையை, பலத்த விமர்சனங்களுக்கு மத்தியிலும் சம்பந்தன் வெளிப்படுத்தினார்.

ஆனால், அண்மைக் காலமாக அந்த நோக்கத்தை நேர்மையாக நிறைவேற்ற முடியுமா என்கிற சந்தேகம் தெற்கு அரசியல் களத்தில் ஏற்பட்டுக்கொண்டே இருக்கிறது. புதிய அரசமைப்பை உருவாக்குவதில் இருந்து கூட்டு அரசு பின்வாங்கி வருகிறது.

ஏற்கனவே கலந்துரையாடப்பட்டு இறுதி செய்யப்பட்ட நல்ல விடயங்களை எல்லாம், மீளாய்வு என்ற பெயரில் அகற்றிவிடுவதற்கான முயற்சிகள் நடக்கின்றன. ''கொஞ்சம் கொஞ்சமாக புதிய அரசமைப்பு வரைபு அரிக்கப்படுகிறது'' என்று சொன்னால் பொருத்தமாக இருக்கும்.

அரசின் இத்தகைய போக்கு, அல்லது இத்தகைய போக்கைக்கண்டுகொள்ளாதஅரசதலைவர்களின்செயல்தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஏற்புடையதல்ல. தமிழ் மக்களின் ஏகோபித்த ஆணையைப் பெற்ற கூட்டமைப்பு அதனை ஏற்கவும் முடியாது.

புதிய அரசமைப்பு விடயத்தில் அரசின் போக்கில் தமக்கிருக்கும்அதிருப்தியை வெளிப்படுத்த வேண்டியஅவசியம் கூட்டமைப்புக்குஇருக்கிறது.தமிழர்கள்மீண்டும்போராட்டக் களத்திற்குத் திரும்ப வேண்டிய நிலையை ஏற்படுத்திவிடாதீர்கள்என்பதைஅழுத்தமாகச்சொல்லவேண்டியிருக்கிறது. அந்தச் செய்தியைத்தான் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில்கலந்துகொண்டதன்மூலம்சம்பந்தன்வெளிப்படுத்தியிருந்தார். அந்த மண்ணில் நின்றபடி இனியொரு போர் இடம்பெறாமல் இருப்பதை உறுதி செய்திருக்கிறீர்களா என்று கொழும்பிடம் கேள்வி எழுப்பியதும் அந்தச் செய்தியை அழுத்திச் சொல்லத்தான்.



# வடக்கு முதல்வரின் கருத்து வெளிப்பாடு நியாயமானதல்ல

சேரலாதன்

கூட்டமைப்புக்கு நான் வேண்டாதவனாக இருப்பதால் இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியுடனான கூட்டமைப்பின் சந்திப்புக்கு எனக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. இவ்வாறு மனம் நொந்து கூறியுள்ளார் வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன். கூட்டமைப்பின் சார்பில் பொறுப்பானதொரு பதவியில் அமர்ந்திருப்பவரின் வாயிலிருந்து இவ்வாறானதொரு கருத்து வெளிவந்திருக்கின்றமை நியாயமானதல்ல.

கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனால் வடக்கு முதலமைச்சர் பதவிக்கான வேட்பாளராக நேரடியாகக் களமிறக்கப்பட்டவர்தான் விக்னேஸ்வரன். அதுவரை மாவை சேனாதிராசாவின் பெயர்தான் இந்தப் பதவிக்கு முன்மொழியப்படும் என்ற பேச்சுப் பலமாக அடிபட்டது. தேர்த லில் அவர் போட்டியிட்டிருந்தால் அமோக வெற்றியும் பெற்றிருப்பார். ஆனால் மாவை இது தொடர்பாகச் சாதகமாக சமிக்ஞை எதனையும் வெளியிடவில்லை. இந்த நிலையில், கொழும்பில் இருந்து வடக்குக்கு சம்பந்தனால் இறக்குமதி செய்யப்பட்டவர்தான் விக்னேஸ்வரன்.

கூட்டமைப்பின் தலைமைத்துவத்தை வகிப்போர் எவரைச் சுட்டிக்காட்டுகின்றனரோ, அவர் எவராக இருந்தாலும் அவரை வரவேற்கின்ற குணம் படைத்தவர்கள் தமிழர்கள். அதிலும் சம்பந்தன் ஐயாவின் தெரிவு என்பதால் விக்னேஸ்வரனுக்கு அமோக வரவேற்புக் காத்திருந்தது. மாகாண சபைத் தேர்தலில் அதிகூடிய விருப்பு வாக்குகளை மக்கள் இவருக்கு அள்ளி வழங்கினர். முதலமைச்சர் பதவியில் அமர்த்தி அழகு பார்த்தனர். அதுவரை எல்லாமே நன்றாகத்தான் நடந்தன.

### தடம் மாறினார் வடக்கு முதல்வர்

2015 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெற்றபோதுதான் சில விடயங்கள் தெரியவந்தன. தேர்தலில் கூட்டமைப்பின் சார்பாகப் போட்டியிட்ட வேட்பாளர்களுக்கு ஆதரவாகப் பரப்புகையில் ஈடுபடுவதற்கு வடக்கு முதலமைச்சர் முன்வரவில்லை. எதிரணியினர் தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் கூட்டமைப்பை அக்குவேறு ஆணி வேறாக விமர்சித்தனர். சிலர் அநாகரிகமான வகையிலும் பரப்புகைகளில் ஈடுபட்டனர். கூட்டமைப்பின் மீதும் அதன் தலைமைத்துவத்தின் மீதும், உண்மையான விசுவாசம் இருந்திருக்குமானால், வடக்கு முதலமைச்சர் எதிரணியினருக்குத் தகுந்த பதிலை வழங்கியிருப்பார். ஆனால் அவர் தொடர்ந்து மௌனத்தைக் கடைப்பிடித்தார். கூட்டமைப்பின் தொண்டர்களிடையே அந்தவேளைமுதல் முதலமைச்சர் மீது சந்தேகம் தோன்ற ஆரம்பித்து விட்டது. ஆனாலும் தலைமைக்குக் கட்டுப்பட்டு அவர்கள் மௌனம் காத்தனர்.

தமிழ் மக்கள் பேரவை ஆரம்பிக்கப்பட்ட போது தான், வடக்கு முதலமைச்சரின் உண்மையான முகம் தெளிவாகத் தெரிய வந்தது. தேர்தல் மேடைகளில் கூட்டமைப்பை மிகவும் கேவலமாக விமர்சனம் செய்தவர்களும், கூட்டமைப்புக்குள் இருந்து கொண்டே அதனையும், அதன் தலைமையையும் விமர்சனம் செய்து வருபவர்களும், சகுனி வேலையையே தமது தொழிலாகக் கொண்ட ஊடகவியலாளர்களும் பேரவையில் அங்கம் வகித்தனர். இந்த நிலையில் வடக்கு முதல்வர்தான் பேரவையின் இணைத்தலைவர்களில் ஒருவர்.

பேரவையின் நோக்கங்கள் சரியானவைகளாக இருப்பின். அது தொடர்பாகக் கவலைப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஆனால் அதில் இருந்து கொண்டே கூட்டமைப்பையும் அதன் தலைமையையும் விமர்சிப்பதைத்தான் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

### பல்வேறு முகங்கள் கொண்டது அரசியல் துறை

அரசியல் என்பது பல்வேறு முகங்களைக்கொண்டது. அங்கு கௌரவம் மட்டும்தான் கிடைக்குமென எவருமே எதிர்பார்க்க முடியாது. அவமானங்களையும் சந்திக்க வேண்டிய சூழ்நிலைகளும் ஏற்படும். அரசியலில் நுழைபவர்கள் இதற்கெல்லாம் தம்மைத் தயார் செய்து கொள்ள வேண்டும். இது வடக்கு முதல்வருக்கும் பொருந்தும். கூட்டமைப்பின் வசமுள்ள வடக்கு மாகாணசபை மீது மக்கள் நம்பிக்கை இழந்த நிலையில் உள்ளனர். மக்களது பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு காண்பதில் மாகாணசபை தோல்வியைச் சந்தித்துள்ளது. வெறுமனே கூடுவதும், பேசுவதும், தீர்மானங்களை நிறைவேற்றி அடுக்கி வைப்பதுமே மாகாணசபையின் பணிகளாக மாறியுள்ளன. மக்களின் நலன்களைப் பேணுவதைவிடத் தமது சுகபோகங்களிலேயே மாகாணசபை உறுப்பினர்கள் அதிக அக்கறை காட்டி வருகின்றனர். முதலமைச்சரும் இவற்றையெல்லாம் வேடிக்கை பார்த்துக் கொண்டு வாளாவிருக்கின்றார். ஆகவே அடுத்த மாகாண சபைத் தேர்தலிலாவது நேர்மையும், திறமையும், மக்கள் நலனில் அக்கறையும் கொண்டவர்களை வேட்பாளர்களாகத் தெரிவு செய்ய வேண்டியது கூட்டமைப்பின் தலையாய கடமையாகும்.

### வடக்கு முதல்வருக்கு பொறுப்புக்களை சரிவர நிறைவேற்ற வேண்டிய கடப்பாடுண்டு

வடக்கு முதலமைச்சர் தம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புக்களைச் சரிவர நிறைவேற்றுவதில் கூடிய அக்கறை செலுத்த வேண்டும். தம்மைத் தெரிவு செய்த கூட்டமைப்புக்கும், மக்களுக்கும் விசுவாசமாக நடந்து கொள்ள வேண்டும். எவ்வளவோ தியாகங்களைப் புரிந்து, கொடுமைகள் பலவற்றை அனுபவித்துத் தமிழர்களின் நலன்களுக்காகத் தொடர்ந்து பாடுபடுகின்றபலர் இன்றும்எம்மிடையே உள்ளனர். மக்கள் அவர்களைப் புரிந்து கொள்வார்கள். தமது எதிர்காலத் தலைவர்களையும் தெரிவு செய்வார்கள்.

ஆகவே தமிழர்கள் இக்கட்டானதொரு சூழ்நிலையில் அகப்பட்டு இருக்கின்ற நிலையில், அவர்களது காவல் அரணாகத் திகழ்கின்ற கூட்டமைப்பைப் பலவீனப்படுத்தும் வகையில் முதலமைச்சர் விக்னேஸ்வரன் போன்றவர்கள் கருத்து வெளியிடுவது பண்பான செயலல்ல. இது எதிரிகளுக்குத்தான் வாய்ப்பாக மாறிவிடும்.

# மத நம்பிக்கை மற்றொருவர் மீது வலிந்து திணிக்கப்படக் கூடாததொன்று

மாலதி ஜெயக்குமார்

தொடருந்துப் பயணங்கள் மிகவும் சுவாரசியம் மிக்கவை. ஆனாலும் நான் சொல்லப்போவதை வெறும் சுவாரசியமானதொன்று என்றுமட்டும் அடையாளப்படுத்த இயலாது. அதற்கு மேலாக, இன்று எமது சமூகத்தில் புற்றுநோய் போன்று பரவிக்கொண்டிருக்கும் மதமாற்றம் தொடர்பான தகவலது. பொதுவான ஒரு சமூகத் தளத்தில் கருத்துக்களைப் பகிர முனையும்போது, எமது கருத்துக்கள் எப்படி அர்த்தப்படுத்திக் கொள்ளப்படும் என்ற அச்சமும் கூடவே எழுவதுண்டு. ஆனாலும் சமூக நல நோக்கில் இதனைக் கூறியே ஆக வேண்டிய நிர்ப்பந்தம் எனக்கு. கடந்த சில வாரங்களுக்கு முன்னரான ஒரு நாள், கொழும்பு செல்வதற்காக இரவு 8.30மணிக்கு கிளிநொச்சி தொடருந்து நிலையத்திலிருந்து புறப்படும் தொடருந்தில் பயணிக்க நேர்ந்தது. வவுனியா செல்லும்வரை கூட்டம் அவ்வளவாக இருக்கவில்லை. வவுனியாவில் பெரியதொரு பயணிகள் கூட்டம் தொடருந்துக்குக் காத்து நின்றது. நான் பயணித்த தொடருந்துப் பெட்டிக்குள் பத்துப் பேர் வரையான பெண்கள் ஏறினார்கள். ஆங்காங்கே இருந்த வெற்று இருக்கைகளில் இடத்திற்கேற்றவாறு அமர்ந்து கொண்டார்கள். ஒருவரைத் தவிர ஏனையவர்கள் 40 வயதுக்கு மேற்பட்டவர்களாக எனக்குத் தெரிந்தார்கள். எல்லோருமே மத்திய தரத்திற்கும் கீழ்ப்பட்ட நிலையில் இருப்பவர்களாக இருக்கவேண்டும் என்று மனது கணக்குப் போட்டது.

> ஒரு பெண் தனது கைத்தொலை பேசியில் சத்தமாக மதப் பிரார்த்தனைப் பாடல்களை ஒலிக்கவிட்டு உபதேசம் செய்தார். தாம் சார்ந்த மதத்தை உயர்த்திக் கூறி, ஏனைய மதங்களைப் பற்றி இழிவாகக் கருத்து வெளியிட்டுக் கொண்டு வந்தார். பல தரப்பட்டவர்கள் பயணிக்கும் ஒரு பொதுப்போக்கு வரத்துத் தொடருந்து என்றும் பாராது, மதபோதனையில் ஈடுபட்ட அவர்களின் செயற்பாட்டினால் எனது மனது கொதிக்கத் தொடங்கியது. கண்டித்து கருத்துச் சொல்ல வேண்டும் போல் தோன்றியது. ஆனாலும் அந்தத் தொடருந்தில் உறவினர்கள் எவருடனும் சேர்ந்து பயணிக்காது தனியாக பயணம் மேற்கொள்வதால் நமக்கேன் வீண் வம்பு என்று பேசாமல் இருந்து விட்டேன்.

ஆனாலும் அவர்களது நடத்தைகளும் பேச்சும் மிகவும் செயற்கைத்தனமாக இருந்தன. தமது பேச்சிலும் செயற்பாடுகளிலும் வலிந்து மனிதநேயத்தையும் இறையன்பையும் வெளிப்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

### அனைவரும் இடையிட்டு மதம் மாறியவர்கள் என அனுமானிக்க முடிந்தது

நான் மனதில் போட்ட கணக்கு தவறாகிப் போகவில்லை. அனைவரும் ஒரு மதத்திலிருந்து இடையிட்டு வேறொரு மதத்தைத் தழுவியவர்கள் என்பதை அவர்களது நடத்தை, பேச்சி லிருந்து அனுமானித்துக் கொண்டேன்.

அவர்களில் ஒரு பெண்மணி தனது கைப்பையில் இருந்து புத்தகம் ஒன்றை எடுத்து உரக்க வாசித்து மத உபதேசம் செய்யத் தொடங்கினார்.

எனக்குப் பின்புற ஆசனத்தில் இருந்தும் ஒருபெண் தனது கைத்தொலைபேசியில்சத்தமாகமதப்பிரார்த்தனைப் பாடல்களை ஒலிக்கவிட்டு உபதேசம் செய்தார். தாம் சார்ந்த மதத்தை உயர்த்திக் கூறி ஏனைய மதங்களைப் பற்றி இழிவாகக் கருத்து வெளியிட்டுக் கொண்டுவந்தார். பலதரப்பட்டவர்கள் பயணிக்கும் ஒரு பொதுப்போக்குவரத்துத் தொடருந்து என்றும் பாராது மதபோதனையில் ஈடுபட்ட அவர்களின் செயற்பாட்டினால் எனது மனசு கொதிப்படையத் தொடங்கியது. கண்டித்துத் கருத்துச் சொல்ல வேண்டும் போல்தோன்றியது. ஆனாலும் அந்தத் தொடருந்தில் உறவினர்கள் எவருடனும் சேர்ந்து பயணிக்காது தனியாகப் பயணம்மேற்கொள்வ தால் நமக்கேன் வீண்வம்பு என்று பேசாமல் இருந்து விட்டேன்.


அவர்களது போக்கை நினைத்து மனது வேதனைப்பட்டது. இவர்களுக்குப் பண்பாடு குறித்து எப்படிப் புரிய வைப்பது என்று மனது ஆதங்கப்பட்டது.

### நியாயவினத்துக்கு எதிரான எதிர்ப்புக் குரல்கள்

எனது மனக்கவலை தொடர்ந்து நீடிக்கவில்லை. என் பின்புற இருக்கைகளில் அமர்ந்திருந்து பயணித்தோரிடமிருந்து எதிர்ப்புக் குரல்கள் கிளம்பின. சற்றுநேரத்தில் இரு தரப்பினருக்கும் இடையில் விவாதம் சூடுபிடித்தது. ஏனையபயணிகள்நடப்பதைவேடிக்கை பார்க்கத் தொடங்கி விட்டார்கள். மத உபதேசம் செய்த பெண்மணிக்கு நேர் எதிரே அமர்ந்திருந்த இரு இளம் பெண்களும், ஒரு வயதான பெண்மணியும்காரசாரமாகஅந்த மதபோதனை செய்தபெண்மணிக்குப்பதில்சொன்னார்கள். அவர்கள்யாழ்ப்பாணத்திலிருந்து பயணித்துக் கொண்டிருந்தவர்கள். மதபோதனை செய்த அந்தப் பெண்மணியும் ஏதோ என்னவோ எல்லாம் விளக்கம் கூறிக்கொண்டு வந்தார். ஆனாலும் அவை காத்திரமானவையாக, பொருள்பொதிந்தவையாக இருக்கவில்லை. அந்த அளவுக்கு எதிர்த்துக் கருத்துக்கூறிவந்த இரு இளம்பெண்களது பேச்சும், அவர்கள் முன்வைத்த தர்க்க ரீதியான விளக்கங்களும் அழகாகவும்ஆழமாகவும்அமைந்தன. அவர்கள் யார் எனத் தெரிந்து கொள்ள வேண்டும் போல் இருந்தது எனக்கு. இருக்கையில் இருந்து எழுந்து நின்று அவதானிக்க விரும்பவில்லை. விவாதம் மணிக்கணக்காக நீடித்தது. மத போதனை செய்ய முயன்றவர்களோ, இளம்பெண்கள்முன்வைத்தகருத்துக்களில் உள்ள நியாயத்தை ஏற்றுக் கொள்ளும் பக்குவப்பட்ட மன நிலையில் இருக்கவில்லை என்பது அவர்களின் குதர்க்க மான, பொருத்தமற்ற பேச்சில் இருந்த புலப்பட்டது.

நான் இறங்கவேண்டிய மருதானை தொடருந்து நிலையமும் அண்மித்துக் கொண்டிருந்தது. எனக்கு வேறு வழியேதும் இருக்கவில்லை. தயக்கத்தைக் கைவிட்டு எழுந்து அந்த இரு இளம் யுவதிகளின் முன்சென்று நான் அவர்களைப் பார்த்தேன். அந்த இரு யுவதிகளுக்கும் சுமார் 20 வயதிருக்கும். அவர்களின் புத்திக்கூர்மையையும், சுயம் இழக்காத தெளிவான நிலைப்பாட்டையும் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. அவர்களிடம்என்னை அறிமுகப்படுத்தி ஓரிரு வார்த்தைகள் பேசிவிட்டு,கைகுலுக்கிப்பாராட்டிவிட்டு இறங்கிவிட்டேன்.

உண்மையில் நான் இதனை எழுதுவதற்குகாரணம், போதனைசெய்ய முயன்றவர்களது மத நம்பிக்கை குறித்த கருத்து வெளிப்பாடல்ல; மற்றவர்கள் மீது மத நம்பிக்கையை வலிந்து திணிக்க முயலும் அவர்களது போக்கின் மீதான வெறுப்பே இதனை எழுதுவதற்கான காரணம். மத நம்பிக்கை என்பது ஒவ்வொரு வரதும் தனிப்பட்ட உரிமை. ஆனாலும் அதற்காக மற்றவர்கள் பின்பற்றும் மத நம்பிக்கையைக் கொச்சைப்படுத்தி இழிவுபடுத்த முயல்வது சரியா என்பதே அங்கு பேசுபொருளாக அமைந்திருந்தது.



## ஆசிரியருக்கான கடிதம்

### புத்தக வெளியீட்டு நிகழ்வுகளில் அரசியல் கருத்து வெளிப்பாடு அவசியம் தானா?

இன்றைய காலகட்டத்தில் நாட்டின் பல பகுதிகளிலும் அடிக்கடி கலை இலக்கியங்கள் தொடர்பான பல புத்தக வெளியீட்டு நிகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதே வேளை இத்தகைய வெளியீட்டு நிகழ்வுகளுக்குப் பெரும்பாலும் அரசியல் பிரமுகர்களைப் பிரதம அதிதிகளாக அழைத்துச் சிறப்பிக்கும் வழக்கமும் அதிகரித்து வருகிறது. இது பிரபல்யம் தேடிக் கொள்ளும் நோக்கிலானதா? அல்லது புத்தக வெளியீடுகளை இலாபகரமானதாக ஆக்கிக் கொள்வதற்கான உத்தியா என்பது வேறு விடயம். எவ்வாறாயினும் புத்தக வெளியீட்டு நிகழ்வுகளில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் குறித்து அரசியல்வாதிகள் அங்கு வெளியிடப்படும் புத்தகத்தின் உள்ளடக்கம் பற்றியோ, அதன் காலத்தேவை பற்றியோ அல்லது அதனை ஆக்கிய படைப்பாளியைப் பற்றியோ, பெரிதாக எதையும் சிலாகித்து உரையாற்றுவதில்லை. மாறாக தத்தமது அரசியல் நிலைப்பாடுகளையும், மாற்று அரசியல் தரப்பினரின் அரசியல் ரீதியான் குறைபாடுகளையும் சுட்டிக்காட்டிக் கருத்து வெளியிடுவதிலேயே அக்கறை காட்டுகின்றனர். மொத்தத்தில் புத்தக வெளியீட்டு நிகழ்வுகளைப் பயன்படுத்தி அரசியல் செய்து விட்டுப் போய் விடுகின்றனர். இத்தகைய செயற்பாடுகள் வெளியிடப்படும் நூல்களுக்கும், அவற்றை ஆக்கியவர்களுக்கும் அநாவசியமான பின்னடைவுகளை ஏற்படுத்தி விடுகின்றன.

இது கலை இலக்கியப் படைப்புத் துறைக்கு ஆரோக்கியமான விடயமல்ல. ஆகவே நூல்வெளியீட்டு நிகழ்வுகளுக்கு பிரதம அதிதிகளாக எவரையாவது அழைக்கும்போது அது தொடர்பில் ஏற்பாட்டாளர்கள் கவனம் செலுத்தி, கலை இலக்கியத் திறனாளிகள் அல்லது ஆர்வலர்களில் எவரையாவது பிரதம அதிதியாகக் கலந்து கொள்ள வைத்து, வெளியிடப்படும் நூல் குறித்த ஆரோக்கியமான விமர்சனங்களுடன் கூடிய சிறப்பான வெளியீட்டு விழாவாக ஆக்குவது சிறப்பானதாக அமையம்.

செ.சதீஸ்குமார்
கிளிநொச்சி



சிறப்புத் தேவையுடைய மாணவர்களுக்கான கணினி உபகரணங்கள் வழங்கும் உதவித்திட்டத்தின் கீழ் திருகோண மலையில் உள்ள செவிப்புலனற்ற மற்றும் வாய் பேசாத மாணவர்க ளுக்கான உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன.
இதன்படி திருகோணமலை றோட்டரிக் கழகம் 2 லட்சத்து 65 ஆயிரம் ரூபா பெறுமதியான கணினி உபகரணங்களை வழங்கியது.
திருகோணமலை றோட்டரிக் கழகத்தின் சமுதாயப்பணி இயக்குநர் ஜெயரட்ணம் பாடசாலையின் அதிபர் திருமதி ரஞ்சி பாலசிங்கத்தி டம் குறித்த உபகரணங்களை வழங்கினார்.
அதேவேளை பாடசாலை மாணவர்களின் கை வண்ணத்தில் உருவான கைவினைப் பொருள்களின் கண்காட்சியும் இதன்போது இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

# பெருமைக்குரிய வெற்றியாளராக பி.எம்.ஜ.சி.எச் நிலையம் தெரிவு

## தரத்தை மையப்படுத்திய அணுகுமுறை அறிமுகம்

ஜெனீவா நகரில் அண்மையில் இடம்பெற்ற 2016 கோல்ட் சென்சரி சர்வதேச தர இ.ஆர்.ஏ (ERA) விருதுகள் வழங்கும் நிகழ்வில் பெருமைக்குரிய வெற்றியாளராக பி.எம்.ஜ.சி.எச் நிலையமானது தெரிவு செய்யப்பட்டுள்ளது.
இந்த வெற்றியாளர் தெரிவினைத் தொடர்ந்து பி.எம்.ஜ.சி.எச் நிலையமானது மொத்த தர முகா மைத்துவத்திற்கான கியூ.சி - 100 (QC-100) மாதிரியை பின்பற்று வதற்கான ஊக்குவிப்பினை தனது ஊழியர்களுக்கு வழங்கி வருகிறது.
அந்த வகையிலே மேற்படி மாதிரியின் இலக்கை அடைவதற்கான கலாச்சாரம் மற்றும் செயல்முறைமை விருத்திச் செயற்பாட்டு அணுகுமுறைகளை பி.எம்.ஜ.சி. எச் நிலையமானது அறிமுகம் செய்துள்ளது.
குறிப்பாக கியூ.சி - 100 புள்ளித் தரத்திற்கேற்ப தர மட்டங்களை பூர்த்தி செய்தல், பங்குபற்றலை ஊக்குவித்தல், குழுப் பணிக்கான தீர்மானம் எடுத்தல், வாடிக்கையாளர்கள் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்தல், தொடர்ச்சியான மேம்படுத்தல்கள் மற்றும் சூழலுக்கான மதிப்பை அடைவதற்காக தொழில்நுட்ப, பொருளாதார மற்றும் மனித வளங்களை பெற்றுக்கொடுத்தல் போன்ற நடைமுறைகளை பின்பற்றத் தொடங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.
இதன்படி கியூ.சி - 100 சம்பந்தப்பட்ட முயற்சிகளில் ஊழியர் பங்குபற்றலை ஊக்குவிப்பதற்கான மாதாந்த ஊக்குவிப்புத் திட்டத்தை பி.எம்.ஜ.சி.எச் நிலையமானது முன்னெடுத்து வருவதான தகவலை பிரதம நிறைவேற்று அதிகாரி சுனில் திசாநாயக்கவின் கருத்தறிக்கை தெரியப்படுத்தியுள்ளது.

# இசுசு என்.எம்.ஆர் டம்ப் றக் இலங்கையில் அறிமுகம்

## சதொச மோட்டோர்ஸ் மேற்கொண்டது



> “இலகு நிறை கொண்ட வணிக வாகனப் பிரிவில் ஏக விநியோகஸ்த்தராக சதொச மோட்டோர்ஸ் முன்னிலை வகிக்கிறது”

விற்பனைத்துறையில் நீண்ட கால அடிப்படையில் பெறுமதியை சேர்ப்பது தொடர்பிலான பேண்தகுநிலையினையும் அது சார்ந்து நிலைத்திருக்கும் செயற்றிறனை பெற்றுக் கொடுத்தல் என்பதனை கருத்திலெடுத்தும் இலங்கையில் உள்ள சந்தைகளில் முதன் முறையாக இசுசு என்.எம்.ஆர் டம்ப் றக் தனது அறிமுகத்தைப் பெற்றுள்ளது.
இந்த அறிமுகத்தை சதொச மோட்டோர்ஸ் தனது தலைமைக்காரியாலயத்தில் அண்மையில் மேற்கொண்டுள்ளமை நோக்கத்தக்கது.
இந்த நிகழ்வில் ஜப்பான் இசுசு நிறுவன மற்றும் இரொச்சு றேடிங் நிறுவனங்களை சேர்ந்த சிரேஷ்ட அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தனர். அவர்களுடன் சதொச மோட்டோர்ஸ் இன் சிரேஷ்ட முகாமைத்துவ அங்கத்தவர்களும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.
இந்த அறிமுகம் என்பது நிறுவனத்தின் வேகமான வளர்ச்சிப் போக்கினையும், வளர்ந்து வரும் வாடிக்கையாளர் தேவையை நிவர்த்தி செய்வதற்கென நிறுவனம் மேற்கொண்டு வருவதனை அர்ப்பணிப்பினையும் எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது.

# பிரிட்டனில் வேலையின்மை விகிதம் 4.6 வீதத்தால் வீழ்ச்சி




பணவீக்கம் மற்றும் ஊதிய வளர்ச்சி காரணமாகபிரிட்டனில்வேலையின்மைவிகிதம்4.6 சதவீதத்திற்கு குறை வடைந்துள்ளதான தகவல்கள் தெரிவிக்கப்படுகின்றது.
நடப்பாண்டின் முதல் மூன்று மாதங்களில் வேலையற்றோர் எண்ணிக்கையானது 53 ஆயிரத்தினால்குறைவடைந்து1.54மில்லியனாக காணப்பட்டதாக தேசிய புள்ளி விபரவியல்திணைக்களம்தெரிவித்துள்ளது. அத்துடன் மேலதிக கொடுப்பனவுகள் தவிர்ந்து வாராந்தச் சராசரி வருமானம் என்பது 2.1சதவீதத்தினால் அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகின்றது.
அதேவேளைபணவீக்கமானதுகடந்தஏப்ரல் மாதத்தில் 2.7 சதவீதமாகப் பதிவாகியுள்ளது. இந்தப் பதிவானது கடந்த 2013 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்தின் பின்பான அதிகூடிய அதிகரிப்பாகக் காணப்படுகி றது. குறிப்பாக 1975 ஆம் ஆண்டு ஜூன் மாதம் தொடக்கம் ஒகஸ்ட்மாதம்வரையானகாலப்பகுதிக்குபின்பாக வேலையற்றோர் வீதம் என்பது இத்தகைய குறைவைக் காட்டவில்லை என்ற தகவல்தரலைபொருளாதாரவல்லுநர்கள்சுட்டிக் காட்டியுள்ளமை நோக்கத்தக்கது.

# இனிப்பு சுவையுடன் கூடிய கறுவாப்பட்டைத் தேயிலை அறிமுகம்

## ஸ்கோட்பிட் ஹெல்த் கெயார் நிறுவனத் தயாரிப்பாக வெளிவந்துள்ளது

ஸ்கோட்பிட்ஹெல்த்கெயார்நிறுவனம் மருத்துவக் குணமுடைய, இனிப்புச் சுவையுடன் கூடியதான இயற்கைக்கறுவாப்பட்டைத்தேயிலையை அறிமுகம் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
உடற்பருமன், கொலஸ்ரோல், நீரிழிவு, இதயநோய்கள், உயர் குருதி அழுத்தம் உட்பட 36 வகையான நோய்களைக்குணமாக்கும்வகையில் இயற்கையான கறுவாப்பட்டைச் சுவையுடன் கூடியதாக 'சினாம்டா' என்ற பெயரில் இந்தத் தேயிலை சந்தையில் அறிமுகமாகியுள்ளது.
நூறு வீதம் இயற்கையான மூலிகைகளை கொண்டுள்ளமையை உறுதிப்படுத்தும் விதமாக ஜ.டி.ஜ தரநிர்ணய அனுமதியும், ஐ.எஸ்.ஓ தர நிர்ணயமும் சினாம்டாவுக்கு கிடைத்துள்ளதாகக்கூறப்படுகிறது.
இந்தத் தேயிலையை நாள் ஒன்றுக்கு இரண்டு தொடக்கம் நான்கு தடவைகள் குடிக்கலாம் என மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர். மேலும் இந்தத் தேயிலைப் பக்கற்றிலிருந்து100கோப்பைத்தேநீரை தயாரிக்க முடியும் எனவும் இதன் தயாரிப்புக்குச் சீனி தேவையில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.
தவிர, இலங்கையிலிருந்து 92 சதவீதமான கறுவாப்பட்டைகள் ஏற்றுமதி செய்யப்படுகின்ற போதும் இலங்கையர்கள் அவற்றை முறையாக பயன்படுத்திக்கொள்ளாத தன்மைகளே காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.




CSE COLOMBO STOCK EXCHANGE

கொழும்பு பங்குப்பரிவர்த்தனை - 147-2/3, கே.கே.எஸ் வீதி , யாழ்ப்பாணம் - 212221455

19/5/2017
www.cse.lk

| | | | | |
|---|---|---|---|---|
| ASPI | 31.76 | 6,729.66 | 6,697.90 |
| S&P SL20 | 3.60 | 3,844.68 | 3,841.08 |
| வியாபாரப்புரள்வு | | 618,017,410 | 629,237,950 |
| உள்நாட்டு- கொள்வனவு | | 576,983,620 | 498,823,616 |
| விற்பனை | | 577,712,580 | 527,688,832 |
| வெளிநாட்டு- கொள்வனவு | | 41,033,776 | 130,414,336 |
| விற்பனை | | 40,304,824 | 101,549,144 |




| | | | | |
|---|---|---|---|---|
| ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் | JKH.N | 168.50 | 873,691 | 146,658,172 |
| அக்சஸ் எஞ்யினியரிங் | AEL.N | 26.40 | 2,882,856 | 76,355,672 |
| டோக்கியோ சிமேன் | TKYO.N | 76.70 | 864,270 | 66,527,873 |
| பிறவுன்ஸ் இன்வெஸ்மென் | BIL.N | 2.30 | 23,637,889 | 50,777,377 |
| சென்றல் பைனான்ஸ் | CFIN.N | 96.00 | 328,867 | 30,299,790 |
| றிச்சட் பீறிஸ் | RICH.N | 9.40 | 2,753,158 | 25,777,192 |
| கவின் டெக் | PARQ.N | 74.20 | 239,765 | 17,646,968 |
| சிலோன் டோபாக்கோ | CTC.N | 990.00 | 16,645 | 16,689,484 |
| ஹற்றன் நஷனல் வங்கி | HNB.N | 234.00 | 56,100 | 13,184,205 |
| சம்பத் வங்கி | SAMP.N | 290.00 | 43,015 | 12,385,856 |

அறிவித்தல்கள்
முதலீட்டு உத்திகள் பயிற்சிப்பட்டறை
June 17 & 18

பங்குலாபம்
அலுமினைகள் ரூபா. 0.50 இடைக்காலம்
சிலோன் கொஸ்பிற்றல் ரூபா. 3.60 இறுதி

| சந்தைக் குறிகாட்டிகள். | |
|---|---|
| கம்பனிகள் | 296 |
| பரிமாற்றத்தில் | 235 |
| விலை உழைப்பு | 12.3 |
| புத்தகப்பெறுமதி | 1.5 |
| பங்குலாப விளைவு | 2.62 |



# மாணவர் எதிர்கொள்ளும் சவால்களும் அவற்றுக்கான ஆற்றுப்படுத்தல்களும்

வயவன் சிவசாகரன்

"ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்" என்றார் வள்ளுவர்.

நவீன கல்விச் சித்தாந்தத்திலே அனைவராலும் பேசப்படுகின்ற ஒரு விடயமாகக் கருதப்படுவது அறிவுப் பொருளாதாரம் ஆகும். அதாவது அறிவு, ஆற்றல், திறன் தேர்ச்சி படைத்த மனித வளத்தை உருவாக்குவதே இன்றைய பொருளாதாரமாகும்.

ஒரு சமூகத்திலே வெடிப்பு அல்லது சமூகப் பெயர்ச்சி ஏற்படுத்த வேண்டுமாயின், கல்வி ஒன்றினால் மட்டுமே அது முடியும். எனவே நாம் அனைவரும் கல்வியைப் பெற்று தேர்ச்சி மிக்கவர்களாவோம். அதனூடாகவே வீட்டையும் நாட்டையும் வளமுடையதாக உருவாக்க முடியும்.

இன்றைய கல்விச் சமூகத்திலே பல மாற்றங்கள் ஏற்பட வேண்டுமென அனைத்துத் துறையினரும் எதிர்பார்க்கின்றனர். ஏனைய துறைகளில் பல்வேறு குறைபாடுகள் காணப்பட்டாலும் அவற்றை எளிதில் நிவர்த்தி செய்து கொள்ள முடியும். ஆனால் கல்விச் சமூகம் தவறு இழைக்குமானால், ஒட்டுமொத்தச் சமூகமுமே பிறழ்வை எதிர்நோக்க நேரிடும்.


**பாடசாலையில் குறைபாடுகள்**

இன்றைய பாடசாலைச் சமூகத்திலே பல்வேறு குறைபாடுகள் காணப்படுகின்றன. இதனால் தான் கல்வியில் நாம் முதலிடம் பெறமுடியாதுள்ளது. அந்த வகையில் இந்தப்பிரச்சினைகளைப் பின்வருமாறு நோக்குவோம்.

01.மாணவர் தொடர்பான பிரச்சினைகள்
02.ஆசிரியர் தொடர்பான பிரச்சினைகள்
03.அதிபர் தொடர்பான பிரச்சினைகள்
04.சமூக தொடர்பான பிரச்சினைகள்

இந்தக் கட்டுரையானது தற்போதைய பாடசாலை மாணவர்கள் எதிர் கொள்ளும் சவால்களும் அவற்றுக்கான ஆற்றுப்படுத்தல்களும், எவ்வாறு அமைய வேண்டும் என்ற விதமாக அமைந்துள்ளது.

01.வறுமைக்கு உடபட்ட
02.பெற்றோர், உறவினர்களை இழந்த பிள்ளைகள்
03. சிறுவர் துஷ்பிரயோகத்துக்கு உட்பட்டோர்.
04.பிள்ளைகளது அடிப்படைத்தேவைகள் நிறைவேற்றப்படாமை
05.போதைவஸ்துப் பாவனை
06.புதைத்தல், மதுபாவனை தொடர்பான பிரச்சினைகள்
07.மாணவர்களது ஆற்றல்களைச் சான்றுபடுத்துவதற்கான கல்வி வாய்ப்புக் கிடைக்காமை
08.கற்றல் கற்பித்தலில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள்
09.பாடசாலைச் சூழல் மாணவர்களுக்கு வெறுப்பூட்டுவனவாக இருத்தல்.
10.மாணவர்கள் சமமாக மதிக்கப்படாமை





11.மாணவர்களது பிரச்சினைகள் சந்தேகங்களைத் தீர்ப்பதற்குரிய வளங்கள் காணப்படாமை
12.மாணவனது ஆற்றல்களுக்கு ஏற்றவாறுகற்றலை வழங்க முடியாத பாடசாலைகள்.
13.கைபேசி, முகப்புத்தகம், தொலைக்காட்சி தொடர்பான பிரச்சினைகள்
14.மாணவர்களுக்கான சரியான பொழுதுபோக்கு வசதிகள் வழங்கப்படாமை
15.மாணவர்களது ஆற்றலை வளர்க்கக்கூடிய இணைப்பாடவிதானச் செயற்பாடுகளின் போதாமைகள்
16.வீட்டுச்சூழல், பாடசாலைச்சூழல் மாணவரது கற்றலுக்கு ஏற்ற வகையில் அமையாமை
17.மாணவர்களுக்கு ஏற்றாற்போல சமூகம் பிறழ்வாகக் காணப்படாமை
18.பெற்றோர் வெளிநாட்டில் தங்கித் தொழில் செய்தல்
19.போரின் பின்னரான வடுக்கள்
20.மாணவர்களின் இழப்புக்கள் சீர்செய்யப்படாமை
21.சமவயதுக் குழுக்கள் தொடர்பான இடர்கள்
22. சிறப்புத் தேவையுடைய பிள்ளைகள்
23.மீத்திறனுடைய மாணவர்களுக்கான ஏற்பாடுகள் போதாமை
24.பாடசாலைகளுக்கும் தொழிற் கல்விக்கும் இடையிலான தொடர்புகள் மிகக் குறைவாகக் காணப்படல்
25.மாணவர்களுக்கான வளப்பங்கீட்டில் சரிநிகர் சமத்துவம் பேணப்படாமை
26.மாணவர்களுக்கான வாய்ப்புக்கள் மட்டுப்படுத்தப்பட்டிருத்தல்
27.மாணவர்களது திறன்கள் சான்றுபடுத்தப்படாமை
28.பாடசாலை மாணவர்கள் எதிர்கொள்ளும் சவால்களும் அவற்றுக்கான வழிகாட்டல்களும்.

மாணவர்கள் ஒவ்வொருவரும் தனியாள் வேறுபாடுகளைக் கொண்டவர்கள். அவர்களது நுண்மதி, அறிவு, வயது, முதிர்வு, பலம், பலவீனங்கள், திறன்கள் என்ற வகையில் வேறுபடுகின்றனர். எனவே ஆசிரியர்கள் இவற்றைக் கருத்தில் கொண்டு மாணவர்கள் கற்றலில் விருப்புடன் ஈடுபடக்கூடிய வகையில் பிள்ளைநேய வகுப்பறைச் சூழலை உருவாக்குவதன் மூலம் பாடத்தை திட்டமிட்டுச் செயற்பாடு சார்ந்த வகையில் மாணவர்கள் இலகுவாகக் கற்கும் வகையில் கற்பித்தல் சாதனங்களைப் பயன்படுத்தி கற்பிப்பதன் மூலம் சிறந்த அடைவு மட்டத்தை ஏற்படுத்த முடியும்.

எனவே சகல மாணவர்களுக்கும் ஒரேவிதமாகப் பாடத்தைத் திட்டமிடாமல் மெல்லக் கற்போர் மீதத்திறனுடையோர் என்ற வகையில் பாடத்தைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவது பயனுடையதாக அமையும்.

**வேறுபட்ட கற்கும் பாங்கு**

மாணவர்கள் ஒவ்வொருவரும் கற்கும் பாங்கானது பல்வேறுபட்டதாக அமைகின்றது. அந்த வகையில்,

01.வகுப்பறைக் கற்றல் கற்பித்தலின்போது அனைத்து விடயங்களையும் உள்வாங்கிக் கொள்வர்.
02.கற்றவற்றைக் காலையில் எழுந்து கற்றுக் கொண்டு நீண்ட நாள் ஞாபகத்தில் வைத்திருத்தல்
03. மாலை வேளையில் கற்றுக் கொள்ளல்
04.அமைதியான இடத்தில் இருந்து கற்றல்
05. நூலகத்தில் இருந்து கற்றல்
6.வீட்டுச்சூழலில் தாயாருக்கு உதவி செய்து கற்றல்
07.வானொலி கேட்டவாறு கற்றல்
08.பாயில் படுத்திருந்தவாறு படித்தல்
09.உயரமான இடங்களில் இருந்தவாறு கற்றல்.

இவ்வாறாக மாணவர்களது கற்றல் பாங்கு பல்வேறுபட்டதாக அமைகின்றன. எனவே மாணவர்கள் கற்கும் பொழுது பரீட்சை எழுதுவதற்கு ஏற்ற வகையில் கற்க வேண்டும் அத்துடன் அவர்களது கற்கும் வடிவம் வேறுபட்டதாக அமையலாம்.

பிள்ளையின் வீட்டுச்சூழலானது பாதுகாப்பானதாக அமைய வேண்டும். கிராமப்புற மாணவர்கள் பலர் வீடு, பெற்றோர், உறவினரை இழந்த சூழ்நிலையில் வாழ்ந்து வருகின்றனர். எனவே அவர்களுக்கான பாதுகாப்புத் தேவைகள் நிறைவேற்றப்படாதவிடத்து அவர்களால் நிம்மதியாக நித்திரை செய்ய முடியாது. நெருக்கீட்டுக்கு உட்படுகின்றனர். இதனால் கற்றல்மீது கவனம் செலுத்த முடியாத நிலை ஏற்படும். அத்தோடு தனக்கு ஏற்பட்ட நிலை தொடர்பாக சிந்தனைவயப்படுவதால் கற்றல் பாதிப்படைகின்றது. எனவே நாம் பிள்ளைகளது பாதுகாப்பை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

**மாணவர்களின் பிரச்சினைகள்**

மாணவர்கள் ஒவ்வொருவரும் நாளாந்தம் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து அதற்குத் தீர்வுகாண முடியாத நிலையில் துன்பப்பட்டு அந்தப்பிரச்சினைக்கு தீர்வு கிடைக்காமலேயே பிழையான வழியில் செல்லல், தற்கொலை செய்தல், சமூகவிரோதச் செயற்பாடுகளில் ஈடுபடல், பாடசாலையை விட்டு இடைவிலகல், என்ற வகையில் தம்மைக் கட்டமைத்துக் கொள்கின்றனர் . எனவே ஒவ்வொரு பாடசாலைகளிலும் ஆலோசனை வழிகாட்டல் நிலையம் உயிர்த்துடிப்புடன் செயற்படுவதோடு அதற்கு நியமிக்கப்படும் ஆசிரியர் உடல். உள ஆன்மிக பலமுடையவராக இருக்க வேண்டும். ஆனால் தற்போது பாடசாலைகளில் எவருக்கும் பாடம் குறைவாக உள்ளதோ, அவரே ஆலோசனை வழிகாட்டல் ஆசிரியர். எனவே மாணவர்களது மனதில் இடம் பிடித்துள்ள அர்ப்பணிப்புள்ள ஆசிரியர்களை அப்பணிக்கு நியமிப்பது சிறப்பானது.

மாணவர்களின் கற்றலுக்கு உதவுபவராக அரச அரச சார்பற்ற நிறுவனங்களும் ஆலயங்களும் உதவ வேண்டும். அதாவது பெற்றோர் வழங்கும் உதவிகளுக்கு அப்பால் மாணவர்களுக்கான சப்பாத்து, பாடசாலை சீருடை, கற்றல் உபகரணங்கள், தலைமைத்துவப் பயிற்சிகள், ஆக்கத்திறன் செயற்பாடுகள், புதிய கண்டுபிடிப்புக்கள், இணைப்பாடவிதான செயற்பாடுகள். என்ற வகையில் உதவிகளை வழங்க வேண்டும். எனவே எமது ஊரிலுள்ள ஆலயங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பாடசாலைகளைத் தத்தெடுக்க வேண்டும். ஆலயங்களில் இசைக்குழு வைத்தல்,வாண வேடிக்கைகள், கச்சேரிகள், களியாட்ட நிகழ்வுகளுக்கு செலவிடப்படுகின்ற பெருந்தொகைப் பணத்தை கல்விக்காக செலவழிப்போம். அப்போது தான் எமது பிரதேசம் அறிவுப் பொருளாதாரமாக மாற்றமடையும்.

இன்றைய சமூகத்திலே பாடசாலை மாணவர்கள் ஒழுக்கம் குறைந்தவர்களாகக் காணப்படுகின்றனர். இதற்குக் காரணம் பெற்றோர்கள் தமது பிள்ளைகளைச் சரியான வழியில் வழிப்படுத்தாமையாகும். பாடசாலைகளில் ஒழுக்கத்தைப் பேணுவதற்கான செயற்பாடுகள் பெருமளவில் ஒழுங்க மைக்கப்பட வேண்டும்.

அப்போது தான் மாணவர்களுக்கு பாடசாலை மீது பற்று

(நாளை தொடரும்)

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT




## தனுசு

தடைகள் பல வந்தாலும் தயங்காமல் எடுத்த வேலையை முடித்துக் காட்டும் நீங்கள், சொன்ன சொல் தவறாதவர்கள். 25ஆம் திகதி வரை உங்கள் பூர்வ புண்ணியாதிபதியாகிய செவ்வாய் பகவான் 6ஆம் வீட்டில் வலுவாக அமர்ந்திருப்பதால் அனுபவ அறிவால் இந்த மாதத்தில் நீங்கள் வெற்றியடைவீர்கள்.

அதிகாரிகளின் நட்புக் கிடைக்கும். உங்களுக்குக் கோபம் வருமாறு சிலர் பேசினாலும் அதையெல்லாம் பொருள்படுத்தாமல் இருப்பீர்கள். நிதானமாக இருந்து பழைய பிரச்சினைகளுக்குச் சுமுகமாகத் தீர்வு காண்பீர்கள். எதிர்பார்த்தபடி பணவரவு உண்டு. பிள்ளைகளின் உயர்கல்வி விடயத்தில் அதிக கவனம் செலுத்துவீர்கள். தரமான கல்வி நிறுவனத்தில் வருங்காலத்தில் நல்ல வேலை வாய்ப்புள்ள பாடப்பிரிவில் பிள்ளைகளைச் சேர்க்க வேண்டுமென முழு முனைப்புடன் காணப்படுவீர்கள். பூர்வீகச் சொத்தைச் சீர் செய்வீர்கள். ஆனால் 14ஆம் திகதி வரை சூரியன் 5ஆம் வீட்டில் நிற்பதால் அவ்வப்போது தூக்கம் குறையும். முன் கோபமும் வந்து போகும். பிள்ளைகளிடம் அவ்வப்போது குறைகளைக் கண்டுப்பிடித்து வருத்தமடைவீர்கள். நிறைகளையும் பாராட்டத் தயங்காதீர்கள். கர்ப்பிணிப் பெண்கள் நீண்ட தூரப் பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. தந்தையாரின் ஆரோக்கியம் பாதிக்கும். பிதிர்வழி சொத்துப் பிரச்சினை தலைத்தூக்கும். சுக்கிரன் சாதகமாக இருப்பதால் குடும்பத்திலும் அமைதி திரும்பும். பழைய கடன் பிரச்சினைகள் கட்டுப்பாட்டுக்குள் வரும். உறவினர், நண்பர்கள் பக்கபலமாக இருப்பார்கள். நட்பு வட்டமும் விரிவடையும். ஏழரைச் சனி தொடர்வதாலும், உங்கள் ராசிநாதன் குரு 10இல் நீடிப்பதாலும் செலவுகளைக் கட்டுப்படுத்த முடியாமல் திணறுவீர்கள். இப்படியே போனால் எதிர்காலத்தில் என்னவாகுமோ என்றெல்லாம் கவலைப்படுவீர்கள். எவரையும் பகைத்துக் கொள்ள வேண்டாம். கன்னிப் பெண்களே! சுறுசுறுப்பாவீர்கள். வேற்றுமொழிக்காரர்களின் நட்பால் ஆதாயமடைவீர்கள். வியாபாரத்தில் போட்டிகள் இருந்தாலும் லாபம் குறையாது. பழைய வாடிக்கையாளர்கள் மனங்கோணாமல் பார்த்துக் கொள்ளுங்கள். வேற்றுமொழி வாடிக்கையாளர்கள் அதிகரிப்பார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உங்களை ஆதரித்துப் பேசுவார்கள். ஆனால் மூத்த அதிகாரிகளுடன் கசப்புணர்வுகள் வரும். கலைத் துறையினரே! உங்களுடைய படைப்புகள் பலராலும் பாராட்டிப் பேசப்படும். ரசிகர் கூட்டம் அதிகரிக்கும். குறுகிய வட்டத்திலிருந்து விடுபட்டு வெற்றிப் பாதையைப் கண்டறியும் மாதமிது.

## வரலாற்றில் இன்றைய தினம்

1498-போர்த்துக்கேய கடலோடி வாஸ்கொட காமாவால் இந்தியாவுக்கான கடல்வழிப் பாதை கண்டு பிடிக்கப்பட்டது.

1645-மிங் வம்சத்திடமிருந்து கியூங் வம்சத்துக்கான ஆட்சி மாற்றத்தின்போது யாங் ஷீ நகரில் 8இலட்சம் குடிமக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

1862-காணிகளை மக்களுக்கு உரித்தாக்கும் ஹோம்ஸ்ரீட் சட்டத்தில் அமெரிக்க அரச தலைவர் ஆபிரகாம் லிங்கன் ஒப்பமிட்டார்.

1875-மீற்றர் பட்டயத்தில் 17 நாடுகள் ஒப்பமிட்டதையடுத்து பன்னாட்டு அலகு நடைமுறை நடைமுறைக்கு வந்தது.

1882-ஜேர்மனியப் பேரரசு, ஆஸ்திரியா ஹங்கேரி, மற்றும் இத்தாலி ஆகிய நாடுகள் இணைந்து முக்கூட்டினை உருவாக்கின.

1883-கரகாடோ எரிமலை குமுறியது. மூன்று மாதத்தின் பின்னர் எரிமலை வெடித்தபோது 36 ஆயிரம் மக்கள் உயிரிழந்தனர்.

1891-தோமஸ் எடிசனால் முதல் முதலாக கைன்ரோஸ்கோப் பொதுமக்களுக்குக் காட்சிப்படுத்தப்பட்டது.

1902 -அமெரிக்காவிடமிருந்து கியூபா சுதந்திரம் பெற்றது. தோமஸ் எஸ்ராடா பால்மா நாட்டின் முதலாவது அரசரானார்.

1927-ஜெட்டா ஒப்பந்தம். இப்ன் சவுட் அரசின் இறையாண்மையை ஐக்கிய இராச்சியம் அங்கீகரித்ததையடுத்து ஹெஜாய் மற்றும் நெஜ்ட் இராச்சியங்கள் ஒன்றாக்கப்பட்டு சவூதிஅரேபியா ஆகியது.

1948-சீனக் குடியரசின் முதலாவது அரசதலைவராக சியாங்கை ஷேக் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1956 -பசுபிக் சமுத்திரத்திலுள்ள பிகினி அடொல் பகுதியில் அமெரிக்காவின் முதலாவது ஐதரசன் குண்டு போடப்பட்டது.

1980 -கனடாவிலிருந்து கியூபெக் சுதந்திரம் பெறும் கருத்துக் கணிப்பில் 60 வீதமான மக்கள் எதிர்த்து வாக்களித்தனர்.

1983- எயிட்ஸ்க்குக் காரணமான H.I.V வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டமை தொடர்பான முதலாவது பிரசுரம் சயன்ஸ் பத்திரிகையில் வெளியிடப்பட்டது.

1990-கம்யூனிஸ்ட் அரசதலைவர் மற்றும் நாடாளுமன்றத்துக்குப் பின்னதாக முதலாவது தேர்தல் றோமானியாவில் இடம்பெற்றது.

1999 -ஆயுதங்கள் களையப்பட்டபின்னர் புளொட் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுவதாக அந்த அமைப்பு அறிக்கை.

1999 -66 சதவீத மக்கள் அரசியல் தீர்வுக்கு ஆதரவென கருத்துக் கணிப்புத் தெரிவிப்பு.

1999-இனப் பிரச்சினைத் தீர்வுக்கு உதவ 21 நாடுகள் விருப்பம்.

2002 -அமைதித் தீர்வுக்கு இதுவே இறுதிச் சந்தர்ப்பம்; போரா?. சமாதானமா? என்பதை அரசே தீர்மானிக்க வேண்டுமென புலிகளின் பிரமுகர் கரிகாலன் மட்டக்களப்பில் தெரிவிப்பு.

### நாளை

**வைகாசி-07**
ஞாயிற்றுக்கிழமை -21.05.2017
திதி: தசமி பி.ப.12.04
நட்சத்திரம்: பூரட்பாதி கா.06.51
சுபநேரம்:08.52-10.22 வரை
ராகுகாலம்:04.22-05.52 வரை

## தமிழ் அரசியல்வாதிகளும் மக்களும் பொறுப்புடன் செயற்பட வேண்டும்

முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற நினைவேந்தல் நிகழ்வில் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் அஞ்சலி உரை நிகழ்த்திய போது அங்கு வைத்து அரசியல் பேசவேண்டாமெனச் சிலர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். மக்கள் எந்த அளவுக்கு மனக்கொதிப்பு நிலையில் உள்ளனர் என்பதை இந்தச் சம்பவம் எடுத்துக் காட்டுகின்றது.

இறுதிப் போரின்போது தமிழ் மக்கள் எதிர்கொண்ட அவலங்களும் துயரங்களும் மிகக் கொடியவை. போரால் ஏற்பட்ட காயங்கள் இன்னமும் ஆறாத நிலையிலேயே ஏராளமானவர்கள் தமது காலத்தைக் கடத்தி வருகின்றனர். காணாமற் போன தமது உறவுகளைத் தேடிக் கொண்டிருப்பவர்கள் ஒருபுறம்; ஆக்கிரமித்து வைக்கப்பட்டுள்ள தமது நிலங்களை மீளப் பெறுவதற்காகப் போராடுபவர்கள் இன்னொரு புறம்; அழிந்துபோன தமது இவ்விடங்களை மீள அமைக்கும் பொருட்டு அலைந்து திரிபவர்கள் மறுபுறம்; தமது வாழ்வாதாரத்தைத் தேடித் திரிபவர்கள் வேறொரு புறம் எனப் பாதிக்கப்பட்ட தரப்பினர்கள் மனநிலை பாதிக்கப்பட்டவர்கள் போன்று அலைந்து திரிகிறார்கள். அரசும், அரசியல்வாதிகளும் தம்மைக் கைவிட்டு விட்டதாகவே இவர்கள் நம்பிக் கொண்டிருக்கின்றனர். இதனால் அரசியல்வாதிகள் மீது வெறுப்பும் கொண்டிருக்கிறார்கள். இதன் வெளிப்பாடாகவே முள்ளிவாய்க்காலில் அவர்கள் சம்பந்தருக்கு எதிராகக் கொதித்துள்ளனர்.

மக்கள் எந்த நிலையில் உள்ளார்களென்பதை அரசியல்வாதிகள் இனியாவது புரிந்த கொள்ள வேண்டும். மக்களின் பிரச்சினைகளை இனம் கண்டு இயலுமானவரையில் அவற்றுக்குத் தீர்வு காண்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். இதை விடுத்து ஒருவரையொருவர் குற்றம் சாட்டுவதில் அரசியல்வாதிகள் நேரத்தைக் கடத்திக் கொண்டிருப்பதை மக்கள் மன்னிக்கவே மாட்டார்கள்.

சம்பந்தர் ஒரு பழுத்த அரசியல்வாதி. விவேகமும் இராஜதந்திரமும் மிக்க ஒருவர். தமிழர்களின் பிரச்சினைகள் தொடர்பாக அவர் பல தடவைகள் அரசுடன் பேசியிருக்கிறார். அழுத்தத்தைப் பிரயோகித்திருக்கிறார். ஆனால் தற்போதைய நல்லாட்சி அரசு தமிழர்களுக்கு எதையாவது செய்யப் போய் வில்லங்கத்தில் மாட்டி விடுவோமா? என்ற அச்சத்தில் தயங்கிக் கொண்டிருக்கின்றது. இதனால்தான் தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் தாமதம் ஏற்படுகின்றது.




தமிழ் அரசியல்வாதிகள் இந்த உண்மைகளைப் பாதிக்கப்பட்ட மக்களிடம் தெளிவுபடுத்த வேண்டும். அப்போதுதான் அவர்கள் உண்மை நிலவரத்தைப் புரிந்து கொள்வார்கள். மக்களும், சம்பந்தர் போன்ற அரசியல் தலைவர்களை அவமானப்படுத்தும் வகையில் நடந்து கொள்வதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.



**மேடம்:**அன்றாடப் பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். பணியாளர்கள் விரும்பிய சலுகை கிடைக்கப் பெறுவர். பிள்ளைகளால் செலவு அதிகரிக்கும்.



**இடபம்:** திட்டமிட்ட பணி எளிதாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட லாபம் உயரும். பணியாளர்களுக்கு விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும். குடும்ப வளர்ச்சி கண்டு மகிழ்வர்.



**மிதுனம்:** உங்களின் தனித்திறமையை வெளிப்படுத்துவீர்கள். தாமதமான பணி ஒன்று எளிதாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் வியத்தகு முன்னேற்றம் காண்பீர்கள்.



**கடகம்:** திட்டமிட்டு செயல்பட்டு முன்னேறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். பணியாளர்கள் சுதந்திர உணர்வுடன் பணிபுரிவர். பெண்கள், புகுந்த வீட்டினரின் அன்பைப் பெறுவர்.



**சிங்கம்:** குடும்ப சிரமம் பற்றிப் பிறரிடம் சொல்ல வேண்டாம். இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் சுமாரான லாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்திப்பர்.





**கன்னி:** நற்செயலுக்கு உரிய பலன் தேடி வரும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு எளிதாக நிறைவேறும். லாபம் பன்மடங்கு உயரும். பணியாளர்கள் சலுகை பெற்று மகிழ்வர்.



**துலாம்:** பணியில் பொறுப்பு அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் சுமாரான வருமானம் கிடைக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். வெளியூர் பயணத்தில் திடீர் மாறுதல் உண்டாகும்.



**விருச்சிகம்:** முக்கிய பணிகளை விரைந்து முடிப்பீர்கள். குடும்பத்தினர் பாசத்துடன் நடந்து கொள்வர். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டி விலகும். லாபம் உயரும். பிள்ளைகள் வழியில் சுபச் செலவு செய்வீர்கள்.



**தனுசு:** இடையூறு செய்தவரை இனம் கண்டு விலகுவீர்கள். தொழில், வியாபாரத்தில் லாபம் சீராக இருக்கும். பணியாளர்களுக்கு, சக ஊழியர்களின் உதவி கிடைக்கும். அரசு வகையில் நன்மை கிடைக்கும்.



**மகரம்:** அன்றாடப் பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான முன்னேற்றம் உண்டாகும். வருமானம் உயரும். பணியாளர்களுக்குச் சலுகை கிடைக்கும்.



**கும்பம்:** உறவினர் அன்பு, பாசத்துடன் நடந்து கொள்வர். தொழில், வியாபாரத்தில் தாராள பணவரவு கிடைக்கும். பணியாளர்கள், நிர்வாகத்தினரின் பாராட்டைப் பெறுவர். பொருள் வாங்குவர்.



**மீனம்:** அறிமுகம் இல்லாதவரிடம் நெருக்கம் வேண்டாம். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு நிறைவேற தாமதம் ஆகலாம். லாபம் சுமார். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்திப்பர்.

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 4 | 7 | | | | | 9 | |
| | 9 | | | 4 | | 7 | | |
| | 8 | 5 | | | | 4 | 6 | |
| | | 1 | 2 | | 4 | | | 9 |
| | 2 | | 5 | 9 | 6 | | | |
| 9 | | | 8 | | | 2 | | |
| | 6 | 2 | | | | 1 | 4 | |
| | | 9 | | 2 | | | | |
| | | | | | | 9 | 2 | 7 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 1 | 3 | 6 | 7 | 5 | 4 | 8 | 9 |
| 7 | 9 | 4 | 1 | 8 | 2 | 3 | 6 | 5 |
| 5 | 8 | 6 | 3 | 9 | 4 | 1 | 2 | 7 |
| 1 | 3 | 2 | 7 | 6 | 9 | 5 | 4 | 8 |
| 6 | 7 | 5 | 8 | 4 | 1 | 9 | 3 | 2 |
| 8 | 4 | 9 | 2 | 5 | 3 | 6 | 7 | 1 |
| 3 | 6 | 1 | 9 | 2 | 8 | 7 | 5 | 4 |
| 4 | 2 | 7 | 5 | 1 | 6 | 8 | 9 | 3 |
| 9 | 5 | 8 | 4 | 3 | 7 | 2 | 1 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.




நடிகை பிரியங்கா சோப்ரா, மற்றொரு கோலிவூட் படத்தில் நடிக்க ஒப்பந்தமாகி உள்ளாராம். இப்படத்துக்கு 'ஏ கிட் லைக் ஜாக்'என பெயரிடப்பட்டுள்ளது. படத்தை பால் பெர்னான் தயாரிக்கிறார். இவரது படத்தில் நடிக்க பிரியங்கா சோப்ரா ஒப்பந்தமாகி உள்ள தகவலை பெர்னான் தனது கீச்சகப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். இப்படத்தில் நடிப்பதற்கு பிரியங்கா தான் பொருத்தமாக இருப்பார் எனவும் அவர் பதிவிட்டுள்ளார்.

ரோமியோ @Killer_Chubbly

தனக்குத் துரோகம் நிகழும் வரை தான் செய்த துரோகம் நியாயமாகவே கருதப்படும்

6 2




இப்போ போக வேண்டாம் மனுசங்க குறுக்க போயிடுவாங்க...




நாம போற வேலை உருப்படாது... ஒரு எலிக்கூட மாட்டாது.. வெயிட் பண்ணு..!

உலக அளவில் ஆண்கள் சமைக்கும் உணவே அதிக சுவையானது ஸ்பெயின் யூனிவர்சிடி அறிக்கை



இந்த விடயம் கடுகளவு வெளிய தெரிஞ்சாலும் உசுருக்கு ஆபத்து

எனக்கு ஒரு டவுட்... தண்டசோறு தண்டசோறுனு சொல்றாங்களே...



அதுல எந்த குழம்பு ஊத்தி சாப்பிட்டா நல்லா இருக்கும்...

பாட்டி முந்தானையில் இருந்து குடுத்த 50 பைசாவில் உள்ள சந்தோஷம் இப்ப ஏ.டி.எம் ல இருந்து ஆயிரம் ஆயிரமா எடுக்கும் போது கூட வரல



WhatsApp

## பிழைகளைத் திருத்தி எழுதுவோம்

**கீழ்க்காணும் வாக்கியங்களில் எழுத்து, சொல், பொருட் பிழைகள் இருப்பின் அவற்றைத் திருத்தி புள்ளிக்கோட்டில் சரியாக எழுதுவோம்**

1. வழமான மண்ணில் பயிர்கள் செளித்து வழரும்.

----------------------------------------------------

2. புடவைக் கடையில் தீபாவலி வில்பனை நடபெற்றன.

----------------------------------------------------

3. மளை இம்மையால் மரங்கள் செடிகல் அளிந்து போனது.

----------------------------------------------------

4. திருவழ்ளுவர் இயற்றிய திருக்குறரில் 13 அதிகாரங்கள் உள்ளது.

----------------------------------------------------

5. பறவைகள் வாணத்தில் வரிசயாகப் பறந்தது.

----------------------------------------------------

6. புதிய அதிசூடியை எளுதியவர் பாரதிதாசன் ஆவார்.

----------------------------------------------------

7. பரதியார் ஒடி விளையாடாதே பாப்பா என்று பாடினார்.

----------------------------------------------------

8. ஆலயம் தொழுவது சாலவும் நன்றே.

----------------------------------------------------

9. கிளிந்த சோலையின் சுயசரிதை எழுதுக?

----------------------------------------------------

10. சிறந்த நூள் நண்பர்களைப் போன்றன.

----------------------------------------------------

## தேடல்



ஒரு மரங்கொத்திக் குருவி தனது கூரிய அலகால் 'டொக்' டொக்' என்று ஒரு மரத்தைக் கொத்திக் கொண்டு இருந்தது. பின்னர் அதற்குச் சற்றும் மேலே கீழே என்று தாவித் தாவி ஏறி அங்கும் மிங்குமாக கொத்திக் கொண்டிருந்தது. மரங்கொத்தியின் செயலைக் கவனித்துக் கொண்டிருந்த மனிதன் ஒருவன் "ஏய் மூடக் குருவியே! எதற்காக மரம் முழுவதும் கொத்திக் கொண்டிருக்கிறாய். இது வீண் வேலை என்று உனக்குத் தோன்றவில்லையா? மேலும் இப்படி தொடர்ந்து கொத்திக் கொண்டிருந்தால் உன் அலகுக்கு வலிக்காதா? மேலும் கூர்மையான அந்த அலகுகள் மழுங்கியும் போய் விடுமல்லவா? என்று கேட்டான். ஆனால் மரங்கொத்தி மரத்தில் அங்கும் இங்கும் கொத்துவதை நிறுத்தவேயில்லை. சிறிது நேரத்தில் மரத்திலுள்ள ஒரு போறையைக் (மென்மையான பகுதி) கண்டு அந்த இடத்தைத் தன் அலகால் குத்திப் பெயர்த்தது. அந்தப் போறைக்குள் நிறைய வெண்ணிறமான புழுக்கள் இருந்தன. அவற்றை ஆவலுடன் கொத்தித் தின்றது. பின்னர் மனிதனைத் திரும்பிப் பார்த்து "மனிதனே! நீயும் உன் தேவைகள் நிறைவேற தேடிக் கொண்டிரு. சோம்பியிராதே. உடலில் சேதாரம் வந்து விடும் என்று உழைக்காமல் இருந்து விடாதே. மரத்திலும், மண்ணிலும், நீரிலும் ஏன் உன்னால் இயன்ற இடமெங்கும் தேடு. இப்போது நான் தேடிக் கண்டடைந்ததைப் போல் நீயும் கண்டடைவாய் என்றது.

**கேளுங்கள் கொடுக்கப்படும். தட்டுங்கள் திறக்கப்படும்**
**தேடுங்கள் கண்டடைவீர்கள்**

## மனிதனாக இருப்போம்

**கிறிஸ்தவனாய் இருங்கள்**
**பௌத்தனாய் இருங்கள்**
**இஸ்லாமியனாய் இருங்கள்**
**இந்துவாய் இருங்கள்**
**இவை எல்லவாற்றுக்கும் மேலாக முதலில் மனிதனாக இருங்கள்**

1. திறமை என்பது கடவுளால் கொடுக்கப்பட்டது.
   அடக்கத்துடன் இருப்போம்
2. புகழ் என்பது மனிதரால் கொடுக்கப்பட்டது.
   நன்றியுடன் இருப்போம்.
3. அகம்பாவம் என்பது நமக்கு நாமே கொடுத்துக் கொண்டது.
   எச்சரிக்கையுடன் இருப்போம்.



## மின்னல் ஏற்படும் பொழுது....

- வீட்டுக்கு (கட்டடங்களுக்கு) வெளியே நடமாடுவதைத் தவிர்த்தல்.
- உலோகப் பொருள்களுடனான தொடுகையைத் தவிர்த்தல
- தனியான மரத்தின் கீழ் நிற்பதைத் தவிர்த்தல்
- நீருள்ளஈரலிப்பான இடங்களைவிட்டு அகலுதல்
- தொலைபேசித் தொடர்புகளைத் தவிர்த்தல்
- திறந்த வெளியில் தனித்து நிற்பதைத் தவிர்த்தல்
- திறந்த வாகனங்களில் பயணம் செய்வதைத் தவிர்த்தல்.

## இரண்டு படங்களுக்கும் இடையே 12 வித்தியாசங்கள் உள்ளன. கண்டுபிடியுங்கள்



## பீவர்



நதிகளுக்குக் குறுக்கே பெரும் அணைகளைக் கட்டி நீர்த்தேக்கங்களை ஏற்படுத்தி அவற்றின் நடுவே வீடு கட்டி வாழும் ஒரு வினோத விலங்கு பீவர். இந்த விலங்குகள் அமெரிக்காவிலும் ஐரோப்பாவின் வடகிழக்குப் பகுதிகளிலும் அதிகமாகக் காணப்படுகின்றன. நன்கு வளர்ந்த பீவர் இரண்டரை அடி நீளமும் வால் முக்கால் அடி நீளமும் கொண்டிருக்கும். வால் தட்டையாய், அகலமான துடுப்புப்போலக் காணப்படும். இது நீந்துவதற்கு உதவுகின்றது. இவை மரத் துண்டுகளோடு களி மண்ணையும் வைத்துக் கொண்டு விஞ்ஞானிகளும் வியக்கத்தக்க வகையில் அணைகளைக் கட்டுகின்றன. இந்த அணைகள் சுமார் மூன்றிலிருந்து ஐந்து அடி உயரமும் நூறிலிருந்து இருநூறு அடி நீளமும் உடையவை. இவை தமக்கு உணவுகளாக மரப்பட்டைகள் இளந்தளிர்கள், பசுமையான கிளைகள், நீர்த்தாவரங்கள், தண்டுகள், கிழங்குகள் என்பனவற்றை உண்ணும். விரோதிகளின் தொல்லைகளில் இருந்து தம்மைப் பாதுகாத்து ஆணும் பெண்ணுமாக சேர்ந்து வாழவே இவை நீர்த்தேக்கங்களை அமைத்து அவற்றின் மேல் உறுதியான வீடுகளைக் கட்டுகின்றன. தமது உளி போன்ற முதன்மைப் பற்க ளால் மரங்களைக் கொறித்து விழுத்தி கிளைகள், தளிர்களைத் தமது உண வாக்கி அடி மரத்தைத் துண்டுகளாக நறுக்கி உருட்டிச் சென்று நதியின் குறுக்கே அணையிட்டு அவற்றின் மேல் மரக்குற்றிகள் கற்களை அடுக்கி கோபுரம் போன்ற வீடுகளைஅமைத்து களிமண்ணால் வெளிப் பூச்சும் பூசுகின்றன. இவ்வீடுகள் எஸ்கிமோவரின் இக்ளு என்ற பனி வீடுகளைப் போல காட்சியளிக்கும். குளிர் காலத்துக்கான உணவுகள் வீடுகளின் நீர் மட்டத்தின் அடியில் சேமித்து வைக்கப்படும். பெண் பீவர் ஓர் ஈற்றில் 4,5 குட்டிகள் வரை ஈனும். பீவரின் உளி போன்ற முன்பற்கள் உறுதியானவை. விரைவில் வளர்பவை. இதனால் அவற்றை அன்றாடம் மரங்களைக் கொறித்தே சரிசெய்து கொள்கின்றன. இல்லையேல் இவை அளவுக்கு மிஞ்சி நீண்டு வளர்ந்து தொல்லை கொடுக்க ஆரம்பிக்கும்.

## பந்திக்கு முந்தும்; படைக்குப் பிந்தும்

பந்திக்கு முந்து; படைக்குப் பிந்து. என்ற சொற்றொடர் இன்று சிறுவர் முதல் பெரியோர் வரை. ஆண்கள், பெண்கள், படித்தவர், பாமரர் என்ற வேறுபாடின்றி அனைவரும் நன்கு தெரிந்து வைத்திருக்கின்ற நடைமுறையில் அதிகம் வழக்கத்திலுள்ள பழமொழியாகும். திருமண வீடுகளிலும், அன்னதான நிகழ்வுகளிலும், நண்பர்களிடையே இரகசியமாக பரிமாறப்படும் பொன்மொழியும் இதுதான்.

"மற்றையோர் என்ன நினைத்தாலும் சரி, சாப்பாட்டின் பந்திக்கு முதலிலேயே சென்று விட வேண்டும். எமது கௌரவத்தைப் பெரிதாகக் கருதி நாம் தயங்கினால் பாதிப்பு எமக்குத் தான். நாம் எதிர்பார்ப்பதற்கு மாறாக அடுத்த பந்திக்கு அதிக நேரம் எடுக்கலாம். உணவின் தரம் குறையலாம். சாம்பார், பாயாசம் என்பவை வெந்நீராற் பெருக்கப்படலாம். சாப்பாடு கிடைக்காமலும் போய் விடலாம். இவற்றைத் தவிர்ப்பதற்கு ஒரே வழி பந்திக்கு முந்துவதுதான்" இப்படி பந்திக்குப் பிந்திய சந்தர்ப்பங்களில் தமக்கு நேர்ந்த கசப்பான அனுபவங்களை வைத்துக் கொண்டு இந்தப் பழமொழிக்கான காரண காரியங்களை நகைச் சுவையாகவும் பொருத்தமாகவும் பலர் கூறுவதுண்டு. மேலோட்டமாகப் பார்க்கின்றபோது நடைமுறைக்குப் பொருத்தமான, அன்றாட வாழ்க்கைக்கு இயைந்த உண்மையொன்றையே இந்தப் பழமொழி உள்ளடக்கியதாகத் தோன்றும். ஆனால் ஆழமாக சிந்திப்பின் தமிழ் பண்பாட்டின் அடித் தளத்தையே இது ஆட்டங் காணச் செய்வது புலனாகிறது.

சோறு கண்ட இடம் சொர்க்கமென்று இருப்பது தமிழரின் குறிக்கோளா? நாட்டைக் கைப்பற்றவரும் எதிரியை எதிர்த்துப் போரிட்டு விரட்டியடிக்காமல் வயிறாற உண்டு மகிழ்வதுதான் தமிழரின் இலட்சியமா? இல்லை என்றால் உண்மையாக இது பழமொழியன்று. ஒரு விடுகதையாகவே அமைய வேண்டும்.

பந்திக்கு முந்தும்; படைக்கும் பிந்தும். அது எது? என்பதுதான். இந்த விடுகதையின் சரியான வடிவம். இந்த விடுகதையின் விடை வலதுகை என்று அமையும்.

உணவு உண்பதற்கு அதாவது பந்தியில் அமர்ந்து எமது வலது கையையே முதன்மையாகப் பயன்படுத்தி உணவை உண்ணுகிறோம். வலது கை பந்திக்கும் முந்துகிறது. முற்காலத்தில் அம்பு வில் கொண்டே தமிழர் போரிட்டனர். அப்போது வில்லை வளைத்து அம்பை நாணிற் பொருத்தி பின்னோக்கி இழுத்தே எய்தனர். நாணைப் பின் நோக்கி இழுப்பது வலது கையின் வேலை. படைக்கு பிந்தும் என்பது வலது கையைப் பின்னால் இழுப்பதையே குறிக்கும்.

ஆதலால் பந்திக்கு முந்துவதும், படைக்குப் பிந்துவதும் வலது கை தானே! விடுகதைகள் மக்கள் மத்தியில் வாய்மொழியாக வழங்கி வருபவை. காலப்போக்கில் சொற்களிலும் அமைப்பிலும் மாறுதல் ஏற்படுவது இயல்பு. இந்த விடுகதைக்கும் இதே கதிதான் நேர்ந்தது என்கின்றனர் சில தமிழ் அறிஞர்கள்.



*மன்னார்...*

பயணமானார். மன்னார் மாவட்டச் செயலகத்துக்கென அமைக்கப்பட்ட கட்டடத்தை தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நேற்று மு.ப. 10 மணிக்குத் திறந்து வைத்தார். இந்த நிகழ்வின் போதே காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் பதாகைகளையும் கறுப்பு கொடிகளையும் கைகளில் ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தலைமை அமைச்சர் மன்னார் வருவதை அறிந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மன்னார் மாவட்ட செயலகத்துக்கு முன்பாக கவனவீர்ப்பை ஆரம்பித்தனர். காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகள் குறித்து உரிய பதிலை வழங்குமாறும், உறவுகளைத் தம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கோரிக்கை முன்வைத்தும் அவர்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டோரை பார்த்தவாறு மாவட்டச் செயலகத்தின் உள்ளே சென்ற ரணில், கட்டடத்தைத் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டார். பின்னர் அங்கிருந்து புறப்படும்போது மாவட்டச் செயலகத்தின் பின்புறக் கதவால் வெளியேறி யாழ்ப்பாணத்துக்குப் பயணமானார். (வ-4, 56)

## மரணஅறிவித்தல்

### செல்வி சுப்பிரமணியம் தேவிசரஸ்வதி

(ஓய்வு பெற்ற உப அதிபர், கிளி/அக்கராயன் மகாவித்தியாலயம்)



யாழ். சிறுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சுப்பிரமணியம் தேவிசரஸ்வதி (17.05.2017) புதன்கிழமை அதிகாலை அகால மரணமானார்

அன்னார் காலஞ்சென்ற வே.சுப்பிரமணியம் (ஆசிரியர்) மாணிக்கம் (கனடா) தம்பதியரின் அன்புப் புதல்வியும் கமலாதேவி (படவரைஞர், சுவிஸ்), சாரதாதேவி (ஆசிரியை, சுவிஸ்), சத்தியதேவி (ஆசிரியை, கனடா), Dr.ராஜேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் கனகநாயகம் (பப்பு, சுவிஸ்).லோகநாதன் (கனடா), லோகன் கணபதிப்பிள்ளை (கனடா- Maikam - Councillor) ஆகியோரின்அன்பு மைத்துனியும் சண்முகநாதன் காலஞ்சென்ற இராமநாதன் ஆகியோரின் மருமகளும் திருமதி மனோன்மணி பொன்னுத்துரை (கனடா), விஸ்வலிங்கம், கந்தையா ஆகியோரின் பெறாமகளும் பிரவீன், பிரதீப், விஷாலி, விஷால், பிரதாப், கீர்த்திகா, வினோத் ஆகியோரின் அன்பு பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.05.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சிறுப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சிறுப்பிட்டிமத்தி,
நீர்வேலி**

**தகவல்:
குடும்பத்தினர்.
0776539224**

## வேலணை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

பதிவு இல J/1606 பதிவுத்திகதி 11.04.1972

### கூறுவிலை கோரல்

எமது சங்கத்திற்கு சொந்தமான பின்வரும் சொத்துக்கள் விற்பனை செய்யப்படவுள்ளன. இவற்றை கொள்வனவு செய்ய விரும்புவோர் அலுவலக நேரத்தில் நேரடியாக பார்வையிட்டு 05.06.2017 ஆம் திகதிக்கு முன்னதாக தங்களது கூறுவிலைகளை கிடைக்கக்கூடியவாறு தனித்தனியே ஒவ்வொரு சொத்துக்களுக்கும் கூறுவிலை குறிப்பிட்டு தலைவர் வேலணை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் எனும் முகவரிக்கு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கூறுவிலை கோரல் எனத் தலைப்பிட்டு நேரிலோ அல்லது பதிவுத்தபால் மூலமோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

சொத்து விவரம் வருமாறு

1. இருசக்கர உழவு இயந்திரம் பெட்டியுடன் NPHP - 1627
2. மோட்டார் சைக்கிள் YAMAHA 90 - 500 - 2675
3. லான்மாஸ்ரர் பெட்டி தனி

குறிப்பு: மீளளிக்கப்படாத கேள்வி வைப்புத் தொகை 500/= செலுத்தி விண்ணப்ப படிவத்தினை தலைமை அலுவலகத்தில் கடமை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்
வேலணை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்
முதலாம் வட்டாரம்
வேலணை கிழக்கு,
வேலணை.

(C 29869) (14)

## PROJECT OFFICER – 1 POSITION (MALE / FEMALE)

Base station : Mullaitivu
Contract period : Immediate to November, 2017
(may be extended)

PARCIC is looking for a suitable person as a Project Officer in Mullaitivu.

**Essential Qualifications & Experience**

- Age below 35.
- Degree holder or with 3 passes in GCE A/L.
- 3-4 years experience in similar capacity with particular focus on work shops/training sessions.
- Good analytical skills and computer literacy in Micro soft Office.
- Strong interpersonal and liaison skills with the ability to network with diverse stakeholders.
- Good command of written and spoken English with fluency in Tamil.
- Ability to work independently using own initiative within the scope of responsibilities.
- Ability and willingness to travel to all parts of the country.

Please note:

- Closing date for applications will be 26th May 2017
- The contract may be renewed depending on the project budget allocation as well as the applicant's work per formance.
- Please send in your application together with the names of two non-related referees to;

Regional Director,
PARCIC
No28, Temple Road,
Jaffna
021 222 7897 or slproject1@parcic.org
Only applicants selected for the interview will be contacted.

(cs 4099) (13)

1985ம் ஆண்டிலிருந்து இன்று வரையான
தனித்துவமிக்கதொரு பயிற்சி நிலையம்

## *யாழ்.* கலாலயா *பயிற்சியகம்*

விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)



**மகளிருக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!**



✌ *கேக் ஐசிங்* – றோயல், Parchment, Frosting, Fondant, Whipping Cream Icing, மாச்சீனி மலர்கள். (Sugar Flowers).

✌ *உணவு தயாரித்தல்* – உணவு வகைகள், 6 வகையான Cakes, Cup Cake மற்றும் பீஸா, சிற்றுண்டிகள் குளிர்பானங்கள், ஐஸ் கிறீம், புடிங் தயாரித்தல்.



✌ *கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்*
40 வகையான கொண்டைகள் போடுதல், முடி அயன் செய்தல், முடி சுருட்டுதல், Hair Colouring, முடி வெட்டுதல், Hair Perming.



✌ FACIALS *(முக அழகுக்கலை)*
Pedicure, Manicure, Nail Art, கண் புருவம் சீராக்குதல் (Eye Brow Threading), தேவையற்ற முடிகளைஅகற்றுதல் (Waxing)

✌ BRIDAL DRESSINGS
*(மணப்பெண் அலங்காரங்கள்)* இந்து, கிறிஸ்தவ இஸ்லாம் மணப்பெண் அலங்காரமும் Modern, சுவர்க்காஸ், சிங்கப்பூர் குஜராத்தி, மடிசார், சிங்கள முறையிலான சேலை அணியும் முறைகள்.

**பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**

✌ *பிளவுஸ், சாறி பிளவுஸ், சுரிதார்,* மற்றும் மகளிருக்கான ஆடைகள் தைக்கும் கிழமைநாள் தையல் பயிற்சிகள்.



பயிற்சிகள் யாவும் பலவருட அனுபவமிக்க எமது ஆசிரியைகளினால் சிறந்த முறையில் பயிற்றுவிக்கப்படும்!

கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம் 24-05-2017
புதன் காலை 10.00 மணி
சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 27-05-2017
சனி காலை 10.00 மணி

மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.
-இயக்குநர்-

Guru

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி சந்திரபூரணி
பூபாலபிள்ளை**

(திதி. திருதியை
28.05.2017)

**தோற்றம்
13.10.1947**

**மறைவு
20.05.2015**

வளர்த்தெடுத்து அறிவூட்டி ஆளாக்கி வைத்துவிட்டு
அவசரமாய் ஏன் அம்மா அவனிவிட்டு சென்றீர்கள்
ஆண்டுகள் இரண்டென்ன ஆயிரம் தான் கடந்தாலும்
ஆறாது எம் இதயம்

**கலைமகள் வீதி,
நல்லூர்.**

**குடும்பத்தினர்.**

## ஓராண்டு நினைவஞ்சலி



### அமரர் அரியேந்திரன் அஜந்தன்

பிறப்பு 29.08.1980 இறப்பு 30.05.2016

நீ இறந்து விட்டாய் என்று ஓராண்டு இன்று
ஆனால் நீ இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறாய்
எங்கள் இதயங்களில் என்றும்
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !

குடும்பத்தினர் ,077 288 1016

## தேவை

யாழ் நகரில் உள்ள ஹோட்டல் வேலைக்கு ஆள்கள் தேவை.

1. நிர்வாக திறமையுள்ள காசாளர் (தங்கி நின்று வேலை செய்பவர்) தேவை. (ஆண்கள் மட்டும்)

ஹோட்டல் றொலெக்ஸ்
077 907 9888

## மரண அறிவித்தல்



### திருமதி மகாலக்சுமி செல்வரட்ணம்

கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி மகாலக்சுமி செல்வரட்ணம் (17.05.2017) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வரட் ணத்தின் (செல்வம் Motor Works, கோண்டாவில்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பொன்னையா-சின்னம்மா தம்பதியரின் பாசமிகுமகளும் காலஞ்சென்றவர்களான செல்லப்பா தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்றவர்களான அரியரட்ணம், இராஜரட்ணம், திருஞானம் மற்றும் குணரத் தினம், கணேசரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜெகத்ஜெனன் (UK), விலாசினி, இன்பா (USA), ரசிகா ஆகியோரின் பாசமிகு தாயும் கலா (UK), பஞ்சரட்ணம் (Manipay Rice Mill), Dr.சிவகுமாரன் (USA), இராசகுலேந் திரன் ஆகியோரின் மாமியும் சங்கீத், துஷிதா, சிவானுஜா, பிரகலாத்(Cargills Bank), ராகவன், ரதீஷ், சுஜாந்தி காலஞ்சென்ற இஷானி ஆகி யோரின் பேர்த்தியும் அபர்ணா, கீர்த்தனா, ஆறியன் ஆகியோரின் பூட்டியும் சரஸ்வதி, ஜெயமணி காலஞ்சென்றவர்களான மகேஸ் வரி, கணநாதன் மற்றும் வாலை ஆனந்தன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.05.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மானிப்பாய் தெற்கு, மானிப்பாய்
பஞ்சரட்ணம் (மருமகன்)

## மரணஅறிவித்தல்

### அம்பலவாணர் சின்னம்மா



இணுவில் கிழக்கை பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் சின் னம்மா நேற்று (19.05.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன் னையா தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற அம்பலவாணரின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற அப்புத்துரை, செல்வ நாயகம், கண்மணிஅம்மா, இராமநாதன், சண்முகம், பத் மநாதன் ஆகியோரின் சகோதரியும் கௌரி மனோகரி, கதிர்காமநாதன், காலஞ்சென்ற ரதிதேவி,பரமதாசன்,திரு மால் ஆகியோரின் பாசமிகு தாயாரும் பாஸ்கரன் ,சித்தீஸ் வரி, சுகுமார், உதயராணி,உமாதாரணி ஆகியோரின் அன்பு மாமியாரும் சுஜீதன், சிவைஸ்ணவி, கோகுலன், ஜெனனி, துவாரகா,சாயிதரன், சாயிகரன், நர்மதா, பிரி யங்கன், ஆர்த்திகன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஓவியாவின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.05.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் இணுவில் கிழக்கு காரைகால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் , உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும் . .

தகவல்:
குடும்பத்தினர்.

## மரணஅறிவித்தல்

### திருமதி பரிமளகாந்தி பாலசுந்தரம்



அளவெட்டி பெருமாக்கடவையை பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கு, பொற்பதி வீதியை வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி பரிமள காந்தி பாலசுந்தரம் (18.05.2017) வியாழக்கிழமை இரவு காலமா னார்.

அன்னார் காலஞ்சென்றவர்க ளான பொன்னம்பலம் மாசிலாமணி தம்பதியரின் அன்பு புதல்வியும் காலஞ்சென்றவர்களான முருகேசு சிவக்கொழுந்து தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற பால சுந்தரம் (சிறாப்பர்) அவர்களின் அன்பு மனைவியும் கேதீஸ்வ ரன் (கொக்குவில்), கணேஸ்வரன்(ஜேர்மனி) ஆகியோரின் அன்புத்தாயாரும் ஆனந்தி (கொக்குவில்), வசந்தா(ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் மிதுனா ஸ்ரீபிரசாத் (லண் டன்), அபிராம்(யாழ்.பல்கலைக்கழகம்), ரகுராம் (கொக்குவில் இந்துக்கல்லூரி க.பொ.த சாதாரண தரம் 2017) கஜானன்(ஜேர் மனி),கஜானி(ஜேர்மனி) ஆகியோரின் பேர்த்தியும் சரஸ்வின் (லண்டன்)அவர்களின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.05.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

183, பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

தகவல்:
பா. கேதீஸ்வரன் (மகன்)

# நன்றி நவிலலும் 45 ஆவது நினைவு நாள் அழைப்பும்

மண்ணில் 01 . 01 . 1975 — விண்ணில் 07 . 04 . 2017



மண்ணில் 27 . 09 . 1981 — விண்ணில் 07 . 04 . 2017



### குணதாசன் கிறிஸ்ரி யோசப் (அமலன்)

### கிறிஸ்ரி யோசப் மாக்கிறெட்றோஸ் சுகந்தி (சுகந்தி)

கடந்த 07.04.2017 அன்று இறைவன் பாதம் அடைந்த கிறிஸ்ரி யோசப் -கிறிஸ்ரி யோசப் மாக்கிறெட்றோஸ் சுகந்தி ஆகியோரின் இறப்புச் செய்தி கேட்டு உடன் அவ்விடம் வந்து உதவிகள் பல புரிந்து துயர் பகிர்ந்து கொண்ட அனைவருக்கும் எம் இதயம் நிறைந்த நன்றிகள் .

மேலும் எமது இல்லத்திற்கு வருகை தந்து இவர்களின் ஆத்ம சாந்திக்காக செபித்து ஆறுதல் கூறிய யாழ். மறை மாவட்ட ஆயர் அதி வந்தனைக்குரிய மேதகு யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை இவர்களுக்கும் உடன் வருகை தந்து இறுதித் திருப்பலி வரையும் எம்முடன் கூட இருந்து எல்லா ஒழுங்குகளையும் மேற் கொண்டு எமக்கு ஆறுதல் கூறிய எமது ஆலய பங்குத்தந்தை அருட்பணி ஜோதிநாதன் அடிகளாருக்கும் எமது இல்லம் வந்து இறுதி நிகழ்விலும் இரங்கற் திருப்பலியிலும் கலந்து கொண்டு எமக்கு ஆறுதல் கூறி நின்ற அருட்பணியாளர்கள், அருட்சகோதரிகள், லங்கா சித்த ஆயுள்வேத கல்லூரி விரிவுரையாளர்கள்,மாணவர்கள்,பாட சாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வி அதிகாரிகள் அயல் ஊர் மக்கள், பிற இட ஆலய மக்கள், சகல துறை வர்த்தக உரிமையாளர்கள், ஊழி யர்கள்,உறவுகள்,நண்பர்கள், அரசியல் பிரமுகர்கள், அரச, அரச சார்பற்ற நிறுவன உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள்.

மற்றும் பதாகைகள், துண்டுபிரசுரங்கள் வெளியிட்டோர், மலர்வளையம் சாத்தியோர், அஞ்சலி உரை நிகழ்த்தியோர், உள் நாட்டிலும் ,வெளிநாட்டிலும் இருந்து தொலை பேசி ஊடாகவும் எம் துயரில் தம் தோழமையை பகிர்ந்து கொண்ட அனைவருக்கும் மேலும் வெளிநாட்டில் இருந்து பண உதவி புரிந்தோர் இவர்களுடைய சிறார்களின் பெயரில் வங்கி பண வைப்புக்கள் மேற் கொண்டோர் அனைவருக்கும் எமது நன்றிகள்.

நாளை (21.05.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெறும் திருப்பலியில் கலந்து ஆத்மசாந்திக்காக செ[illegible]வும் அன்று மதியம் எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

குடும்பத்தினர்.

டா[illegible] பிரமணியம் வீதி, சுன்னாகம்.

# ஐரோ. நாடாளுமன்ற முன்றிலில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

கொழும்பு, மே 20
முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நேற்றுமுன்தினம் வியாழக் கிழமை ஸ்ராஸ்பூர்க் ஐரோப்பிய பாராளு மன்ற முன்றிலில் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை நடை பெற்றது.
இந்த நிகழ்வில் நூற்றுக்கணக்கான மக்கள் உணர்வெழுச்சியுடன் கலந்து கொண்டனர்.
பிரத்தியேகமாக அமைக்கப்பட்டிருந்த நினைவுக் கல்லின் முன்னிலையில் நினைவுச் சுடர் ஏற்றப்பட்டு மலர் வணக் கமும் செலுத்தப்பட்டது.
இலங்கை அரசினால் தொடர்ந்து நடத் தப்பட்டு வரும் தமிழின அழிப்பைத் தடுத்து நிறுத்தி நீதியைப் பெற்றுத் தரக் கோரியும், இனப்படுகொலைக்குப் பன் னாட்டு விசாரணையை முன்னெடுக்க வலியுறுத்தியும் ஐரோப்பிய ஆலோச னைச் சபையின் பொதுச் செயலரிடம் மனு கையளிக்கப்பட்டது. (த)




## 10 வருடங்கள் சட்டவிரோதமாக நீர் பெற்ற பொலிஸ் நிலையம்

*ஒன்றரை இலட்ச ரூபா தண்டம் விதிப்பு*

கொழும்பு, மே 20
கடந்த 10 வருடங்களாகச் சட்டவிரோதமாக நீர் பெற்று வந்த இங்கிரிய பொலிஸ் நிலையம் நீர் வழங்கல் வடி காலமைப்புச் சபையின் பண்டாரகம பிரதேச பொறியி யலாளர் அலுவலகம் நடத்திய திடீர்ச் சோதனையின் போது பிடிபட்டுள்ளது.
இது குறித்து நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்குக் கிடைத்த இரகசியத் தகவலொன்றின் பேரிலேயே அதி ரடிச் சோதனை நடத்தப்பட்டது. சபையின் பிரதான நீர்க் குழாயிலிருந்து மூன்று குழாய்கள் மூலம் இங்கிரிய பொலிஸ் நிலையத்துக்கும் அதன் அருகில் இருக்கும் புதிய கட்டடமொன்றுக்கும் நீர் பெறப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.
இந்தச் சோதனையின் பின் இங்கிரிய பொலிஸ் நிலை யத்துக்கு ஒன்றரை இலட்சம் ரூபா அபராதம் விதிக்கப் பட்ட பின் சட்டபூர்வ இணைப்பு கொடுக்கப்பட்டது. இந் தப் பொலிஸ் நிலையத்தில் 50 பொலிஸார் பணி புரிந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-4)

## மீண்டும்...

வழக்கமான பணியில் ஈடுபட்டிருந்தனர். அணியில் நால்வர் இருந்தனர்.
நள்ளிரவு 12.30 மணியளவில் அவர்கள் ஏ-9 வீதியில் கச்சார் வெளிப் பகுதியில் தரித்து நின்று வாகனச் சோதனையில் ஈடுபட்டிருந் தனர்.
அப்போது அவர்களுக்குப் பின்புறமாக, தொட ருந்துப் பாதையின் மறுபக்கத்தில் உள்ள பனை வடலிப் பற்றைக்குள் இருந்து பொலி ஸாரை நோக்கித் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட் டது. 50 மீற்றருக்கும் குறைவான தூரத்தில் இருந்து சூடு நடத்தப்பட்டது. அடுத்தடுத்து மூன்று குண்டுகள் தீர்க்கப்பட்டன. அவற்றில் ஒரு குண்டு, தொடருந்து சமிக்ஞை கம்பிகள் ஒருங்கிணைப்புப் பெட்டியைத் தாக்கியது. அதில் குண்டு துளைத்த அடையாளம் உள் ளது.
துப்பாக்கிச் சூட்டை அடுத்து தம்மைச் சுதாக ரித்துக்கொண்ட பொலிஸார் உடனடியாகப் பதில் தாக்குதல் நடத்தினர். தம்மிடம் இருந்த பிஸ்ரல் ரக துப்பாக்கியால் திருப்பிச் சுட்டனர். மாறி மாறி நடத்தப்பட்ட இந்தத் துப்பாக்கிச் சூட்டில் எவருக்கும் காயங்களோ பாதிப்போ ஏற்படவில்லை. பதில் தாக்குதல் நடத்தியப டியே பொலிஸார் தமது சுற்றுக்காவல் வாக னத்தையும் கைவிட்டுவிட்டு பளைப் பொலிஸ் நிலையத்திற்குத் திரும்பிவிட்டனர். பொலி ஸாரை நோக்கிச் சுட்டவர் அங்கிருந்து தப்பி யோடிவிட்டார்.

*பதற்றம் பரபரப்பு*

நள்ளிரவு வேளை, பதுங்கியிருந்து பொலி ஸார் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட தகவல் அறிந்ததும் பொலிஸார் மற்றும் படையினரி டம் பதற்றமும் பரபரப்பும் தொற்றிக்கொண் டது. சம்பவ இடத்துக்கு விரைந்தனர். தேடு தல்கள், சோதனைகள் முடுக்கிவிடப்பட்டன. அந்த இடத்தில் ஆயுதம் தாங்கிய படையினர், அதிரடிப் படையினரின் பாதுகாப்புப் போடப் பட்டது.
காலையில் வெளிச்சம் வந்ததன் பின்னர் மேலதிக விசாரணை அணிகள் சம்பவ இடத் துக்கு வந்தன. பொலிஸ் தடயவியல் அணி கள் தடயங்களைத் தேடும் பணியில் ஈடுபட் டன. வெடிப் பொருள்களைக் கண்டறியும் கருவிகள் தருவிக்கப்பட்டும் சோதனை இடம் பெற்றது. மோப்ப நாய் கொண்டுவரப்பட்டு தாக்குதலாளி தப்பிச் சென்ற பாதையைக் கண்டறிய முயற்சிக்கப்பட்டது.
தாக்குதலாளியால் தவறவிடப்பட்ட துப்பாக்கிப் பாகம் ஒன்றை முகர்ந்து தாக்குதலாளியை மோப்பம் பிடித்த நாய், சுமார் ஒரு மைல் தூரம் வரை மோப்பம் பிடித்துச் சென்ற பின் னர் மேற்கொண்டு நகராமல் நின்றுவிட்டது. அந்த இடத்தில் இருந்து தாக்குதலாளி வாக னத்தில் ஏறித் தப்பிச் சென்றிருக்கலாம் என்று கருதப்படுகிறது. இதனால் ஒன்றுக்கும் மேற் பட்டவர்கள் தாக்குதலில் தொடர்புபட்டிருக்க லாம் என்றும் கருதப்படுகிறது.
சம்பவ இடத்திலிருந்து துப்பாக்கியின் மேல் பகுதி (சிலேற்) ஒன்று பொலிஸாரால் மீட்கப் பட்டது. தாக்குதலாளியை நாய் மோப்பம் பிடிப்பதற்கு அந்தத் துப்பாக்கிப் பாகமே பயன் படுத்தப்பட்டது. துப்பாக்கிச் சன்னங்களின் வெற்றுக் கோதுகள் சிலவும் அங்கிருந்து தட வியல் பகுதியினரால் மீட்கப்பட்டன.
"சம்பவம் இடம்பெற்ற பகுதியில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. விரிவான விசார ணைகள் முடியும்வரை இது தொடர்பில் குறிப்பிட்டு எதனையும் கூறமுடியாதுள்ளது. சந்தேகநபர் ரி56 ரக துப்பாக்கியைப் பாவித் திருக்கலாம் எனக் கருதப்படுகிறது. அங்கி ருந்து மீட்கப்பட்ட தடயப் பொருள்கள் இரசாய னப் பகுப்பாய்வுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள் ளன. பொதுமக்களின் நாளாந்த செயற்பாட் டுக்குப் பாதிப்பு ஏற்படாதவாறு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. மோப்பநாய்கள் மூலமும் சோதனை மேற்கொள்ளப்பட்டது" என்று சம்பவம் பற்றித் உதயன் பத்திரிகையி டம் தெரிவித்தார் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஸ் வெலிக்கன்ன.
(உ-ய- 6,35, 101, 106)

## இராணுவம்...

இராணுவத்தினரும் பொலிஸாரும் அந்த இடத்தில் குவிக்கப்பட்டனர். முகமாலை தொடக் கம் கச்சார்வெளிச் சந்தி வரையான, ஏ-9 சாலையின் தெற்குப்புறம் சுற்றிவளைக்கப் பட்டது. முகமாலை, கிளாலி, இந்திராபுரம், வேம்பொடுகேணி, கச்சார்வெளி, செல்வபுரம் போன்ற கிராமங்களைச் சுற்றி படையினர் ஆயுதங்களுடன் அரண் அமைத்து நின்றனர். முகமாலை தொடக்கம் கச்சார்வெளி வரை யான 3 கிலோமீற்றர் நீள தூரமும் முகமாலை தொடக்கம் கிளாலி வரையான 3 கிலோ மீற் றர் தூர அகலமும் கொண்ட பகுதி சுற்றி வளைப்புக்குள் சிக்கிக் கொண்டது என்று தெரிவிக்கப்பட்டது.
அதிகாலை இருள் சூழ்ந்த நேரத்திலேயே மக் களை வீடுகளை விட்டு வெளியேற வேண் டாம் என்று பொலிஸார் வாகனங்களில் ஒலி பெருக்கி மூலம் அறிவித்தனர். சுற்றிவளைப் புக்கான காரணம் தெரியாமல் மக்கள் பதற்ற மடைந்தனர். கிராமங்களைவிட்டு வெளி யேற முயன்ற பாடசாலை மாணவர்கள், அரச பணியாளர்கள், நோயாளர்கள் உட்பட எவரையும் படையினர் அனுமதிக்கவில்லை. இதனால் மாணவர்களின் கல்வி பாதிக்கப் பட்டது.
வீடு வீடாகக் கடும் தேடுதல் நடத்தப்பட்டது. எனினும் எவரும் கைது செய்யப்படவில்லை. காலை 10 மணிக்குப் பின்னரே அந்தக் கிரா மங்களைச் சேர்ந்த மக்கள் அங்கிருந்து வெளி யேறக்கூடியதாக இருந்தது.
இருப்பினும் மாலை வரையில் அந்தப் பகுதி எங்கும் இராணுவத்தினர் ஆயுதங்களுடன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தனர். அதற்குள் இருந்த குட்டைகளில் தாக்குதலாளிகள் ஆயு தங்களை எறிந்துவிட்டுச் சென்றிருக்கலாம் என்கிற சந்தேகத்தில் சுழியோடிகளைக் கொண்டு அவற்றிலும் தேடுதல் இடம்பெற் றது. எனினும் ஆயுதங்கள் எவையும் அகப்ப டவில்லை. (உ-ய-6,9,35,101, 106)

## தமிழருக்குத்...

உறவினர்கள் ஆகியோரும் இதில் கலந்து கொண்டு அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று குறித்த அமைப்பின் ஏற் பாட்டாளர் அருட்தந்தை மா. சக்திவேல் தெரி வித்தார்.
போர் முடிவடைந்து 8 வருடங்கள் கடந்துள் ளபோதிலும் தமிழ் மக்களின் பிரச்சினை களுக்குத் தீர்வு காணப்படவில்லை. அரசியல் தீர்வு முயற்சி இழுத்தடிப்பில் உள்ளது. அடிப் படை விடயங்களான காணிப்பிரச்சினை தீர்க்கப்படாதுள்ளது. அரசியல் கைதிகளும் சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். காணாமற்போனவர்கள் தொடர்பான அலுவ லகம் அமைக்கப்படவில்லை. இவற்றைச் செய்யுமாறு வலியுறுத்தியே குறித்த போராட் டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் கூறினார். (த-4)

## இனவாத...

உடன் நிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டு மென அமைச்சர் ரிஷாத் பதியுதீன் கோரிக்கை விடுத்தார்.
மன்னார் மாவட்டச் செயலக நிர்வாகக் கட்ட டத்தை நேற்றுக் காலை தலைமை அமைச் சர் ரணில் விக்கிரமசிங்க திறந்து வைத்தார். அந்த நிகழ்விலேயே அமைச்சர் இவ்வாறு வலியுறுத்தினார்.
அவர் அங்கு மேலும் கூறியதாவது:
பௌத்த மத குருமார்களில் ஒரு சிலர் அரச தலைவர் போலவும், தலைமை அமைச்சர் போலவும், பாதுகாப்பு அமைச்சர் போலவும் செயற்பட்டு வருகின்றனர். அதுமட்டுமன்றி அவர்கள் சட்டத்தை மதிப்பதாகவுமில்லை. இவர்களின் செயற்பாடுகளைப் பார்க்கும் போது வேதனையாக இருக்கின்றது. எல்லோ ருக்கும் ஒரே சட்டம் என்பது இந்த நாட்டில் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
இனவாதத்தை வளர்த்து அதன் மூலம் பிரச் சினைகளை உருவாக்கி கூட்டரசை வீட்டுக்கு அனுப்பவேண்டுமென்ற ஒரு சதியின் பின்ன ணியிலேயே இவ்வாறான செயற்பாடுகள் அரங்கேற்றப்பட்டு வருகின்றன. அரச தலை வரதும், தலைமை அமைச்சரதும் நல்ல தன் மையை இவர்கள் தமது நடவடிக்கைக்குச் சாதகமாகப் பயன்படுத்துகின்றனர்.
30ஆண்டுகாலப் போரிலிருந்து விடுபட்டு நிம்மதியாக வாழும் இனங்களுக்கிடையிலே மீண்டும் குரோதத்தை தோற்றுவித்து, இந்த நாட்டில் இரத்த ஆற்றை மீண்டும் ஓடச்செய்து நாட்டை குட்டிச்சுவராக்க ஒரு சிறு கூட்டம் நினைக்கின்றது. வெளிநாடுகளில் கையேந் தும் நாடாக இலங்கையை ஆக்கவேண்டும் என்பதுவும் இவர்களின் இலக்கு. இவர்களின் செயற்பாடு நாளுக்குநாள் மோசமாக இருக் கின்றது. இதற்கு மைத்திரியும் ரணிலும் அனு மதிக்கக்கூடாது.
தேர்தல், பொதுத்தேர்தல் காலங்களில் மன் னார் மாவட்டத்துக்குப் பயணம் செய்து எமக்கு வழங்கிய வாக்குறுதிகளை அரச தலைவர் இப்போது நிறைவேற்றி வருகின்றார். அந்த வகையில் 300 மில்லியன் ரூபா செலவில் பொது நிர்வாக அமைச்சினூடாக இந்தப் பிரமாண் டமான கட்டடத்தை எமக்கு வழங்கியுள்ளார். ஜி.எஸ்.பி. பிளஸ் நமது நாட்டில் கிடைப்பதற்கு ரணிலின் பங்களிப்பு மகத்தானது. வர்த்தகத் துறையில் வெளிநாட்டு முதலீடுகளை ஊக்கு விப்பதில் அவர் அரும்பாடுபடுகின்றார்.
தமிழ், முஸ்லிம், சிங்களம் என்ற பேதமின்றி மூன்று சமூகங்களும் மன்னாரில் வாழும் சூழல் உருவாகியுள்ளது. எனினும், அரசியல் இருப்புக்காக இனவாதத்தை மூலதனமாகக் கொண்டு செயற்படுபவர்கள் மக்களின் நலன் கருதி தமது நடவடிக்கைகளைக் கைவிட வேண்டும்.
சிறுபான்மை மக்கள் நிம்மதி இழந்து தவிக் கின்றனர். காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சுமார் 89 நாள்கள் தொடர்ச்சியாக வீதிகளில் போராட்டம் நடத்துகின்றனர். இன்று காலை அமைச்சர் சாகலவும் நானும் அந்த இடத்திற்குச் சென்றோம். அத்துடன் பட்டதாரி களின் வேலையில்லாத் திண்டாட்டம் பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. இவற் றுக்கும் ரணில் மைத்திரியுடன் இணைந்து தீர்வு காண்பார் என நம்புகின்றேன்.
மன்னார் மாவட்டத்திலே சிலாவத்துறை, முள் ளிக்குளம் கிராம மக்களின் வாழ்விடங்கள் கடற்படையினராலும், இராணுவத்தினரா லும் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. இவற்றை அந்த மக்களிடம் கையளிக்க தலைமை அமைச்சர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றார்.
இந்த நிகழ்வில் அமைச்சர்களான சாகல ரத் நாயக்க, டி.எம்.சுவாமிநாதன், வஜிர அபே வர்தன, நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சார்ள்ஸ் நிர்மல நாதன், காதர் மஸ்தான், பொலிஸ்மா அதிபர், வடக்கு மாகாண அமைச்சர் பா.டெனீஸ்வ ரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் ரிப் கான் பதியுதீன் மற்றும் அரச உயர் அதிகாரி கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (த-4)

## சொல்லப்படும்...

கொடியைக் கட்டிய மஹாசேன் பலகாயவின் குழப்பும் முயற்சி. இப்படிச் செய்வதன் மூலம் மீண்டும் வடக்கில் ஆயுதப் போர் ஏற்பட்டதா கக் காட்டி தெற்கில் அரசியல் செய்யும் உத்தி.
2. முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தில் உரையாற்றிய வடக்கு மாகாண முதலமைச் சர் சி.வி.விக்னேஸ்வரன், வடக்கு கிழக்கில் ஒரு லட்சத்து 50 ஆயிரம் படையினர் ஏன் போர் முடிந்த பின்னரும் வைக்கப்பட்டிருக் கின்றனர் என்று கேள்வி எழுப்பினார். அவர் களை வெளியேறுமாறு வலியுறுத்தி மக்கள் போராட்டங்கள் வெடிக்கும் காலம் வெகு தூரத்தில் இல்லை என்றும் தெரிவித்திருந் தார். அவரது கருத்துக்கு எதிர்ப்பை வெளியி டும் வகையில் புலனாய்வாளர்கள் செய்த வேலையாக இது இருக்கும்.
3. மணல் மற்றும் கஞ்சா கடத்துபவர்களுக் குப் பளைப் பொலிஸாரின் அண்மைக் கால தீவிர நடவடிக்கைகள் இடைஞ்சலாக இருக் கின்றன. இரவுச் சுற்றுக் காவலை அவர்கள் அதிகரித்ததன் மூலம் கடத்தலைச் செய்ய முடியாதிருப்பதால் பொலிஸாரை அவர்களது நிலையத்திற்குள் முடக்குவதற்காகக் கடத்தல் காரர்களால் செய்யப்பட்டதாக இது இருக்கும்.
4. வேறு யாரையோ இலக்கு வைத்துப் பதுங் கியிருந்த தாக்குதலாளிகள் இடக்கு முடக்கா கப் பொலிஸாரிடம் அகப்பட்டுக் கொண்டதால் தப்பியோடுவதற்காகச் சுட்டுவிட்டுச் சென்றி ருக்கலாம்.
5. அவ்வப்போது புலிகள் இயக்கம் மீளுரு வாக்கம் பெறுவதாகச் சொல்லப்படும் வழக்க மான கதைகளில் ஒன்றாக இருக்கலாம்.
6. போர் முடிந்து 8 வருடங்களாகியும் அரசு ஒரு தீர்வைத் தராமல் இழுத்தடிப்பதால் ஆத் திரமடைந்த இளைஞர்கள் மீண்டும் ஆயுதம் தூக்கியிருக்கலாம்.
இந்தக் காரணங்களில் எந்த ஒன்றையும் பொலிஸாரோ இராணுவத்தினரோ உத்தி யோகபூர்வமாக உறுதிப்படுத்தவில்லை. விசாரணைகளின் பின்னரே காரணத்தை அறிய முடியும் என்றே அவர்கள் தெரிவிக்கின் றனர். (உ)

# நக்கீரன் சம்பியன்

கரணவாய், மே 20
பருத்தித்துறை பிரதேச இளைஞர் கழகங்களுக்கு இடையிலான வலைப்பந்தாட்டத்தில் பெண்கள் பிரிவில் அல்வாய் நக்கீரன் விளையாட்டுக் கழகம் கிண்ணம் வென்றது.
பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் அண்மையில் இந்த இறுதியாட்டம் இடம் பெற்றது.
அல்வாய் நக்கீரன் விளையாட்டுக் கழகமும் வல்வை விளையாட்டுக் கழகமும் மோதின. நக்கீரன் அணி சம்பியனானது. (ம-108)





# அல்வாய் நண்பர்கள் வென்றது கிண்ணம்

கரணவாய், மே 20
பருத்தித்துறை பிரதேச இளைஞர் கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான கால்பந்தாட்டத்தில் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.
பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் அண்மையில் இந்த இறுதியாட்டம் இடம்பெற்றது.
வல்வை ஆதிசக்தி விளையாட்டுக் கழகமும் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகமும் ஒன்றையொன்று எதிர்த்துப் பலப்பரீட்சை நடத்தின. கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி.
இரண்டாம் பாதியிலும் மாற்றங்கள் ஏற்படவில்லை. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது அல்வாய் நண்பர்கள் அணி.
பரிசளிப்பு நிகழ்வுக்குத் தலைமை விருந்தினராக சிவன் அறக்கட்டளையின் நிறுவுனர் வேலாயுதம் கணேஸ்வரன் கலந்துகொண்டார். (ம-108)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், மே 20
நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் சில இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்று இடம் பெறவுள்ளன. பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் அண்ணா சிலையடி இளைஞர் கழகத்தை எதிர்த்து திருக்குமரன் விளையாட்டுக் கழகமும், மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சண்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ம-108)

# றேஞ்சர்ஸ், சரஸ்வதி அணிகள் முன்னேற்றம்

யாழ்ப்பாணம், மே 20
நவிண்டில் கலைமதியின் கால்பந்தாட்டத் தொடரில் றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் மற்றும் சரஸ்வதி விளையாட்டுக் கழகம் என்பன அடுத்த சுற்றுக்கு முன்னேறின.
யாழ்ப்பாணம் மாவட்ட ரீதியிலான இந்தத் தொடரின் ஆட்டங்கள் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகமும் கரவெட்டி நவசக்தி விளையாட்டுக் கழகமும் பலப் பரீட்சை நடத்தின. நிர்ண யிக்கப்பட்ட நிமிடங்களில் இரு அணிகளாலும் கோலெதுவும் பதிவாகவில்லை. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது றேஞ்சர்ஸ் அணி.
தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்ப்பாணம் ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து புத்தூர் சரஸ்வதி விளையாட்டுக் கழகம் மோதியது. ஆட்டத்தின் 10ஆவது நிமிடத்தில் சரஸ்வதியின் முதல் கோல் பதிவானது. வேறெந்த மாற்றமும் ஏற்படவில்லை. முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டது சரஸ்வதி அணி. (ம-108)







# ஜெகமீட்பர் சம்பியனானது

யாழ்ப்பாணம், மே 20
பூநகரி கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான தொடரில் ஜெகமீட்பர் அணி சம்பியனானது.
வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக் கழக மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் ஜெகமீட்பர் அணியை எதிர்த்து வேரவில் கலைமகள் அணி மோதியது. 6:0 என்ற கோல் கணக்கில் ஜெகமீட்பர் அணி சம்பியனானது. (ம-23)

# யைட்ஸ் - சென்றலைட்ஸ் நாளை எதிர்த்து பலப் பரீட்சை

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்திவரும் 'ஜொலிஸ்ரார்' வெற்றிக்கிண்ணத்துக்கான துடுப்பாட்டத் தொடரின் இறுதியாட்டம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நாளை இடம்பெறவுள்ளது. இதில் ஹாட்லியைட்ஸ் அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் அணி மோதவுள்ளது. (ம-23)

# இலங்கை கிரிக்கெட் சபையின் இரண்டு ஆட்டங்கள் இன்று

யாழ்ப்பாணம், மே 20
இலங்கை கிரிக்கெட் சபை நடத்தும் மூன்றாம் பிரிவு அணிகளுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் சில இன்று நடைபெறவுள்ளன.
வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் ஜொனியன்ஸ் அணியை எதிர்த்து நியூஸ்ரார் அணி மோதவுள்ளது. ஸ்ரான்லிக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் சென்றலைட்ஸ் அணியை எதிர்த்து ஸ்ரான்லி அணி மோதவுள்ளது. (ம-23)

Sri Lanka Cricket

# பொம்மர்ஸ் - விண்மீன் இறுதியில் பலப்பரீட்சை

கரணவாய், மே 20
பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்திய கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டமும் பரிசளிப்பு நிகழ்வும் இன்று இடம்பெறவுள்ளன.
ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்று மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வதிரி பொம்மர்ஸ் அணியை எதிர்த்து பலாலி விண்மீன் அணி மோதவுள்ளது. கழகத் தலைவர் ஜே.அரவிந்தன் தலைமையில் இடம்பெறும் பரிசளிப்பு நிகழ்வில் தலைமை விருந்தினராக தமிழ்த்தேசிய மக்கள் முன்னணித்தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கலந்து கொள்ளவுள்ளார். (ம-108)




# சாவகச்சேரி இந்து. இறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், மே 20

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 20 வயதுக்குட்பட்ட எல்லேயில் பெண்கள் பிரிவில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற அரையிறுதியாட்டத்தில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணி 10 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சங்கவி 4 ஓட்டங்களையும், ரக்சிகா 2 ஓட்டங்களையும், கிரியா 2 ஓட்டங்களையும், கலைமகள், கனுஜா இருவரும் தலா ஒவ்வொரு ஓட்டத்தையும் பெற்றனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி நிர்ணயிக்கப்பட்ட 40 பந்துகளில் 10 இலக்குகளை இழந்து 8 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 2 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. அதிகபட்சமாக சீலா 4 ஓட்டங்களையும், தயா 3 ஓட்டங்களையும் அஜிதா ஒரு ஓட்டத்தையும் பெற்றனர். (ம-422)

# இலங்கை அணித் தெரிவில் யாழ்ப்பாண வீரர்கள் மூவர்

யாழ்ப்பாணம், மே 20

இலங்கை 23 வயதுப்பரிவு கால்பந்தாட்ட அணிக்கான இறுதிக்கட்ட அணித்தெரிவு கொழும்பு சிற்றி லீக் மைதானத்தில் இன்றும் நாளையும் இடம்பெறவுள்ளது. இதில் யாழ்ப்பாண மாவட்ட வீரர்கள் மூவர் இடம்பெற்றுள்ளனர்.

குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணியின் மயூரன், நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணியின் மதிவதனன், யங்ஹென்றிஸ் அணியின் தனேஸ் ஆகிய மூவருமே இன்றைய இறுதிக்கட்டத் தெரிவில் இடம்பெற்றுள்ளனர். (ம-23)

# சாவகச்சேரி இந்து. இறுதியாட்டத்தில்

வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான எல்லே தொடரில், 20 வயது ஆண்கள் பிரிவில் போராடி வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதிபெற்றது சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணி.

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்று மாலை இடம்பெற்ற இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து நெல்லியடி மத்திய கல்லூரி அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நெல்லியடி மத்திய கல்லூரி அணி 40 பந்துகளில் 12 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக கிசோக் 3 ஓட்டங்களையும், துவாரகன், கஜன் இருவரும் தலா 2 ஓட்டங்களையும், அனோசன், சாருஜன், ஜெயந்தன், சஞ்சீவன், சிந்துஜன் ஐவரும் தலா ஓர் ஓட்டத்தை யும் பெற்றனர்.

13 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குக் களமிறங்கிய சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணி நிர்ணயிக்கப்பட்ட 40 பந்துகளில் 12 ஓட்டங்களைப் பெற ஆட்டம் சமநிலையில் முடிந்தது. வெற்றிதோல்வி காண்பதற்காக இரு அணிகளுக்கும் தலா 10 பந்துகள் மேலதிக வாய்ப்பாக வழங்கப்பட்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நெல்லியடி மத்திய கல்லூரி அணி 2 ஓட்டங்களைப் பெற்றது. ஜனார்த்தன், வனிதன் இருவரும் தலா ஓர் ஓட்டத்தைப் பெற்றக் கொடுத்தனர். பதிலுக்குக் களமிறங்கிய சாவகச்சேரி இந்துக் கல்லூரி கடைசிப் பந்தில் வைத்து ஆட்டத்தை வென்றது. மைத்திரேன் 2 ஓட்டங்களையும், ஜசிந்தன் ஓர் ஓட்டத்தையும் பெற்றனர். (ம-23)




# உரும்பிராய் சைவத்தமிழ் வித்தி. இறுதியாட்டத்துக்கு தகுதிபெற்றது

யாழ்ப்பாணம், மே 20

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான எல்லேயில் 20 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய அணி இறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற அரையிறுதியாட்டத்தில் உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய அணியை எதிர்த்து புதுக்குளம் மகா வித்தியாலய அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய அணி 9 இலக்குகளை இழந்து 10 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக கஸ்மினா 3 ஓட்டங்களையும், ஜோகினி 3 ஓட்டங்களையும், நிரூஜா 2 ஓட்டங்களையும், வேணுகா, டர்சிகா இருவரும் தலா ஓர் ஓட்டத்தையும் பெற்றனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலய அணி நிர்ணயிக்கப்பட்ட 40 பந்துகளில் 3 ஓட்டங்களை மாத்திரம் பெற்றதை அடுத்து 7 ஓட்டங்களால் வெற்றி பெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய அணி. அதிகபட்சமாக பிருந்தா 2 ஓட்டங்களைப் பெற்றார்.

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம், சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணிகளுக்கு இடையிலான இறுதியாட்டம் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இன்று இடம் பெறவுள்ளது. (ம-422-108)

# புதுக்குளம் மகா வித்தி. இறுதிக்கு முன்னேற்றம்

யாழ்ப்பாணம், மே 20

வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான எல்லேயில் புதுக்குளம் மகா வித்தியாலய அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிமைதானத்தில் நேற்று மாலை இடம்பெற்ற முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் வரணி மத்திய கல்லூரி அணியை எதிர்த்து வவுனியாபுதுக்குளம்மகாவித்தியாலய அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய வவுனியாபுதுக்குளம்மகாவித்தியாலய அணி 40 பந்துகளில் 13 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக நிதர்சன் 4 ஓட்டங்களையும், பவிதரன், கலையரசன் இருவரும் தலா 2 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்குக் களமிறங்கிய வரணி மத்திய கல்லூரி அணி 2 ஓட்டங்களை மட்டுமே பெற்றதை அடுத்து 11 ஓட்டங்களால் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதிபெற்றது புதுக்குளம் மகா வித்தியாலயம். (ம-422-23)

மினி உலகக்கிண்ணத்தில்

# மீண்டும் வருகிறார் டினேஸ் கார்திக்

மினி உலகக்கிண்ணத் தொடர் இங்கிலாந்தில் அடுத்த மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கவுள்ள நிலையில் இந்தத் தொடரில் கலந்துகொள்ளவுள்ள இந்திய அணியில் தமிழக வீரர் டினேஸ் கார்திக் இடம்பிடித்தார்.

இந்திய அணி ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த அணியில் இளம் துடுப்பாட்ட வீரர் மனீஸ் பான்டே இடம்பிடித்திருந்தார். அவர் காயம் காரணமாக விலகியதை அடுத்து பதில் வீரராகவே டினேஸ் கார்திக் சேர்க்கப்பட்டார்.

டோனியைத் தவிர வேறெந்த இலக்குக் காப்பாளர்களும் இந்திய அணியில் இல்லை என்று குற்றம் சாட்டப்பட்டிருந்த நிலையில் டினேஸ் கார்திக் இடம்பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)



லக்கின வாசனா

இம்முறை தனயோகம் உங்களுடையதா?

| திகதி | வெற்றிவாரம் | வர்ணம் |
|---|---|---|
| 19.05.2017 | 2134 | சிவப்பு |

விருச்சிகம்

03 41 49 61

ஞாயிற்றுக்கிழமை வெற்றிப்பொதி
ரூ 5, 127, 036/=

2017.05.21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஊதா நிற டிக்கட்டுக்களாகும்.
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து
1919 இற்கு அனுப்பவும்.

**SB TRAVELS & TOURS (Pvt)Ltd.**

**இங்கு சகல நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்களை மிகக்குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.**

இந்தியாவிற்கான விமான பயணச்சீட்டுக்களை சென்னை Srilankan Airlines 31000/= Air India 29000/=

இற்கும் மதுரை Srilankan Airlines 30500/= திருச்சி Srilankan Airlines 31800/= (7 Days before) மற்றும் மலேசியா, பாங்கொங், தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கான வீசாக்களையும் செய்துதரப்படும்.

BUDJECT AIRLINES SPICEJET, AIR ASIA,FLY DUBAI, AIR-ARABIA ஆகிய விமானங்களில் குறைந்த கட்டணங்களில் செல்வ தற்கு இன்றே நாடுங்கள். Sb travels and tours no 212, Kasthuriyar Road, Jaffna. 021 222 9555, 222 8555/ 076 691 1080/83

Branch - No 166, Temple Road, Nallur Jaffna.
021 222 7666/ 076 691 1081/82

அத்துடன் இங்கு AIR TICKETING ACADEMY வகுப்புக்களும் 2 மாத பயிற்சிகளும் நடைபெறுகின்றன. 021 222 7111, 222 7666

**SB Travels and Tours**
No 216, Kasthuriyar Road, Jaffna.
(AJA IN 2135)(14)

# கேள்வி அறிவித்தல்

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

கீழ்காணும் உணவகத்தை நடத்துவதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பதிவாளர் பணிமனையில் 31.05.2017 ஆம் திகதி மு.ப. 10.00 மணிவரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| இல. | உணவகங்கள் |
|---|---|
| 01. | பாலசிங்கம் ஆண்கள் விடுதி உணவகம் - திருநெல்வேலி |
| 02. | ஆனந்தகுமாரசுவாமி பெண்கள் விடுதி உணவகம் - திருநெல்வேலி |

மீளளிக்கப்படும் கேள்விவைப்பு பணமாக ரூபா 2000/= உம் மீளளிக்கப்படாத பணமாக ரூபா 500/= உம் தனித்தனியாக யாழ்ப்பாணப் பழ்கலைக்கழக மக்கள் வங்கி கணக்கு இலக்கம் 162-1001-60000-880 இற்கு செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டினை சமர்ப்பித்து கேள்விப் படிவங்களை இப்பல்கலைக்கழக நலச்சேவைகள் கிளையிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட கேள்விப் படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் உணவகத்தின் பெயர் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

மேலதிக விவரங்களை அலுவலக நேரங்களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நலச்சேவைகள் கிளையிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**பதிவாளர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்** **20.05.2017**
(29874)(10)

# வேலணை பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் (வ-து)

பதிவு இல:- J/1606 பதிவுத் திகதி:- 11.04.1972

## பதவி வெற்றிடங்கள் நிரப்புதல்

கீழ்க் குறிப்பிடப்பட்ட பதவிகளுக்கு ஆள்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01) பதவி - காவலாளி**
சம்பளக் குறியீடு :- 315 / 17
சம்பள அளவுத்திட்டம் :- 12800-100x10-110x10-14900 (13 / 2015 இன்படி)
வெற்றிட எண்ணிக்கை :- 01
அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்
அ) 8ஆம் தர கல்விச் சான்றிதழும் நல்ல தேகாரோக்கியமும் இருத்தல் வேண்டும்.

**02) பதவி - காரியாலய அலுவலர்**
சம்பளக் குறியீடு :- 317/17
சம்பளக் அளவுத்திட்டம் :- 12800-100x10-110x10-14900 (13/2015 இன்படி)
வெற்றிட எண்ணிக்கை :- 01
அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்
8ஆம் தர கல்விச் சான்றிதழ்
வயதெல்லை :- 18 -45 வரை
விண்ணப்ப முடிவுதிகதி :- 05.06.2017

குறிப்பு :- மேற்குறிப்பிட்ட பதவிக்கு கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்று நிருபத்துக்கு அமைவான படிகள் வழங்கப்படும்.
(சுற்று நிருபம் :- 02/2012,05 / 2015,04/2017)

வயதெல்லை கூட்டுறவுச் சங்க பணியாளர்களுக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் தங்கள் விண்ணப்பங்களை தங்கள் சங்கத்தின் ஊடாக அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் யாவும் சுயமாகத் தயாரித்து **தலைவர்/பொதுமுகாமையாளர், வேலணை பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், முதலாம் வட்டாரம், வேலணை கிழக்கு, வேலணை** என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்க வேண்டும்.

**தலைவர்,**
**பனை தென்ன வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், வேலணை**
(29869)(11.17)

**உடனடி வேலைவாய்ப்பு**

யாழ்ப்பாணத்தில் பிரபல தளபாட மற்றும் மின் உபகரண நிறுவனத்தில் 25.000/= இற்கு மேல் சம்பளம் பெறும் உடனடி வேலைவாய்ப்பு வெற்றிடம் பெண்கள் மட்டும்.
வயது : 18 - 28
நேரம் : காலை 10மணி முதல் 12 மணி வரை
காவம் : 2017.05.24

**ROYAL MARKETING SERVICE**
No.64, Abubakkar Road, Jaffna.
077 388 3879/ 077 763 0214

**இலங்கை இளங்கலைஞர் மன்றம் வழங்கும் 38 ஆவது**

# இசை விழா

இடம் இளங்கலைஞர் மன்றக் கலா மண்டபம், சட்டநாதர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
காலம் 19.20.21.05.2017 (வெள்ளி, சனி, ஞாயிறு)

***20.05.2017 சனிக்கிழமை இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள்***

தலைவர் :- **திரு. இ.குகதாசன்** (பொருளாளர், ஆட்சிக்குழு, இளங்கலைஞர் மன்றம்)
முதன்மை விருந்தினர் - பேராசிரியர் **என். சண்முகலிங்கன்** (முன்னாள் துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்)

***மாலை 4.00 மணி - மாங்கல இசை***
தவில் நாதஸ்வர இளங் கலைஞர்கள்
நாதஸ்வரம் - கி.ஆரூரன்
- யோ.கஜானன்
தவில் - க.வத்சலன்
- அ.சிவகரன்

***மாலை 4.30 மணி - மாங்கல விளக்கேற்றல்***
இறைவணக்கம் - செல்வி. க.மயூரதி
மன்றக் கீதம் - இளங்கலைஞர் மன்ற மாணவர்கள்

***மாலை 4.45 மணி - குழுப்பாடல்***
வழங்குவோர் நல்லூர் சாரங்கம் இசைக்கல்லூரி மாணவர்கள்
வயலின் - செல்வி பிரிசில்லா ஜோர்ச்
மிருதங்கம் - செல்வன் ஞா.வசந்

***மாலை 5.05 மணி வீணையிசை***
வீணை - திருமதி மஞ்சுசீதா ஜெயதீசன்
மிருதங்கம் - திரு. ந.சதீஷ்குமார்

***மாலை 5.35 மணி - பாட்டு***
பாட்டு - செல்வி எஸ். மதுராங்கி
வயலின் - திரு.கா.குகபரன்
மிருதங்கம் - செல்வன் ஞா.வசந்

***மாலை 6.05 மணி - இசையரங்கம்***
பாட்டு - திரு.அருணந்தி ஆரூரன்
வயலின் - திரு.எஸ்.திபாகரன்
மிருதங்கம் - திரு.என்.மாதவன்
கெஞ்சிரா - பிரம்மஸ்ரீ என்.சிவசுந்தரசர்மா
முகர்சிங் - திரு.சி.செந்தூரன்

***7.05 மணி - முதன்மை விருந்தினர் உரை***

***7.15 மணி - "வள்ளி திருமணம்"***
இசை நாடகம், வழங்குவோர் நாட்டார் வழக்கியற் கழகத்தினர்

***8.30 மணி இரண்டாம் நாள் இசை விழா நிறைவு***

***அன்பர்கள், ஆதரவாளர்கள், கலையார்வலர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.***

**- மன்றத்தினர் -**

## மரணஅறிவித்தல்

### திருமதி பாலசுப்பிரமணியம் பரமேஸ்வரி (பேப்பர் ஆச்சி)



**தோற்றம்.10.05.1940**
**மறைவு.19.05.2017**

காரைநகர் பலகாட்டை பிறப்பிட மாகவும் முத்துமாரி அம்மன் வீதி, திருநெல்வேலியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பாலசுப்பிரமணியம் பரமேஸ்வரி நேற்று (19.05.2017) வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை கதிராசி தம்பதியரின் அன்பு மகளும் முருகேசு இலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியத்தின் (சேனாதி) அன்பு மனைவியும் யோகேஸ்வரன் , வத்சலாதேவி, யோகலட்சுமி, தவமலர், விக்கினேஸ்வரன் ஆகியோரின் அன்பு தாயாரும் பிறேமா, அருள்ராசசிங்கம்,உத்தமசீலன்,ஜெயக்குமார்,முகுந்தினி ஆகியோரின் மாமியாரும் மதுரா ,அங்கஜன், அனுஜன்,வவித்திரா,டிலக்சனா,கேதீஸ்வரன், ரம்மியா, சகாணா, சாகித்தியா, ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.05.2017) சனிக்கிழமை அவரின் இல்லத்தில் இடம் பெற்று நண்பகல் 12.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் .இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**6 /8 முத்துமாரி அம்மன் கோயில் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

கோவிசெத
சீட்டிழுப்பு வாரம்: 138
வர்ணம் : செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 19.05.2017
அடுத்த ஞாயிறுக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ: 87,061,940/-
ஆங்கில எழுத்து மற்றும் இலக்கங்கள்
T 13 24 31 42
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>JY என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது நேரடி அழைப்பு 1919

வெள்ளிக்கிழமை
நியத ஜய
NIYATHA JAYA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம்: 566 வர்ணம்: நீலம்
சீட்டிழுப்பு திகதி: 19.05.2017
வெற்றி இலக்கங்கள்
07 21 46 54 X
அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 27,549,027/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>JY என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது நேரடி அழைப்பு 1919

# மும்பை - புனே இறுதியில் நாளை




ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற இரண்டாவது தகுதி ஆட்டத்தில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்றது மும்பை. மும்பையும் கொல்கத்தாவும் இந்த ஆட்டத்தில் மோதின. நாணயச் சுழற்சியில் வென்று களத்தடுப்பைத் தீர்மானித்தது மும்பை. முதலில் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா ஆரம்பம் முதல் தடுமாற்றத்தை எதிர்கொண்டு 107 ஓட்டங்களில் சுருண்டது. கரண் சர்மா 4 இலக்குகளையும், பும்ரா 3 இலக்குகளையும், ஜோன்சன் 2 இலக்குகளையும், மலிங்க ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய மும்பை அணி 33 பந்துகள் மீதமிருக்க 4 இலக்குகளை மட்டும் இழந்து வெற்றிபெற்றது. குருனல் பாண்டியா 45 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார்.

புனே அணி ஏற்கனவே இறுதிக்குத்தகுதி பெற்றுள்ளது. இந்த நிலையில் ஹைதராபாத் மைதானத்தில் மும்பை - புனே அணிகள் நாளை கிண்ணத்துக்காக மோதவுள்ளன. (ம)

**அறைகள் வாடகைக்குண்டு**
தொழில் புரியும் மற்றும் கல்வி கற்கும் பெண்களுக்கு உணவு மற்றும் சகல வசதிகளுடன் கூடிய அறைகள் யாழ் மத்தியில் மாத வாடகைக்கு உண்டு.
076 919 8259

**பணிநிலை வேண்டுகை**
யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள நிறுவனத்திற்கு,
1. Accounting Staff (MS Office, MS Excel, Quick Book) தெரிந்தவர்கள் தேவை.
மேலதிக விவரங்களுக்கு,
KINGS ELECTRONICS (PVT) LTD
NO.12, POINTPETRO ROAD,
JAFFNA. 021 454 6699

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.05.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.